# மனித உரிமைகள்

## கல்விக் கைநூல்

சட்டக் கல்விக்கும் உதவிக்குமமான செயற்திட்டம்
இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்
இல.04, ஜயரத்ன மாவத்தை
கொழும்பு 05.
தொலைபேசி இல. : 584380

# மனித உரிமைகள்

## கல்விக் கைநூல்

சட்டக் கல்விக்கும் உதவிக்குமான செயற்திட்டம்
இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்
இல.04, ஜயரத்ன வழி
கொழும்பு 05.

முதல் பதிப்பு : 1997

வெளியீடு : சட்டக் கல்விக்கும்
உதவிக்குமான செயற்திட்டம்
இனங்களுக்கிடையே நீதிக்கும்
சமத்துவத்துக்குமான இயக்கம்

அச்சுப் பதிப்பு : பீ.எம்.பீ. கூட்டிணைப்பு

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | | மனித உரிமைகள் என்பதன் கருத்து யாது? | 5 |
| | 1) | மனித உரிமைகள் கருப்பொருளாதல் | 5 |
| | 2) | இயற்கை உரிமைகள் அரசின் பொறுப்பாக | 6 |
| | 3) | இலகுவான ஜனநாயக சமூகம் | 7 |
| 3. | 1) | வளர்ச்சியுற்ற சமூகத்தின் ஜனநாயகம் | 7 |
| 4. | | மனிதனுக்கு இன்னுமொரு பிரதான உரிமை கிடைத்தமை | 8 |
| | 1) | சமூக ஒப்பந்தங்களும் மனித உரிமைகளும் | 8 - 9 |
| 5. | | மனித உரிமை கருத்தியல் வரைவு பிரதியாதல் | 9 |
| 6. | | இரண்டாவது உலக யுத்த முடிவும் ஐ. நா சபையின் ஆரம்பமும் | 10 |
| 7. | | சர்வதேச சங்கம் | 11 |
| 8. | | ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவுகள் | |
| | 1) | பொதுச் சபை | 11 - 14 |
| | 2) | பாதுகாப்புச் சபை | |
| | 3) | பொருளாதார சமூக சபை | |
| | 4) | நம்பிக்கை பொறுப்புச் சபை | |
| | 5) | சர்வதேச நீதிமன்றம் | |
| | 6) | செயலகம் | |
| 9. | | மனித உரிமைகள் மற்றும் ஐ.நா. அமைப்பு | 14 |
| 10. | | ஐ. நா சபையின் மனித உரிமைகள் தொடர்பான சாசனம் | 14 - 15 |
| | 1) | தொனிப் பொருள் | |
| | 2) | அறிக்கையில் உள்ளடங்கியுள்ள மனித உரிமைகளை சட்டத்தின் முன் அதிகாரப்படுத்தல் | |
| 11. | | மனித உரிமைகள் தொடர்பான மசோதா | 15 - 16 |
| | 1) | ஐ. நாவின் மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு | |
| 12. | | ஒப்பந்தத்தின் கீழ் செயற்படும் குழுக்கள் | 16 - 17 |
| | 1) | மனித உரிமைகள் தொடர்பான குழு | |
| | 2) | பொருளாதார சமூக கலாசார உரிமைகள் தொடர்பான குழு | |
| | 3) | இன வேறுபாடுகளை களையும் குழு | |
| 13. | | மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வேறு சர்வதேச அமைப்புகள் | 17 |
| 14. | | ஐ. நாவின் அகதிகள் தொடர்பான ஆணைக்குழு | 18 |

15. விஷேட உரிமைகள் 18 - 22

1) சிறுவர் உரிமைகள்
2) பெண்கள் உரிமைகள்
3) அபிவிருத்திக்கான உரிமைகள்
4) சர்வதேச மனிதாபிமானம் தொடர்பான சட்டம்
5) சிறுபான்மை உரிமைகள்

16. இன சமத்துவமின்மை மற்றும் வேறுபாடுகளை களைவது தொடர்பான குழு 22

17. இலங்கையில் மனிதஉரிமைகள் தொடர்பான சட்டம் 23

18. இலங்கையின் இரண்டாவது அரசியலமைப்பு யாப்பு 23

19. 1978 யாப்பில் மனித உரிமைகள் 24 - 27

1) அனைத்து மக்களும் அனுபவிக்கக் கூடிய உரிமைகள்
2) இலங்கைப் பிரஜைகள் மட்டும் அனுபவிக்கக் கூடிய உரிமைகள்

20. இலங்கையில் மனித உரிமைகளுக்குள்ள வரையறைகள் 28

21. மனித உரிமை மீறப்பட்டால் எந்த நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டும் 30

22. மொழி உரிமை 30

23. மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு 31

24. நிர்வாக நடவடிக்கை தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் 33 - 35

1) முறையீடு செய்யும் சந்தர்ப்பங்கள்
2) முறையீடுகள் தொடர்பான விசாரணைகள்
3) முறையீட்டை முன்வைக்கும் முறை
4) விசாரணை நடைபெறும் காலங்கள்

25. இலங்கையில் மனித உரிமை அமைப்புக்களைக் காக்கும் சுயேச்சைக் குழுக்கள் 36 - 38

1) இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம்
2) தனிநபர் உரிமைகள் பாதுகாப்பு முன்னணி
3) சட்ட உதவிகள் மத்திய நிலையம்
4) சட்ட உதவிகள் ஆணைக்குழு
5) கொழும்பு பல்கலைக் கழக மனித உரிமைகள் கல்வி நிலையம்
6) ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் நிலையம்
7) மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான சட்ட அமைப்பு
8) நடேசன் கேந்திரம்.
9) சர்வோதய சட்ட உதவிகள் நிலையம், மனித உரிமைகள் நிறுவனம்

26 மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் 39 - 47

27. பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு 48 - 66

28. சிவில் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு 67 - 102

## மனித உரிமைகள் என்பதன் கருத்து யாது?

மனித உரிமைகள் என்பது மனிதனுக்கு உரியதாகும் இயற்கை உரிமைகளாகும்.

மனிதன் எலும்பு தசைகளினால் உருப்பெற்றதினால், கழிவுகளை அகற்றுவதினால், இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதினால் அவன் உயிரியாக கருதப்படுகின்றான். உயிரியாக இருப்பதனால் அவனுக்கு வாழும் உரிமை உண்டு.

மனிதனின் தொண்டையில் உள்ள குரல்வளையின் அதிர்வினால் ஏற்படும் ஒலி, மனிதனின் பரிணாமத்துடன் மொழியாக மாறியது. மொழியின் காரணமாக மனிதனுக்கு சமூகத்துடன் தகவல்களை பரிமாறிக்கொள்ள முடிந்தது. இதனால் அவன் சமூக விலங்காக மாறினான். இதனால் மனிதனுக்கு கலாசாரம் என்ற அம்சம் உரியதாகியது. இதன் மூலம் சமூகமடைந்த குழுவாக மாறவே அவனால் முடிந்தது. மனசாட்சிக்கு உரிமை கிடைத்து, சமூகத்தில் சமனாகக் கருதப்படவும், கொடூரம், அவமானமின்றி கருதப்படவும் என பல உரிமைகளுக்கு மனிதன் உரியவனானான்.

## மனித உரிமைகள் கருப் பொருளாதல்.

இம்மனித உரிமைகள் ஓர் கருப் பொருளாகியது, 1789ல் இடம்பெற்ற பிரான்ஸிய புரட்சியுடனாகும். அதுவரை மனிதனுக்கு மனித உரிமைகள் உண்டு என ஏற்றுக்கொள்ளப்படாததுடன், மனிதன் மனிதனாகக் கருதப்பட்டது சில நிபந்தனைகளுடனாகும். அடிமை ஒருவனை மனிதன் எனக் கருதாது, பண்டமாகக் கருத உரோமச் சமூகம் பழகியிருந்தது. அதேபோல் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தமையானது மனிதனாகக் கருதப்பட முடியாத இயல்பாக விளங்கியது. இவ்வியல்பை இன்றைய சமூகத்திலும் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட இனத்தை, மதத்தைச் சேர்ந்த நபர், பிற இன மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு தமக்கொப்பான உரிமை உண்டென ஏற்றுக் கொள்ள மறுப்பதனைக் கூறலாம்.

எனினும் பிரான்ஸிய புரட்சியுடன் மனிதன் மனிதனாகக் கருதப்பட நிபந்தனைகள் தேவையற்றது என்பதுடன், மனிதன் மனிதனாகப் பிறப்பதன்

காரணமாக உரிமைகள் அவனுக்குரியன என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இப்புரட்சிக்குக் காரணமாகியது, அக்காலக்கட்டத்தில் வாழ்ந்த ஜோன் லொக், ரூசோ போன்ற அரசியல் அறிஞர்களின் கருத்துக்களும், நடவடிக்கைகளும் என இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## இயற்கை உரிமைகள் அரசின் பொறுப்பாக.

அரசு என்பது சட்டவாக்க உரிமை, சட்டத்தைச் செயற்படுத்தும் உரிமை மற்றும் சட்டத்தை விளக்கும் உரிமை அல்லது யாப்புரிமை, நிறைவேற்றதிகாரம், நீதி ஆகிய அதிகாரங்களைக்கொண்ட அலகாகும்.

அதன் கடமைகளாவன, குறிப்பிட்ட தேச எல்லைக்குள் வாழும் மக்களை நிர்வகித்து நிலையாக வைத்திருப்பதாகும். மனித உரிமைகளைப் போன்று இச்சட்டவாக்கம், சட்ட நிர்வாகம் மற்றும் சட்டங்களை விளக்கும் இலட்சணமானது மனிதனுக்குரித்தான இயற்கையான உரிமைகளாகும்.

உதாரணமாக - ஆதிகால மனிதன் தனது வேட்டை பிரதேசங்களை அடையாளமிட்டு வைத்தான். இது மனிதனின் இயற்கையான சட்டவாக்க உரிமையாகும். அதேபோல் அவ்வேட்டை பிரதேசங்களுக்குள் புதியவரொருவர் பிரவேசித்ததும் அவரை விரட்டி அடித்தான். இது மனிதனின் சட்ட நிர்வாக உரிமையாகும். அதே போல் விரட்டியடித்து தாக்குதல் தொடுப்பதன் மூலம் திருப்தியடைய வேண்டுமா, அல்லது அவனை கொல்ல வேண்டுமா, அல்லது உட்பிரவேசிக்க அனுமதிக்க வேண்டுமா, என்பவற்றைக் கருத்தில் எடுத்தல் மனிதனுக்குரிய அறிவின் காரணமாக உரிமையாகிய சட்ட அதிகாரமாகும். இதன்படி நோக்கின் மனிதனிடம்,

1. மனித உரிமைகள் (இயற்கை உரிமை)
2. சட்டவாக்க அதிகாரம் (அரசியல் அமைப்பு அதிகாரம்)
3. சட்டத்தை செயற்படுத்தும் அதிகாரம் (நிறைவேற்று அதிகாரம்)
4. சட்டத்தை நிரூபிக்கும் அதிகாரம் (நீதிமன்ற அதிகாரம்)

போன்ற நான்கு இயற்கை உரிமைகள் உள்ளதுடன், இவை செயற்படுத்தப்பட்டது, ஒரு குறிப்பிட்ட நபர் பிற நபருக்கெதிராக மேற்கொண்ட பகைமை-

யுடன், இச்சமூகம் உண்மையில் பலமுள்ளவன் வெற்றிபெறும் சமூகமாக அல்லது அநீதிச் சட்டம் அரசாளும் சமூகத்தினுள்ளாகும். இங்கு குறிப்பிடத்-தக்க விசேட காரணம் யாதெனில், இம்மனிதனின் இயற்கையான உரிமைகள் (மனித உரிமைகள்) அனுபவிக்கக் கூடியதாக இருந்தது பலமுள்ளவனுக்கு மட்டுமே.

## இலகுவான ஜனநாயக சமூகம்.

ஆதி காலம் தொடக்கம் தற்கால இலகுவான சமூகம் வரை சமூகம் ஓர் ஒழுங்குக்கு உள்ளாகியது மொழிகள் தோன்றியதுடனாகும். இச்சமூகங்களை உறுதிப்படுத்த தீர்மானங்கள் தேவையாக இருந்ததுடன் இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது, குறிப்பிட்ட சமூகத்தில் வாழ்ந்த அனைத்து உறுப்பினர்களும் ஒன்றாக அளித்த பெரும்பான்மை வாக்குகள் மூலமாகும்.

இம்முறை கிரேக்கத்தில் ஏதென்ஸ் நகரம் தொடக்கம் இந்தியாவின் சாக்ய மற்றும் கோலிய நகரங்கள் வரை காணக்கிடைக்கின்றதென்று வரலாறு கூறுகின்றது. இச்சமூகங்களில் காணக்கிடைக்கும் ஜனநாயகம் இலகுவான நேர்மையான ஜனநாயகமாகக் கருதப்படுகின்றது.

## வளர்ச்சியுற்ற சமூகத்தின் ஜனநாயகம்.

எனினும், சமூகம் கிரமம் கிரமமாக வளர்ச்சியுற்று, தேச எல்லைகளுக்குள் வாழும் அனைத்து மக்களுக்கும், தமக்கும், சமூகத்திற்கும் தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள ஓரிடத்தில் ஒன்று திரள முடியாதிருந்தது. இக்குறைப்பாட்டை நிவர்த்திக்கும் வகையிலான ஒரு முறையாக, தம் பிரதிநிதிகள் உள்ளடங்கிய நிருவனம் ஒன்றை ஸ்தாபித்து அதன் மூலம் அவ்வவ் சமூகங்களை நிர்வகிக்கும் தேவைக் காணப்பட்டது. இவ்வலகு அரசு எனப் பெயரிப்பட்டதுடன், இவ்வாறு அதுவரை இருந்த நிர்வாகி தொடர்பான கருத்தியல்கள் மாற்றப்பட்டு மக்கள், மக்கள் பிரதிநிதி போன்ற கருத்தியல்கள் முன்வைக்கப்பட்டன.

## மனிதனுக்கு இன்னுமொரு பிரதான உரிமை கிடைத்தமை.

இவ்வாறு, மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து நியமித்தல் தொடர்பாக பயன்படுத்திய முறை தேர்தலாக அமைந்தது. பெரும்பான்மை மக்களின் விருப்பத்தைப் பெற்ற நபர் மக்கள் பிரதிநிதியாவதுடன் அவ்வாறு நியமிக்க இருக்கும் அதிகாரம் தேர்தல் அதிகாரமாக மனிதனின் இயற்கை உரிமைக்குள் உள்ளடக்கப்பட்டது. இதன் படி

1. மனித உரிமைகள்
2. அரசியல் அமைப்பு அதிகாரம்
3. நிறைவேற்று அதிகாரம்
4. நீதிமன்ற அதிகாரம்
5. தேர்தல் அதிகாரம்

போன்ற இவ்வுரிமைகள் ஐந்தையும் ஒன்றாகக் கருதின் அவை மனிதனின் மேலாதிக்கமாகக் கருதப்படும்.

## சமூக ஒப்பந்தங்களும் மனித உரிமைகளும்

மேலே குறிப்பிட்டதைப் போன்று சமூக கூட்டமைப்பு, மனிதனாகிய தம்மை நிர்வகிக்க தம்மால் நியமிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் உள்ளடங்கிய அரசென்னும் ஸ்தாபனத்தைக் கட்டியெழுப்பியதுடன், அதில் மக்களும் அரசும் ஒப்பந்தம் செய்துக் கொண்டனர்.

இவ் ஒப்பந்தத்தை சமூக ஒப்பந்தமாகக் கருதியது அரசியல் அறிஞரான ஜோன் லொக் ஆவார். இவ் ஒப்பந்தத்தின் படி மேலே குறிப்பிடப்பட்டுள்ள மக்களின் மேலாதிக்கம் என குறிப்பிடப்படும் உரிமைகளில் ஐந்தில் மூன்று, அதாவது அரசியல் அமைப்பு அதிகாரம், நிறைவேற்று அதிகாரம், நீதிமன்ற அதிகாரம் என்பவற்றை அரசுக்கு வழங்கி தமது இயற்கை உரிமையாகிய மனித உரிமையையும் தேர்தல் அதிகாரத்தையும் மக்கள் தம் வசப்படுத்திக் கொண்டனர்.

கைவிடப்பட்ட உரிமைகளுக்கு மாற்றாக மனித உரிமைகளை பாதுகாப்பும் முக்கிய பொறுப்பு அரசுக்குரியதாகியது. இதன்படி முதல் முறையாக மனித உரிமைகள் தொடர்பான பொறுப்பு உருப்பெற்று முன் வந்ததுடன் அரசு பொறுப்பாளியாக உருப்பெற்றது குறிப்பிடத்தக்கது. இதன்படி அரசியல் அகராதியில் தெளிவாக தெரிதல் அல்லது வெளிப்படுதல் எனும் கருத்தும் உள்ளடங்கியுள்ளது. அதாவது அரசு என்பது மக்கள் பிரதிநிதிகளால் நிரம்புவதால், அவர்களது அனைத்து செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் தெரிந்துக் கொள்ளும் உரிமை மக்களுக்கு உள்ளதென்பதாகும்.

## மனித உரிமை கருத்தியல் வரைவு பிரதியாதல்

மேற்கூறிய முறையில் முன்வந்த மனித உரிமை கருத்தியல் 1789ல் ஏற்பட்ட பிரான்சிய புரட்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட பிரான்சிய அரசியலமைப்பினுள்ளும், அமெரிக்கா புரட்சியுடன் முன்வந்த தோமஸ் ஜெபர்சனினால் வரையப்பட்ட 1776-7-4ல் அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்க சுதந்திர சாசனத்தினுள்ளும், மனித உரிமை உரிமைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதேபோல் பிரித்தானியாவில் சம்மதிக்கப்பட்ட மக்னா காட்டா ஒப்பந்தமும், சிரேஸ்ட சுதந்திர கருத்தியல்வாதியான ஆபிரகாம் லிங்கனினால் முன்வைக்கப்பட்ட சமத்துவம் தொடர்பான கருத்தியலும் மனித உரிமைகளை மேற்கொள்வது தொடர்பாக முக்கிய கடமையாற்றியுள்ளது.

எவ்வாறாயினும் மனித உரிமைகள் எனும் கருத்தியலின் வளர்ச்சி 1945 வரை இல்லாதிருந்ததுடன் 1939ல் ஆரம்பமாகிய இரண்டாவ்து உலக மகா யுத்தத்துடன் நிகழ்ந்த மனித இனம் ஏற்றுக் கொள்ளப்படாத மனித விரோத நடவடிக்கையின் முன் மனித உரிமைகள், கருத்தியலாக மீண்டும் முன்னணிக்கு வந்தது. குறிப்பாக இரண்டாவது உல்க மகா யுத்தத்திற்கு பின்னர் ஜெர்மன் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட யுத்தக் குற்றவாளிகளை விசாரணைசெய்யும் விசேட நீதிமன்றத்தின் முன் தேசிய இறைமைக்கு புறத்தே இருக்கும் கருத்தியலாக மனிதனின் மனித உரிமைகளுக்கு மரியாதை செலுத்தலும், அவற்றைப் பாதுகாத்தலும் முக்கியமென சுட்டிக்காட்டப்பட்டது.

## 2 வது உலக யுத்த முடிவும் ஐ.நா சபையின் ஆரம்பமும்....

1939ல் தொடங்கிய 2வது உலக யுத்த வெற்றியாளர்களாகவும், நேச அணியினராவும் விளங்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ர'யா ஆகியன ஒன்றிணைந்து மீண்டும் உலக யுத்தம் ஒன்று ஏற்படாத வண்ணம் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டனர்.

இப்பேச்சுவார்த்தைகளின் ஆரம்பமாக 1941ல் அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ் வெல்ட் மற்றும் பிரித்தானிய பிரதமர் சர்ச்சில் ஆகியோர் ஒப்பமிட்டனர். அதில் தேசிய அரசின் சுயாதீனத்தன்மை தொடர்பான விளக்கமளிப்பு முதன் முறையாக முன்வைக்கப்பட்டது. இது ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி அவர்களினால் முதன் முதல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

1942 - 1- 1- அன்று ஐ.நா சாசனமொன்றை தயாரிக்க 26 நேச நாடுகள் ஒன்றுபட்டன: இக்கூட்டத்தின் முக்கியத்துவம் யாதெனில் பெயரளவிலான அமைப்பாக விளங்கிய ஐ.நா அமைப்பு இதற்கு பொருத்தமானது என, அமெரிக்க ஜனாதிபதி அவர்கள் யோசனை தெரிவித்ததாகும். 1944ல் பிரித்தானியா, ர'யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் ஒன்றிணைப்புக்கு உள்ளாகியதுடன் அது “டம்பர்டன் எக்ஸ்” கூட்டமர்வு என பிரபல்யம் பெற்றது.

1945 பெப்ரவரி மாதம் பிரித்தானிய பிரதமர், அமெரிக்க ஜனாதிபதி, ர'ய கொம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ஸ்டாலின் ஆகியோர் ர'யாவின் யால்ட்டா நகரத்தில் ஒன்றிணைந்ததுடன் அது “யால்ட்டா” ஒப்பந்தம் என பிரபல்யம் பெற்றது.

இவ் அனைத்து கூட்டுக்களின் பின்னர் 1945 ஜூன் 26ம் திகதி ஐ. நா சாசனம் சம்மதமாகியதுடன் அதற்கென 51 நாடுகள் கையொப்பமிட்டன. அதன் குறிக்கோளாகியது உலக சமாதானம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி எதிர்காலத்தில் மனித குலத்துக்கு தீமை விளைவிக்கும் உலக யுத்தம் தோன்றுவதை விலக்கும் முகமாக செயற்படுவதாகும்.

சாசனத்தின் 2வது பிரிவில் அமைப்பின் கொள்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## சர்வதேச சங்கம்

ஐ. நா அமைப்பின் முன் இருந்த உலக அமைப்பு சர்வதேச சங்கமாகும்.

முதலாவது உலக யுத்தத்துக்கு முன் (1914 - 1918) உலகத்தின் பிரதான இனங்கள் ஒன்றிணைந்து 1919 ஜூன் 28ம் திகதி சர்வதேச சங்கம், பிரித்தானியா, பிரசியா, (ஜேர்மன் உள்ளிட்ட ஒட்டோவா முடியாட்சி) இத்தாலி, ஜப்பான், சீனா, ஸ்விட்சர்லாந்து, நோர்வே, ஸ்பெய்ன் போன்ற நாடுகளின் ஒன்றிணைப்பில் ஸ்தாபிக்கப்பட்டது.

சமாதானத்தை உறுதிப்படுத்தும் வகையில் போதிய திறமை சர்வதேச சங்கத்துக்கு இன்மையால் உலக யுத்தம் ஏற்பட்டதுடன் சர்வதேச சங்கம் இதனால் பயனற்று போனது.

## இறந்தகால பலவீனங்களை களைவதன் மூலம் ஐ. நா. முன்னணியில்...

ஐ. நா அமைப்பு தமது கூட்டான தீர்மானிப்பை மேறக் கொள்ளவும் அவற்றை செயற்படுத்தவும் திறமையான சபைகளை ஏற்படுத்தியுள்ளது. அவையாவன -

### *1) பொதுச் சபை*

ஐ. நா உறுப்பினர்கள் வருடா வருடம் கூடி சபையை நடாத்துவதுடன், இது தொடர்பாக தலைவர், உப தலைவர் உள்ளிட்ட 21 பேர்கள் நியமிக்கப்படுவர். இப்பிரிவின் கீழ் 5 குழுக்கள் செயற்படுகின்றன.

1 பிரதான குழு
2. செயற்பாடுகளை நிரல்படுத்தும் குழு
3. உறுதிப்படுத்தும் குழு
4. மேலதிக குழு
5. சாசன குழு

### *2) பாதுகாப்புச் சபை*

அமெரிக்க நாடுகள், பிரித்தானியா, ர'யா, பிரான்ஸ் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் நிலையான உறுப்பினர்கள் ஐவரினாலும், நிலையற்ற 10 பேரினாலும் பாதுகாப்புச் சபை பூரணப்படுத்தப்பட்டுள்ளது. உலகத்தின் பொலிஸாக பாதுகாப்பு சபையே செயற்படுகின்றது. இச்சபையின் நிரந்தர 5 உறுப்பு நாடுகளுக்கும் விசேட ரத்துரிமை உண்டு.

### *3) பொருளாதார சமூக சபை* (ECOSOC)

54 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபை, ஐ. நா. வின் மிகப் பெரிய சபையாகும். இதன் செயற்பாடுகளாவன.

1. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தல், பொருளாதார, சமூக நிலைமைகளை உயர்த்துதல்.

2. சர்வதேச ரீதியாக பொருளாதார, சமூக மற்றும் சுகாதார சிக்கல்களை தீர்த்தல், கலாசார, கல்வி துறைகளில் சர்வதேச நாடுகளுக்கிடையே சுமுகத்தை ஏற்படுத்தல்.

3. மனிதனின் சுதந்திரத்திற்கும், மனித உரிமைக்கும் மதிப்பளித்தல்.

பொளாதார சமூக சபையின் கீழ் செயற்படும் முக்கிய அமைப்பு ஐ. நா மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுவாகும். அதைவிட, ஐ. நா சாசனத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட விசேட ஸ்தாபனங்கள் 16ம், வருடாந்தம் சபைக்கு அறிக்கை வழங்குதல் வேண்டும். அவையாவன,

ILO - சர்வதேச தொழிலாளர் அமைப்பு

FAO - உணவு, விவசாய அமைப்பு

UNESCO - ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாச்சார அமையம்

WHO - உலக சுகாதாரத் திணைக்களம்

WORLD BANK - உலக வங்கி

IM - சர்வதேச நிதி நிறுவனம்

UNHCR - ஐ. நா.அகதிகள் தொடர்பான ஆணைக்குழு

ESCAP - ஆசிய, பசுபிக் பொருளாதார உறுப்புரிமை ஆணைக்குழு

UNDP - ஐ. நா அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம்

UNEP - ஐ. நா சூழலியல் நிகழ்ச்சி திட்டம்

### *4) நம்பிக்கை பொறுப்புச் சபை -*

Trustee Shp Councile ஐ. நா. சபை செயற்படும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட காலனித்துவ நாடுகளை சுதந்திரம் வரையில் நிர்வகிக்க இச்சபை நிறுவப்பட்டது. இதன் பிரதான நோக்கம், அக் காலனித்துவ நாடுகளை, சுய நிர்வாகம் வரை வளர்ச்சியுறச் செய்வதாகும்.

### *5) சர்வதேச நீதிமன்றம்*

பொதுச் சபை மற்றும் பாதுகாப்புச் சபை ஆகியவற்றினால் நியமிக்கப்படும் நீதிபதிகள் 15 பேரினால் இந் நீதிமன்றம் செயற்படுகின்றது. அவர்கள் தகுதிகளின் அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர். மாறாக நாடுகளின் அடிப்படையில் அல்ல. ஐ. நா சபை அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஏற்படும் பிணக்குகளை தீர்த்தல் இதன் கடமையாகும்.

### *6) செயலகம்*

இச் செயலகம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளதுடன் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்படும் கொள்கைகளை செயற்படுத்துவது இதன் பொறுப்பாகும். இச் செயலகத்தின் பிரதானியாக செயலாளர் ஒருவர் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை நியமிக்கப்படுவார். இவ்வாறு நியமிப்பது பொதுச் சபையின் யோசனையின் கீழ் பாதுகாப்புச் சபையாகும்.

## மனித உரிமைகள் மற்றும் ஐ. நா அமைப்பு

ஐ. நாவின் முக்கிய நோக்கங்களாவன, உலக சமாதானம் மற்றும் பாதுகாப்பை பலப்படுத்துதல் என்பதுடன், இது தொடர்பாக மனித உரிமைகளை பாதுகாக்கும் தேவை, பொருளாதார சமூக சபையை ஸ்தாபிக்க அதிகாரங்களைப் பெற்றுக் கொடுத்த ஐ. நா சாசனத்தின் 55வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐ. நா சபையின் மனித உரிமைகள் தொடர்பான சாசனம்.

மேலே குறிப்பிடப்பட்ட ஐ. நா அமைப்பின் முக்கிய குறிக்கோள்களை பிரயோகப்படுத்த மேற்கொள்ள ஐ. நாவின் பொதுச்சபையினால் 1948 - 12-10ம் திதி ஐ. நா மனித உரிமைகள் தொடர்பான அங்கீகாரம் கிடைத்தது. அத்துடன் மனித உரிமைகள் தொடர்பான கருத்தியல்கள் சர்வதேச சட்டங்களாக மாற்றமடைந்தன. அதன் மூலம் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையின் குறிக்கோள்களாக மனிதனுக்குரிய மரியாதை மற்றும் மனிதனுக்குரிய பிறருக்குரியதாக்க முடியாத சம உரிமைகளை பாதுகாக்கும் முக்கியத்துவம் இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### *தொனிப்பொருள்*

* உலகத்தின் சுதந்திரம், நீதி மற்றும் சமாதானம் என்பவற்றின் தோற்றத்திற்கு அடிப்படையாய் அமைந்துள்ளது, மனிதகுலத்தின் அனைத்து உறுப்பினர்களுக்குரிய மரியாதை மற்றும் அவர்களின் சமமான, பிறருக்குரியதாக்க முடியாத உரிமையாகும்.

* மனித உரிமைகளை கருத்திலெடுக்காததன் காரணமாக, மனித குலம் மிலேச்சத்தனமான பல செயல்களை வரலாற்றில் மேற்கொண்டுள்ளதுடன், பொது மக்களின் உயர் அபிப்பிராயம் யாதெனில் பேச்சு உரிமை, பயமின்றி, கிலேசமின்றி சுதந்திரமாக வாழக்கூடிய உலகத்தை ஏற்படுத்துதலாகும்.

* அழுத்தங்களுக்கெதிராக எழுச்சியுறவும், கிளர்ச்சி செய்யவும் மனிதன்

முயற்சிக்கலாம். அவ்வாறு நிகழ்வதை தவிர்க்க மனித உரிமைகள், சட்ட அதிகாரங்கள் மூலம் பாதுகாக்கப்படல் அவசியம்.

இவ் ஐ. நா.வின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை 30 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் அதை அங்கீகரிக்கும் நடவடிக்கை 48 நாடுகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## அறிக்கையில் உள்ளடங்கியுள்ள மனித உரிமைகளை சட்டத்தின் முன் அதிகாரப்படுத்தல்

ஐ. நாவின் மனித உரிமைகள் அறிக்கைகள், தனியே காகித ஒப்பந்தமாகியதுடன், அது அவ்வவ் நாடுகளின் நீதிமன்றங்கள் மூலம் அதிகாரப்படுத்தும் இயல்பு இன்மை காரணமாக, அவ்வுரிமைகளுக்கு சட்ட அதிகாரங்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக ஐ. நாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தமும் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான ஒப்பந்தமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ் ஒப்பந்தங்கள் இரண்டும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தத்துக்கு இணையான வரைவு (Optional Protocal) , 1966 டிசெம்பர் 16ம் திகதி பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

1976 மார்ச் 23ம் திகதி சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம் 112 நாடுகளினாலும், விருப்புக்குரிய வரைவு பிரதி 66 நாடுகளினாலும் தத்தம் நாடுகளுக்குள் அதிகாரப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை 1980ல் இவ் ஒப்பந்தத்துக்கு கையொப்பமிட்டு இலங்கையில் செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. 1976 ஜனவரி 3ம் திகதி பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம் 115 நாடுகளினால் தம் தம் நாடுகளில் அதிகாரப்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டது.

### *மனித உரிமைகள் தொடர்பான மசோதா*

மேலே கூறப்பட்ட

1. ஐ. நாவின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை - 1948

2. ஐ. நாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம் - 1966 மற்றும் விருப்புக்குரிய வரைவு - 11

3. ஐ. நாவின் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம்

இவற்றை ஒன்றாக எடுத்து நோக்கின் இவை மனித உரிமைகள் தொடர்பான மசோதா என கூறப்படுவதுடன் 1989ல் பொதுச் சபை இதை ஏற்றுக்கொண்டது.

***இம்முறையில் ஐ. நா சபை அங்கீகரித்துக் கொள்ளும் ஒப்பந்தங்கள் மற்றும் சாசனங்களின் அதிகாரத்துவம் இரண்டு முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.***

1. சாசனத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள குழு அல்லது அமைப்பின் மூலம்.

2. ஒப்பந்தத்தின் கீழ் செயற்படுத்தப்படும் குழு அல்லது அமைப்பின் மூலம்.

## ஐ. நாவின் மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு

1946ல் ஸ்தாபிக்கப்பட்ட இக் குழு ஐ. நாவின் சாசனத்தின் கீழ் செயற்படும் பொருளாதார மற்றும் சமூக கவுன்சில் ECOSOCன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் பங்காளி நாடுகள் 53 ஆகும். இவ்வமைப்பு மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அமைப்புக்கு உதாரணமாகும்.

## ஒப்பந்தத்தின் கீழ் செயற்படும் குழு

***மனித உரிமைகள் தொடர்பான குழு:***

மேலே கூறப்பட்ட இலக்கம் 2ன் அமைப்பின் உதாரணமாக இதைக் கூறலாம். இக்குழு ஐ. நாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்

ஒப்பந்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 18 உறுப்பினர்களைக் கொண்டது.

***பொருளாதார சமூக கலாசார உரிமைகள் தொடர்பான குழு:***

இது பொருளாதார சமூக கலாசார உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் 18 பேராகும்.

***இன வேறுபாடுகளை களையும் குழு:***

ஐ. நாவின் இன வேறுபாடுகளை களையும் இணைப்பின் கீழ் இக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

***குரூரமான, சித்திரவதைகளை எதிர்க்கும் குழு:***

ஐ.நாவின் குரூரமான சித்திரவதைகளை எதிர்க்கும் ஒப்பந்தத்தின் கீழ் இந்த குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை 1994 ஜனவரி 3ம் திகதி இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இலங்கையில் இவ்வுரிமையை பெற்றுக் கொடுக்க, பாதுகாக்க முன் வந்தது.

* பெண்களுக்கு வேறுபாடுகள் காட்டும் நடவடிக்கைக்கு எதிரான ஒப்பந்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள குழு.

* சிறுவர் உரிமைகள் ஒப்பந்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப் பட்டுள்ள உரிமைகள் தொடர்பான குழு.

இக் குழுவின் மூலம் வெவ்வேறுப்பட்ட துறைகளில் மனித உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வேறு சர்வதேச அமைப்புகள்

ஐ. நா.வைத் தவிர சர்வதேச அமைப்புகள் பலவும், சர்வதேச ஒப்பந்தங்கள் பலவும் செயற்பட்டு வருகின்றது. அவற்றில் ஒன்று, சர்வதேச

தொழிலாளர் அமைப்பாகும். இவ் அமைப்பு 119ல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், இன்று உலகத்தில் செயற்பட்டு வருகின்ற மிகப் பழமையான சர்வதேச அமைப்பான இதன் கடமைகளாவன, தொழிலாளர்களது நலன்களுக்காகவும், தொழில் ஒற்றுமை வளர்ப்பது, மனித உரிமைகளை பாதுகாத்தல் வளர்த்தெடுத்தல் போன்றன தொடர்பாக கொள்கைகள் தயாரித்து தேசிய அரசின் மூலம் அவற்றை செயற்படுத்துதலாகும்.

அதை தவிர, ஐரோப்பிய கவுன்சில், மற்றும் ஐரோப்பிய மனித உரிமைகள் முறையின் கீழ் செயற்பட்டு வரும் ஐரோப்பிய மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு, அமெரிக்கா நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு மற்றும் ஆபிரிக்க மனித உரிமைகள் தொடர்பான கமிசன் என்பன இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

## ஐ. நாவின் அகதிகள் தொடர்பான ஆணைக்குழு (UNHCR)

உலகத்தில் ஏற்பட்டுள்ள வெவ்வேறுபட்ட யுத்தம் காரணமாக இன்று லட்சக்கணக்கான மக்கள் அதிகளாகியுள்ளனர். இது இன்று சர்வதேச பிரச்சினையாகியுள்ளது.

இதனால் இது தொடர்பாக செயலாற்றுவதற்காக ஐ. நாவின் பொதுச்சபை 1951 ஜனவரி 1ம் திகதி ஐ. நாவின் அகதிகள் தொடர்பான ஆணையாளர் ஒருவரை நியமித்தது.

இலங்கையில் அகதிப் பிரச்சினைகள் அதிரித்ததன் காரணமாக, ஐ. நா.வின் இவ்வமைப்பின் கிளை நிறுவனம் இங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

குழுக்களின் உரிமைகள் மனித உரிமைகளாக: அதேபோல் மேற்கூறப்பட்ட விரிவான மனித உரிமைகள் தொடர்பானவற்றைத் தவிர விசேட உரிமைகள் பல இன்று மனித உரிமைகளாக கொள்ளப்பட்டுள்ளன.

***1. சிறுவர் உரிமைகள் :-***

உலகத்தின் பெரும்பான்மை நாடுகளில் சிறுவர்களை

கொடுமைப்படுத்தல், அடிமை வேலைகளில் ஈடுபடுத்தல், சுரண்டல், படிப்பறிவின்மை, நோய்களுக்கு ஆளாதல், இளமையை இழத்தல் போன்றன அவர்களது இயற்கை வளர்ச்சிக்கு குந்தகம் விளைவித்துள்ளது. பௌதீக, உளவியல் ரீதியில் தீமையுற்றுள்ள குழந்தைப் பருவத்தை சரியான நிலைக்குத் திருப்பும் தேவையை உலக மக்கள் அங்கீகரித்துள்ளனர்.

இந்நிலைமையை நீக்குவதற்காக முதன் முறையாக சர்வதேச சங்க பொதுச் சபை மூலம் 1924 செப்டெம்பர் 26ம் திகதி சிறுவர் உரிமைகள் தொடர்பான ஜெனிவா அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

1948ல் ஐ. நாவின் மனித உரிமைகள் தொடர்பான உலக அறிக்கை மூலமும் சிறுவர் உரிமைகள் மனித உரிமைகளாக கருதப்பட்டன.

இது போதுமானதாக இல்லாததன் காரணமாக ஐ. நாவின் பொதுச்சபையினால் 1959-11-20ல் சிறுவர் உரிமைகள் தொடர்பான அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

இவ் அறிக்கையின் பின் முதன் முறையாக சிறுவர்களின் உலகத்துக்கும் பெரியோர்கள் உலகத்துக்கும் இடையிலான வேறுபாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இச் சிறுவர்கள் தொடர்பான அறிக்கையை முன்னெடுத்துச் சென்று 1989-11-20 அன்று மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டது. அது 1990 செப்டெம்பர் 2ம் திகதி அதிகாரப்படுத்தப்பட்டது.

1991ல் இலங்கை இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, இலங்கையில் அவ்வுரிமைகளை அதிகாரப்படுத்த ஒப்புக் கொண்டது அதேபோல் இவ் வொப்பந்த விடயங்களை தேசிய ரீதியாக செயற்படுத்த இலங்கை, தேசிய சிறுவர் சாசனம் ஒன்றை தயாரித்துள்ளது.

### *2. பெண்கள் உரிமைகள்:-*

உலகம் முழுவதும் பெண்கள் வெவ்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், வேறுபாடுகளுக்கும், துஸ்பிரயோகங்களுக்கும் உள்ளாதல் சம்பிரதாயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த விடயமாகும்.

எந்நேரமும் பெண்கள், ஆண்களைவிட பலவீனமானவர்களாகவும், கீழ்ப்பட்டவர்களாகவும் கருதப்பட்ட காலத்தில், பெண்களின் உரிமைகளை பாதுகாக்கவென முன்வைக்கப்பட்ட முதலாவது சர்வதேச அறிக்கையாக 1952ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண்களின் அரசியல் உரிமைகள் அறிக்கை அமைகின்றது. இதன்மூலம் ஆண்களுக்கு சமமாக பெண்களுக்கும் வாக்குரிமை அதிகாரம் உள்ளதென ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டியது யாதெனில், இலங்கையில் பெண்களுக்கு வாக்குரிமை 1931ல் டொனமூர் சீர்த்திருத்தம் மூலம் கிடைத்தது என்பதாகும்.

1967ல் ஐ. நா பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பெண்களுக்கெதிரான அனைத்து வேறுபாடுகளை விலக்கும் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்ட 1979 -12-18ம் திகதி ஒப்பந்தமாக அவ்வறிக்கையில் இருந்த உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இவ் ஒப்பந்தம் 1981 செப்டம்பர் 20 தொடக்கம் செல்லுபடியானது. 1981ல் இலங்கையும் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இவ்வொப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை, பெண்கள் உரிமைகள் தொடர்பான சாசனமொன்றை தயாரித்துள்ளது. மேலும் பெண்களின் உரிமைகளை வளர்த்தெடுக்க 1975ம் ஆண்டை "சர்வதேச பெண்கள் வருடம்" என ஐ. நா. பெயரிட்டிருந்தது.

***3. அபிவிருத்திக்கான உரிமை, மனித உரிமையாக :-***

ஒரு தசாப்த காலம் முழுதும் இடம்பெற்ற விவாதத்தின் பின் 1986ல் ஐ. நா பொதுச் சபையினால் மனிதனுக்கு அபிவிருத்தி தொடர்பாக இருக்கும் உரிமை மனித உரிமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஐ. நாவுடன் இணைந்து ஐ. நா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இவ்வுரிமையை பாதுகாக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

சூழலியல் மாநாடு என பிரபல்ய பெயரால் குறிப்பிடப்படும் ஐ. நாவின் சூழல், அபிவிருத்தி தொடர்பான மாநாடு 1992 ஜூன் 3-4திகதிகளில் பிரேசிலின் றியோ டி ஜெனிரோ நகரத்தில் இடம் பெற்றது. அதில் முதலாவது தடவையாக மனிதனின் உறுதியான அபிவிருத்திக்கு இருக்கும் உரிமை ஏற்றுக்

கொள்ளப்பட்டது.

### *4. சர்வதேச மனிதாபிமானம் தொடர்பான சட்டம் :-*

மனித உரிமைகளை தவிர, செயற்பட்டு வரும் இச்சட்டம் யுத்தத்தினால் துன்பப்படும் மக்களின் மானசீக உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டமை சர்வதேச மனிதாபிமான தொடர்பான சட்டத்தின் தோற்றமாக கருதலாம்.

1859ல் ஹென்றி டுவான்ட் எனும் ஸ்விஸ் நாட்டைச் சேர்ந்தவரின் தலைமையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

முதலாவது சர்வதேச மனிதாபிமானம் தொடர்பான ஒப்பந்தத்தில் நாடுகள் 1864ல் முதன் முதலில் கைச்சாத்திட்டன.

மனிதாபிமானம் தொடர்பான சட்டத்தின் மூலம் எதிர்ப்பார்ப்பது யாதெனில், யுத்தம் நடைபெறும் சந்தர்ப்பத்தில், யுத்தத்துக்கு நேரடியாக தொடர்பில்லாத அல்லது எந்தவித தொடர்பும் அற்ற நபர்களை யுத்தப்பீதியில் இருந்து பாதுகாத்தலாகும். இதன் படி :

1.யுத்தத்தினால் காயமுற்றிருக்கும் நபர்கள் அல்லது இராணுவத்தினன்கள்

2. யுத்த கைதிகள்

3. சிவில் மக்கள், ஆகியோரின் நிலைமைகளை பாதுகாத்தல்.

இதன்படி 1949ல் ஜெனீவா நகரில் மனிதாபிமானம் தொடர்பான ஒப்பந்தத்துக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

1990 டிசெம்பர் 31ம் திகதி 164 நாடுகள் மேற்கூறிய ஒப்பந்தத்தின் கீழ் ஒப்பந்தம் - 1ல் கைச்சாத்திடப்பட்டதுடன் 89 நாடுகள் வரை ஒப்பந்தம் - 2ன் கீழ் கைச்சாத்திட்டன. ஐ. நா அமைப்பும் அவ்வொப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.

### *5. சிறுபான்மை உரிமைகள் மனித உரிமைகளாக*

நிகழ்கால உலகத்தில் இருக்கும் நாடுகள் பலவற்றில் பல்லின இனங்கள் தோன்றியிருப்பதன் காரணமாகவும் பெரும்பாலான நாடுகளில் வாழும் சிறுபான்மையினங்கள், இன ரீதியாக அல்லது மத ரீதியாக வேறுபாடுகளுக்கு உள்ளாகியதால், ஐ. நா.வினால் சிறுபான்மை இனங்கள் உரிமைகளை மனித உரிமைகளாக ஏற்றுப் கொள்ள மற்றும் அவற்றை பாதுகாக்கவென கொள்கைகள் தயாரிக்கப்பட்டன.

1947 மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுவின் முதலாவது அமர்வில் சிறுபான்மை இனங்கள் வேறுபாடுளுக்கு உள்ளாகுதலை தவிர்ப்பது தொடர்பாகவும் சிறுபான்மை உரிமைகளை பாதுாப்பது தொடர்பாகவும் உப-ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதன் முக்கிய இலக்குகளாவன:-

1. ஐ. நாவின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையில் படி சிறுபான்மை உரிமைகள் தொடர்பாக செயற்படுவதுடன் சிறுபான்மை இனங்களின் இன,மொழி, மத வேறுபாடுகளை கலைப்பது தொடர்பாக செயற்படுதல்.

2. பொருளாதார மற்றும் சமூக சபை (ECOSOC) கீழ் சிறுபான்மை உரிமைகளை பாதுகாத்தல்.

இவ் உப-ஆணைக்குழு விசேட பிரதிநிதிகள் 26 பேரை அடக்கியுள்ளதுடன் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூலம் அவர்கள் நியமிக்கப்படுவர். சேவைக்காலம் 4 வருடங்களாகும்.

### *இன சமத்துவமின்மை மற்றும் வேறுபாடுகளை கலைப்பது தொடர்பான குழு.*

இன சமத்துவமின்மை மற்றும் வேறுபாடுகளை கலைப்பது தொடர்பான ஒப்பந்தத்தின் மூலம் அதன் 8வது பிரிவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இக்குழு விசேட பிரதிநிதிகள் 18 பேரை உள்ளடக்கியுள்ளது.

## இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான சட்டம்

1948ல் சோல்பரி யாப்பு அறிமுகப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அதில் மனித உரிமைகள் தொடர்பான சரத் 8 ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அவ் யாப்பின் 29வது பிரிவில் சிறுபான்மையினருக்கு எதிரான சட்டங்கள் தயாரிக்கப்பட முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது.

***29வது சரத்து. 29 (2)***

29 (2) அ) மத குழுக்களுக்கு தமது மதத்தை வழிபட வரையறைகளை மேற்கொள்ளும் போது

ஆ) எந்த இனத்தினைச் சேர்ந்தவர்களுக்கோ மதத்தைச் சேராத விடயங்கள் அல்லது செய்ய முடியாத விடயங்கள் என்பனவற்றை பிற இனத்திற்கு உரிமையாக்கல்

இ) எந்தவொரு இனத்திற்கோ அல்லது மதத்துக்கோ கிடைத்த சலுகைகள் இன்னொரு இனத்திற்கு அல்லது மதத்துக்கு கிடைக்க வழிபண்ணுதல்.

ஈ) சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட மத நிறுவனத்தின் யாப்பு, அம்மத அமைப்பின் அனுமதியின்றி மாற்ற கூடிய சட்டங்களை தயாரிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

***இலங்கையின் 2வது அரசியலமைப்பு யாப்பு அல்லது 1972 யாப்பு***

1972 ஆம் ஆண்டு யாப்பின் மூலம் முதலாவது தடவையாக மனித உரிமைகள் நாட்டின் மிக முக்கிய உரிமைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதன் 18 (1)சரத்தின்படி

1972 ஆம் ஆண்டு யாப்பின் மூலம் முதலாவது தடவையாக மனித உரிமைகள் நாட்டின் மிக முக்கிய உரிமைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அன் 18 (1)படி

1. சட்டத்தின் முன் அனைவரும் சமனானவர்கள் என்பதுடன், எந்தவொரு வேறுபாடுகளுக்கும் உள்ளாகாத உரிமை

2. வாழ்வதற்கான உரிமைகள்

3. சுதந்திரத்கதுக்கும் முதன்மை பாதுகாப்புக்கும் இருக்கும் உரிமை

4. மனச்சாட்சிக்கு, சுயமாக சிந்திக்கும், மதத்தை பின்பற்றும் சுதந்திரம்.

5. கலாசாரத்துக் இருக்கும் உரிமை மற்றும் அதை பயன்படுத்த இருக்கும் சுதந்திரம்

6. அமைப்பு ரீதியாக ஒன்றுபட இருக்கும் சுதந்திரம்

7. கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம்

8. இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் பயணிக்கும் சுதந்திரம்.

9. அரச ஸ்தாபனங்களில் சேவை நியமனங்கள் போன்றவற்றில் வேறுபாடுகளுக்குள்ளாகாத சுதந்திரம்.

போன்ற சுதந்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன்

18 (2) சரத்தின் மூலம் அரச பாதுகாப்பு, நாட்டின் நன்நிலை, தேசிய பொருளாதாரம், பொது சுகாதாரம் போன்ற காரணங்களினடிப்படையில் மேற்கூறப்பட்ட உரிமைகளை வரையறுக்கும் உரிமை இருக்குமென குறிப்பிடப்பட்டடுள்ளது.

இம்மனித உரிமைகள் சட்டத்தின் முன்னிலையில் பலப்படுத்துவது தொடர்பாக விசேட முறை அறிமுகப்படுத்தப்படாதது இவ் யாப்பில் இருக்கும் குறைபாடுகளாக குறிப்பிடப்படுகின்றன.

## 1978 அரசியலமைப்பில் மனித உரிமைகள்

1978 அரசியலமைப்பின் (3) பிரிவின் கீழ் இலங்கை பிரஜைகளுமி, அனைத்து மக்களும் அனுபவிக்க்க கூடிய வகையிலான 12 மனித உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

***அனைத்து மக்களும் அனுபவிக்கக் கூடிய மனித உரிமைகளாவன:***

10. சரத்து, சிந்திக்கும் சுதந்திரம், மனச் சாட்சிக்கும், தமக்கு விருப்பமான மதத்தை பின்பற்றும் சுதந்திரம் உண்டெனக் குறிப்பிடுகின்றது. (இவ் உரிமை ஐ.நா மனித உரிமைகள் அறிக்கையின் 18வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்பாட்டின் 18வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

(இணைப்பு 1 மற்றும் இணைப்பு 2)

11. சரத்து, குரூர, அமானுஸ்ய சித்திரவதைகளிலிருந்து மீளும் மற்றும் அவமதிப்பு நடவடிக்கைகளிலிருந்து மீளும் உரிமை உள்ளதென கூறுகின்றது. (இவ் உரிமை ஐ.நா மனித உரிமைகள் அறிக்கையின் 4வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்பாட்டின் 7வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

12. (1) சட்டத்தை செயற்படுத்துதலும், சட்டப்பாதுகாப்பும் நீதியானதாக இருக்க வேண்டும். (இவ் உரிமை வேறுபட்ட முறையில் ஐ.நா மனித உரிமைகள் அறிக்கையின் 7வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்பாட்டின் 16வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

13. (5) அனைத்து நபர்களும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படும் வரையில் குற்றமற்றவர் என கருதப்பட வேண்டும். (இவ் உரிமை ஐ. நா மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையில் 11 (1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்பாட்டின் 14 (2) பிரிவில் குறிப்பிடப்படுகின்றது.)

13 (6) எந்தவொரு குற்றமும் எதிர்காலத்தினை பாதிக்கும் விதத்தில் சட்டங்களை உருவாக்குதல் தவறு என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதுவரை, சர்வதேச சட்டத்தில் தவறு என ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம், இலங்கை சட்டத்தில் தவறு எனக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில் அக்குற்றம் எதிர்காலத்தை பாதிக்கும் விதத்தில் இடலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (இவ் உரிமை ஐ. நா மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையின் 11 (2) பிரிவின் கீழ்

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் 14 (7) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

***இலங்கைப் பிரஜைகள் மட்டும் அனுபவிக்கக்கூடிய உரிமைகள்***

12 (2) பிரிவு :- எந்தவொரு பிரஜையும் இனம், மதம், மொழி,சாதி, பால் வேறுபாடு, அரசியல் கருத்துக்கள், பிறப்பிடம் ஆகிய காரணங்களினால் வேறுபாடுகளுக்கு உள்ளாகக் கூடாது. (இலங்கை யாப்பு- 1978)

13 (1) பிரிவு :- எந்தவொரு நபரும் சட்டத்தின் வழிமுறைகளுக்கு எதிராக சிறைப்படுத்த கூடாது. கைது செய்யப்படும் பொழுது, அதற்கான காரணங்கள் கைது செய்யப்படும் நபருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். (இவ் உரிமை ஐ. நா மனித உரிமைகள் அறிக்யையின் 9வது பிரிவில் ஐ. நாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான இணக்கத்தின் 9 பிரிவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.)

13 (2) கைது செய்யப்பட்ட நபரொருவர் மனித உரிமை தொடர்பான நீதிமன்றத்தின் முன்னால் ஆஜராக வேண்டும். நீதிமன்ற பணிப்பின்றி மேலும் கைது செய்யப்பட்டு வைத்திருக்க முடியாது.

இவ் உரிமைகள் ஐ. நாவின் மனித உரிமைகள் அறிக்கையின் 10ம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள உரிமைகள் 2ம் ஐ. நாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் 9வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13 (3) குற்றம் சாட்டப்பட்ட நபரொருவர் நீதியான வழக்குக்கு முகம் கொடுக்கும் உரிமை. இவ் உரிமை ஐ. நாவின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையின் 8வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13 (4) சட்டத்தின் பிரகாரமின்றி எந்தவொரு நபரும் கொலை செய்யப்பட முடியாது. (ஐ. நாவின் மனித உரிமைகள் அறிக்கையில் 3வது பிரிவில் ஐ. நா சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் இணக்கத்தின் 6வது பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.)

14. (1) சகல பிரஜைகளுக்கும் பேசும், கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும், கருத்துக்களை தெரிவிக்கும், வெளியிடும் உரிமை உள்ளது. (ஐ.நா மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையின் 19வது பிரிவின் மற்றும் ஐ. நா சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் 19வது பிரிவில் இவ் உரிமைகள் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளன)

14 (2) அமைதியாக ஒன்று கூடும் அதிகாரம். (ஐ. நா மனித உரிமைகள் தொடர்பான 20வது பிரிவில் ஐ. நா சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் 21வது பிரிவில் இவ்வுரிமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன)

14 (3) தொழிற் சங்கங்கள் ஸ்தாபிக்கும் மற்றும் தொழிற் சங்கங்களுடன் இணையும் உரிமை.

ஐ. நா ம. உ. அ. 23 (4)

ஐ. நா ம. உ. அ. 22 (1) பிரிவு

14 (4) கூட்டாகவோ தனியாகவோ தமது மதத்தை கற்க, பயன்படுத்த இருக்கும் உரிமை ஐ. நா. ம. உ. 23 (1)

14 (5) தனியாக அல்லது கூட்டாக தமது கலாசாரத்தை அனுபவிக்கும் அல்லது மொழியை பாவிக்கும் உரிமை

ஐ. நா. ம. அ. 27 பிரிவு

ஐ. நா சி. அ. உ. 22 (1) பிரிவு

14 (6) இலங்கையில் முழுவதும் பயனளிக்கும் உரிமை

ஐ. நா. ம. உ. அ. 13

ஐ. நா சி. அ 12 (1) பிரிவு

14 (7) வெளிநாட்டுக்குச் சென்று மீண்டும் இலங்கை திரும்பும் உரிமை.

ஐ. நா. ம. உ. அ. 13 (2)

ஐ. நா. சி. அ. 2. 12 (4)

## இலங்கையில் மனித உரிமைகளுக்கு இருக்கும் வரையறைகள்.

இலங்கையில் 1978 யாப்பின் 15வது பிரிவின் மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

*செல்லுப்படியாகாத உரிமைகள்*

எனினும் யாப்பின் 10 மற்றும் 11வது பிரிவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளில் எல்லைகள் வரையறுக்கப்பட முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது.

யாப்பின் 12,13,14வது பிரிவுகளில் உள்ள உரிமைகள், 15வது பிரிவின் வெவ்வேறுபட்ட ஒதுக்கின் மூலம் வர்ரயறுக்கப்பட்டுள்ளன.

12வது சரத்தில் உள்ள உரிமைகள், 12வது சரத்தின் மூலம் விதிக்கப்பட்ட ஒதுக்கின் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளன.

*அரசியலமைப்பின்*

13 (5) மற்றும் 13 (6) சரத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிக்க வேண்டுமாயின், அரச பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சட்டத்தினால் மேற்கொள்ளப்படும் வரையறைகளுக்கு உட்பட வேண்டுமென 15 (1) சரத்து குறிப்பிடுகின்றது. அதாவது அவசர காலச்சட்டம் நிலவும் சந்தர்ப்பங்களில் இவ்வுரிமைகள் அனுபவிக்க தடையேற்படும்.

*அரசியலமைப்பின்*

14 (1) (அ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமை 15 (2) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் பிரகாரம் இன மற்றும் மத வேறுபாடுகளை உறுதிப்படுத்தப்படவும், பாராளுமன்ற சலுகைகள் மற்றும் அவதூறு சட்டம்

மூலம் கட்டுப்பாடுகள் உண்டு. 14 (1) (ஆ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் 15 (3) சரத்தில் குறிப்பிடப்படுகின்ற இன மற்றும் மத வேறுபாடுகளை மேற்கொள்ளவும் கட்டுப்பாடுகள் உண்டு.

14 (1) (ஆ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் 15 (3) சரத்தில் குறிப்பிடப்படும் முறையில் இன மற்றும் மதங்களை காப்பாற்ற அல்லது பொருளாதாரத்தை காக்க தேவையான முறையில் கட்டுப்பாடுகள் மேற் கொள்ளப்படலாம்.

14 (1) (இ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் தேசிய பாதுாப்பை பாதுகாக்கவென கட்டுப்படுத்தப்படலாம்.

14 (1) (ஊ) குறிப்பிடப்பட்டுள்ள உரிமை, 15 (6) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கேற்ப தேசிய பொருளாதாரத்தை காக்கவென கட்டுப்படுத்தப்படலாம்.

***பொது வரையறைகள்***

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 12,13(1),13 (2) மற்றும் 14 சரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் 15 (7) சரத்து மூலம் பொதுவாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

1. தேசிய பாதுகாப்பு

2. பொது நன்மை

3. பொது சுகாதாரம் மற்றும் ஒழுக்கம்

4. மற்றும் பிறரின் உரிமைகள் போன்ற தேவைகளின் கீழ் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிக்க இடமுண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது.

## இவ் உரிமைகள் மீறப்படுதல் என கருதப்படல்

அதிகாரம் அல்லது நிர்வாகம் மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மீறப்படுமாயின், அது மனித உரிமை மீறலாக கருதப்படும்

என அரசியலமைப்பின் 17வது சரத்து குறிப்பிடுகின்றது. எனினும், யாப்பின் அல்லது நீதிமன்ற நடவடிக்கை மூலம் மனித உரிமை மீறல் இடம்பெறாதெனவும், அவ்வாறான நடவடிக்கை தொடர்பாக யாப்பில் குறிப்பிடாததன் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## மீறப்பட்டால் எந்த நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும்.

அரசியலமைப்பின் 126வது சரத்தின்படி உயர்நீதிமன்றத்தின் முன் மனித உரிமைகள் தொடர்பான வழக்கு தாக்கல் செய்யலாம்.

மனித உரிமை வழக்கொன்றை தாக்கல் செய்யும் காலமானது, உரிமை மீறப்பட்ட ஒருமாதக் காலத்திற்குள் உயர்நீதிமன்றத்திற்கு மீறப்படுதலுக்கு உள்ளாகிய நபர் அல்லது அவர் சார்பாக வழக்கறிஞர் மூலம் எழுத்து மூலமான நடைமுறை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமென 126வது சரத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில மனித உரிமைகள் முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் உரியதல்ல.

மனித உரிமைகள் தொடர்பாக அரசியல் அமைப்பு காணப்படும் 12 (1), 13 மற்றும் 14 சரத்து முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு உரியதாகாது என 15 (3) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மொழி உரிமை

மொழி தொடர்பான ஒதுக்கீடு யாப்பில் IV அத்தியாயத்தில் 18 தொடக்கம் 25 வரை குறிப்பிடப்பட்டுள்ளது.

18வது சரத்தின் படி இலங்கையின் அரச மொழி சிங்களம், தமிழ் எனவும், ஆங்கிலம் தொடர்பு மொழி எனவும் கூறப்பட்டுள்ளது.

### *மொழி உரிமை மீறப்படுதலுக்கான தீர்வு*

அரசியல் அமைப்பில் 126வது சரத்தின் படி நபரொருவரின் மொழி

உரிமை மீறப்பட்ட சந்தர்ப்பமொன்றில், மீறல் இடம்பெற்ற ஒரு மாதத்திற்குள் மீறலுக்குள்ளான நபர் அல்லது அவரை பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞறினால் மீறல் இடம்பெற்ற ஒரு மாதத்திற்குள் உயர் நீதி மன்றத்திற்கு மனுவை அனுப்புவதன் மூலம் மீறப்படுவதற்கான நியாயத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லாது விடின் அரச கருமமொழிகள் திணைக்களத்திற்கு மனு அனுப்பும் உரிமையும் உண்டு.

## இலங்கையில் மனித உரிமை மீறலின் போது மாற்று நடவடிக்கை உயர் நீதிமன்றத்தினால் மட்டுமா எடுக்க முடியும்?

iiiவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகளை அதிகாரப்படுத்தும் போது நிலவும் தொழில் நுட்பக் கோளாறுகள் மற்றும் வெவ்வேறுபட்ட குறைபாடுகள் என்பவற்றில் ஏற்படும் குறைபாடுகளை களைவதன் நோக்கமாகக் கொண்டு இரண்டு நிறுவனங்கள் மக்களின் நன்மையைக் கருத்திற் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1. ஒம்புட்ஸ்மன் (பாராளுமன்ற ஆணையாளர்)

2. மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு

## மனித உரிமைகள் தொடர்பான ஆணைக் குழு - இலங்கை

இக் குழு 5 பேர்களை உள்ளடக்கியதுடன் இவர்களில் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார்.

1. அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், பாதுகாத்தல்.மற்றும் அபிவிருத்திக்கு ஏற்ப நிறைவேற்று மற்றும் நிர்வாகச் செயல்களை, நிழ்ச்சி நிரல் என்பவற்றை முன்வைத்தல்.

2. மனித உரிமை மீறல் அல்லது மீறலுக்குள்ளாகும் வாய்ப்பு உள்ளது போன்ற முறையீடுகளை ஆய்ந்து ஆணைக்குழு அதிகாரத்திற்கேற்ப அவற்றை சமாதானமாக, நீதியாக தீர்த்து வைத்தல்.

3. மனித உரிமைகளை பாதுகாத்தல், தேவைக்கேற்ப யாப்பைத் தயாரித்தல், நிர்வாக நடவடிக்கைகள் போன்றவை தொடர்பான தயாரிப்புகளுக்கு அரசு உதவியளித்தல்.

4. தேசிய சட்டம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள், சர்வதேச மனித உரிமைகளை ஒழுங்குபடுத்தல் ஆகியவை தொடர்பாக அரசுக்கு விதந்துரைப்புகளை முன் வைத்தல்.

5. பலதரப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான இணக்கப்பாடுகள் தொடர்பான அரசின் அனுமதியைப் பெற முயலுதல்.

6. மனித உரிமைகள் தொடர்பான கல்வியை முன்னேற்றுதல், விரிவாக்கல்.

*அதிகாரங்கள்*

1. மீறல் தொடர்பான விசாரணைகள்

2. வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் சந்தர்ப்பத்தில், ஒருவரின் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தின் அனுமதியின் கீழ் குறிப்பிட்ட வழக்கில் தலையிடல்.

3. சட்ட ரீதியாகவோ அல்லது அவ்வாறன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற நபர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக செயற்படுதல், தடுத்து வைக்கப்பட்ட பிரதேசங்களை சோதனைக்குட்படுத்துதல், வசதிகளைப் பெருக்க அரசுக்கு விதந்துரைத்தல்.

4. உயர் நீதிமன்றத்தினால் ஆணையிடப்படும் நடவடிக்கைத் தொடர்பான தேவையான நடவடிக்கையை எடுத்தல் மற்றும் அறிக்கைகளை தயாரித்தல்.

5. மனித உரிமைகளை விரிவாக்க கல்வி கருத்தரங்குகளை நடாத்துதல் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

## நிர்வாக நடவடிக்கை தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்)

நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் பாராளுமன்ற ஆணையாளர் சுயாதீனமான அரச ஊழியராவார்.

அரச நிறுவனங்களிலோ அல்லது வேறு நிறுவனங்களிலோ அதிகாரிகளினால் மீறப்படும் பிரதான உரிமைகள் தொடர்பான அல்லது நிர்வாக பலவீனங்கள் தொடர்பாக மக்களினால் முன் வைக்கப்படும் முறையீடுகளை ஏற்றுக்கொண்டு அம் முறையீடுகளை விசாரணை செய்து அது தொடர்பாக முடிவு எடுப்பது தொடர்பாக அரசியலமைப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்ட நிறுவனமாகும்.

*முறையீடு செய்யும் சந்தர்ப்பங்கள்.*

அடிப்படை உரிமைகள் மீறப்படுதல் அல்லது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அல்லது மொழி உரிமைகள் அல்லது அரசியல் அமைப்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட வேறு உரிமைகள் ஆகியன மீறப்படுதல் தொடர்பாக முறையீடு செய்யலாம்.

மேலும், அரச அதிகாரிகளினால் அல்லது வேறு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் வேறு அநீதிகள் தொடர்பாக முறைபாடுகள் செய்யலாம்.

1. அமைச்சு அல்லது கூட்டுத்தாபனம்
2. சட்டமயப்படுத்தப்பட்ட அமைப்பு
3. அரச நிறுவனம்
4. அரசினால் தனதாக்கிக் கொள்ளப்பட்ட நிறுவனங்கள்
5. மாகாண சபைகளுக்குரிய நிறுவனங்கள்
6. மாகாண சபை நிறுவனங்கள்.

மேற்கூறப்பட்ட நிறுவன அதிகாரிகள் மூலம் அநீதிகள் ஏற்படுமாயின் அல்லது அவ்வாறு கருதப்படுமாயின் அத்தவறு அநீதி தொடர்பாக ஒம்புட்ஸ்மன் அவர்களுக்கு முறையீடு செய்யலம்.

***ஒம்புட்ஸ்மன் அவர்களுக்கு கிடைக்கும் முறையீடுகள் தொடர்பான விசாரணைகள்***

அரச, அரச மயமாக்கப்பட்ட நிறுவனங்களில் அதிகாரிகளின் கீழ்ப்பட்ட நடவடிக்கை தொடர்பாக, தனியார் நிறுவனங்கள் அல்லது தனி நபர்கள் தொடர்பான முறையீடுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பிட்ட முறையீடு தமது நிரலுக்குரிய தெனினும் அவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுறுத்தல் மேற்கொள்ளப்படும்.

***முறையீட்டை முன்வைக்கும் முறை***

ஒம்புட்ஸ்மன் அலுவலத்துக்கு எழுத்துமூலம் முறையீடு செய்வதன் மூலம்

ஒம்புட்ஸ்மன் அலுவலத்துக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் பெரும்பாலானவை சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு புறம்பாக தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படும். அவ்வாறில்லையாயின் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என தெரிய வருமாயின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்க பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்படும். விசாரணைகளை மேற்கொள்ளவென முறைப்பாட்டாளர் மற்றும் சம்பந்தப்பட்ட கூட்டுத்தாபனம், நிறுவனம் நிறுவனத்தின் தலைவர்கள் அழைக்கப்படுவார்கள். முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் அல்லது முடிவுகள் நீதியானதா இல்லையா என்பது இறுதியில் ஒம்புட்ஸ்மனினால் தீர்மானிக்கப்படும் விசாரணைகளின் போது வெளிபட்ட விடயங்களின் பிரகாரம் முறைப்பாட்டாளரின் முறைப்பாடு இருக்குமெனில், ஒம்புட்ஸ்மனினால் அவ்வாறே தீர்மானிக்கப்பட்டு முறைப்பாட்டாளருக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் அல்லது தவறுகளை விதந்துரைப்பதன் மூலம் சம்பந்தப்பட்ட நிறுவன தலைவர்களுக்கு அறிவிக்கப்படும்.

ஓம்புட்ஸ்மனினால், ஏற்பட்ட அநீதிக்குரிய ஆறுதல்களை விதந்துரைக்க மட்டுமே முடியும் என்பதை கருத்திற் கொள்க. அவரது விதந்துரைப்பின் பேரில் செயலாற்றாவிடில் அவ்விதந்துரைப்பு தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் அறிக்கையுடன் விதந்துரைப்பு ஜனாதிபதிக்கோ அல்லது பாராளுமன்றத்திற்கோ அனுப்பி வைக்கப்படும்.

***விசாரணைக்கு நடைபெறும் காலங்கள்***

விசாரணை முடிவடையும் காலம், முறைப்பாட்டின் இயல்பில் தங்கியுள்ளது. சாதாரணமாக விசாரணைக்காலமானது 4 முதல் 6 மாதங்கள் வரை நீடிக்கும்.

முறைப்பாட்டை முன்வைக்கும் போது, அரச மொழிகள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படாததுடன் அது சிங்கள, தமிழ் என எந்த மொழியாகவிருப்பினும் பிரச்சினைக்குரியதல்ல. அது தவிர, அரச ஊழியர்களினால் மொழி தொடர்பாக முறைப்பாடு முன்வைக்கப்படுமாயின் அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவும் ஓம்புட்ஸ்மனினால் முடியும்.

பாராளுமன்ற ஆணையாளரை தொடர்பு கொள்ள வேண்டின் :

நேரடி தொலைபேசி எண் - 588982

அலுவலக தொலைபேசி எண் - 585896, 588798

தொலை மடல்: 581118

***முகவரி:***

நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான

பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்),

இல. 594/3,

காலி வீதி, கொழும்பு - 3.

**இலங்கையில் மனித உரிமை நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் என்பனவற்றை பாதுகாக்கவென சுயேச்சையான அமைப்புகள் பல முன்வந்துள்ளன.**

**1. சட்ட கல்விக்கும், உதவிக்குமான நிகழ்ச்சித் திட்டம்** (LEAP)
**இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம** (MIRJE)

* அவசர காலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வழக்கு தொடர்பாக.

* மனித உரிமை மீறல் தொடர்பாகவும் சட்ட உதவி வழங்கப்படும்.

* மனித உரிமைகள் தொடர்பான கல்வி மற்றும் ஆய்வுத் திட்டம்

முகவரி: இல. 4, ஜயரத்தன மாவத்தை,

கொழும்பு - 5.

**1. தனி நபர் உரிமைகள் பாதுகாப்பு முன்னணி:**

* 1971ல் ஸ்தாபிக்கப்பட்ட இந்நிறுவனம் 71 ஏப்ரல் கிளர்ச்சி காரணமாக கைது செய்யப்பட்டவர்களுக்கு ஆறுதலளித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

* ஜனநாயக விரோத சட்டங்கள் மற்றும் ஆணைச்சட்டங்களுக்கு எதிராக வெளியீடுகள் போராட்டங்கள் மேற்கொள்ளல்.

* வெவ்வேறுபட்ட வெளியீடுகள் மூலம் இவ் உரிமைகள் மற்றும் சுதந்திரம் தொடர்பாக மக்களை அறிவுறுத்தல்.

முகவரி :- இல. 16.'.1, தொன்கரோலிஸ் வீதி,

கொழும்பு - 5

**3. சட்ட உதவிகள் மத்திய நிலையம்**

இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் அரசியல் கைதிகளுக்கு சட்ட உதவிகளை வழங்குகின்றது.

முகவரி : சட்ட உதவிகள் நிலையம்
இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம்
புதுக்கடை, கொழும்பு - 12

**4. சட்ட உதவிகள் ஆணைக்குழு**

* வறிய நபர்களுக்கு சட்ட உதவிகளை வழங்குகின்றது.

முகவரி : சட்ட உதவிகள் ஆணைக்குழு, புதுக்கடை, கொழும்பு 12.

**5. கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் கல்வி நிலையம்**

* இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்பாக விசேட கல்வி மற்றும் ஆய்வுகளை மேற்கொள்கின்றது.
* பாடசாலை மாணவர்கள், இராணுவம், மக்கள் ஆகியோருக்காக மனித உரிமை தொடர்பான கற்கை நெறிகளை மேற்கொள்கின்றது.
* மனித உரிமை நடவடிக்கைகளை பயிற்றுவிதக்கு நிகழ்ச்சிகளை வருடாந்தம் நடாத்தி வருகின்றது.

முகவரி மனித உரிமைகள் நிலையம்,
சட்ட பீடம்,
கொழும்பு பல்கலைக்கழகம்,
த.பெ. எண் 1490,
குமாரதுங்க முனிதாச மாவத்தை,
கொழும்பு - 3

**6. ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் நிலையம்**

* மனித உரிமை மீறல்கள் நிகழும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பான வழக்குகளுக்கு சட்ட உதவி வழங்குதல்.

**7. மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான சட்ட அமைப்பு**

* மனித உரிமைகள் தொடர்பாக மக்களுக்கு அறிவுரைகளை வழங்குதலும், சட்ட உதவிகளை வழங்குதலும்.
* மனித உரிமைகள் மற்றும் சட்டம் தொடர்பான கற்கைகள், ஆய்வுகள் மற்றும் நூலகம் ஒன்றை நிர்வகிக்கின்றது.

முகவரி : 225 1/1, கொழும்பு - 8

**8. நடேசன் கேந்திரம்**

* தேசிய, சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான புத்தகங்கள் சேகரிக்கப்பட்டு நூல் நிலையம் நடத்தப்படுகின்றது.
* மனித உரிமைகளுக்குரிய வழக்கு முடிவுகளை அறிக்கைகளாக வெளியிடுதல்.

முகவரி : இல 4, சார்ள்ஸ் வழி, கொழும்பு -3

**9. சர்வோதய சட்ட உதவிகள் நிலையம்**

* சட்டம் தொடர்பாக மக்களை அறிவுறுத்துதல்

**10. மனித உரிமைகள்**

* மனித உரிமைகளை பாதுகாத்தலும், மனித உரிமைகள் தடைப்படுதலை தவிர்ப்பதும் செயலாற்றுதல்.
* வடக்கு, கிழக்கில் காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு, சட்ட உதவிகளை வழங்கல்

முகவரி: 5A, அல்பிரட் வீதி, கொழும்பு - 3

**11. மனித உரிமைகள் நிறுவனம்.**

* மனித உரிமை மீறலுக்குட்பட்டவர்களுக்கு, காணாமல் போன குடும்பங்களுக்கு, தடுத்து வைத்திருப்போருக்கு சட்ட உதவிகள் வழங்குதல்

முகவரி : 453/1, ஹவ்லொக் வீதி, கொழும்பு - 6.

## இணைப்பு 1

# மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம்

### *உறுப்புரை 1*

மனிதப் பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மனச்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவருடனொருவர் சகோதர உணர்வுப் பாங்கில் நடந்து கொள்ளல் வேண்டும்.

### *உறுப்புரை 2*

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைமை, தேசிய அல்லது சமூகத் தோற்றம், ஆதனம் பிறப்பு அல்லது பிற அந்தஸ்து என்பன போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி, இப்பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவர். மேலும், எவரும் அவருக்குரித்துள்ள நாட்டின் அல்லது ஆள்புலத்தின் அரசியல், நியாயாதிக்க அல்லது நாட்டிடை அந்தஸ்தின் அடிப்படையில் - அது தனியாட்சி நாடாக, நம்பிக்கைப் பொறுப்பு நாடாக, தன்னாட்சியற்ற நாடாக அல்லது இறைமை வேறேதேனும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட நாடாக இருப்பினுஞ்சரி - வேறுபாடெதுவும் காட்டப்படுதலாகாது.

### *உறுப்புரை 3*

வாழ்வதற்கும், சுதந்திரத்தையுடையதாயிருந்ததற்கும் பாதுகாப்பிற்கும் சகலரும் உரிமையுடையோராவார்.

### *உறுப்புரை 4*

எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றில் எல்லா வகைகளிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 5*

எவரும், சித்திரவதைக்கோ அல்லது கொடுமையான, மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படுதலாகாது.

*உறுப்புரை 6*

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன்னர் ஓர் ஆளாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவராவர்.

*உறுப்புரை 7*

எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமானவர்கள் பாரபட்சம் எதுவுமின்றிச் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் உரித்துடையவர்கள் இப்பிரகடனத்தை மீறிப் புரியப்பட்ட பாரபட்சம் எதற்கேனும் எதிராகவும் அத்தகைய பாரபட்சம் காட்டுவதற்கான தூண்டுதல் யாதேனுக்கும் எதிராகவும் எல்லோரும் சமமான பாதுாப்புக்கு உரித்துடையவர்கள்.

*உறுப்புரை 8*

அவ்வந் நாட்டின் அரசியலமைப்பினால், அல்லது சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காகத் தகுதிவாய்ந்த தேசிய நியாய சபைகளினால் வழங்கப்படும் பயனுறுதியுடைய பரிகாரத்துக்கு உரிமையுடையவர்கள்.

*உறுப்புரை 9*

ஒருதலைப்பட்ட மனப்போக்கான வகையில் கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், நாடு கடத்தல் ஆகியவற்றுக்கு எவரும் ஆட்படுத்தப்படலாகாது.

*உறுப்புரை 10*

அவர்களது உரிமைகள், கடப்பாடுகள் பற்றியும் அவர்களுக்கெதிராகவுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் பற்றியும் தீர்மானிப்பதற்கு சுயாதீனமான நடுநிலை தவறாத நியாய சபையினால் செய்யப்படும் நீதியான பகிரங்கமான விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

### உறுப்புரை 11

(i) தண்டனைக்குரிய தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எல்லோரும், பகிரங்க விளக்கத்தில் சட்டத்துக்கிணங்க அவர்கள் குற்றவாளிகளென காணிபிக்கப்படும் வரை, சுற்றவாளிகளென ஊகிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள். அவ்விளக்கத்தில் அவர்களது எதிர்வாதங்களுக்கு அவசியமான எல்லா உறுதிப்பாட்டு உத்தரவாதங்களும் அவர்களுக்கிருத்தல் வேண்டும்.

(ii) தேசிய, சர்வதேசிய நாட்டிடைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் செயல் அல்லது செய்யாமை புரியப்பட்ட நேரத்தில் அச்செயல் அல்லது செய்யாமை தண்டனைக்குரிய தவறொன்றாக அமையாததாக விருந்து அச்செயல் அல்லது செய்யாமை காரணமாக, எவரும் ஏதேனும் தண்டனைக்குரிய தவறுக்குக் குற்றவாளியாகக் கொள்ளப்படலாகாது. அத்துடன், தண்டனைக்குரிய தவறு புரியப்பட்ட நேரத்தில் ஏற்புடையதாக விருந்த தண்டத்திலும் பார்க்கக் கடுமையான தண்டம் விதிக்கப்படலாகாது.

### உறுப்புரை 12

ஒவ்வொருவரும் அவ்வவரது அந்தரங்கத்துவம், குடும்பம், வீடு அல்லது கடிதப் போக்குவரத்து என்பவை சம்பந்தமாக, ஒரு தலைப்பட்ட மனப்போக்கான வகையில் தலையிடப்படுவதற்கோ அல்லது அவரது மரியாதை, நன்மதிப்பு என்பவற்றின் மீதான தாக்குதல்களுக்கோ உட்படுத்தலாகாது. அத்தகைய தலையீட்டுக்கு அல்லது தாக்குதல்களுக்கெதிராக, ஒவ்வொருவரும் சட்டப்பாதுகாப்புக்கு உரிமையுடையவராவர்.

### உறுப்புரை 13

(i) ஒவ்வொரு நாட்டினதும் எல்லைகளுக்குள் சுதந்திரமாகப் பிரயாணஞ் செய்வதற்கும் வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(ii) தனது சொந்த நாடு உட்பட ஏதேனும் நாட்டை விட்டுச் செல்லவும் தத்தமது நாட்டுக்குத் திரும்பவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

### உறுப்புரை 14

(i) வேறு நாடுகளுக்குச் செல்வதன் மூலம் துன்புறுத்தலிலிருந்து புகலிடம் நாடுவதற்கும், துன்புறுத்தலிலிருந்து புகலிடம் துய்ப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

(ii) அரசியற் குற்றங்கள் அல்லாத குற்றங்கள் சம்பந்தமாகவும், அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களுக்கும் நெறிகளுக்கும் முரணான செயல்களிலிருந்து உண்மையாக எழுகின்ற வழக்குத் தொகுப்புகள் சம்பந்தமாகவும் இவ்வுரிமை கேட்டுப் பெறப்படலாகாது.

### உறுப்புரை 15

(i) ஒரு தேசிய இனத்தினராகவிருக்கும் உரிமை ஒவ்வொருவருக்குமுண்டு.

(ii) எவரினதும் தேசிய இனத்துவம் மனப்போக்கான வகையில் இழப்பிக்கப்படுவதோ, தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உ்ரிமை மறுக்கப்படுதலோ ஆகாது.

### உறுப்புரை 16

(i) முழு வயதடைந்த ஆண்களும் பெண்களும், இனம் தேசிய இனம் அல்லது சமயம் என்பன காரணமாக கட்டுப்பாடெதுவுமின்றி திருமணம் செய்வதற்கும் ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமை உடையவராவர். திருமணஞ் செய்யும் பொழுதும் திருமணமாகி வாழும் பொழுதும் திருமணம் குலைக்கப்படும் பொழுதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சம உரிமையுண்டு.

(ii) திருமணம் முடிக்கவிருக்கும் வாழ்க்கைத் துணைவோரின் (பெண், ஆண் இருவரதும்) சுதந்திரமான முழுச் சம்மதத்துடன் மட்டுமே திருமணம் முடிக்கப்படவேண்டும்.

(iii) குடும்பமே சமுதாயத்தில் இயற்கையானதும் அடிப்படையானதுமான அலகாகும். அது சமுதாயத்தினாலும் அரசினாலும் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையது.

*உறுப்புரை 17*

(i) தனியாகவும் வேறொருவருடன் கூட்டாகவும் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(ii) எவரினதும் ஆதனம் ஒருதலைப்பட்ட மனப்போக்கான வகையில் இழக்கப்படுதல் ஆகாது.

*உறுப்புரை 18*

சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையினுள் ஒருவர் தமது மதத்தை அல்லது நம்பிக்கையை மாற்றுவதற்கான சுதந்திரமும், போதனை, பயில்நெறி, வழிபாடு அநுட்டானம் என்பன மூலமும் தத்தமது மதத்தை அல்லது நம்பிக்கையைத் தனியாகவும், வேறொரு வருடன் கூடியும் பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும் அடங்கும்.

*உறுப்புரை 19*

கருத்துச் சுதந்திரத்துக்கும் பேச்சுச் சுதந்திரத்துக்கும் எவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையானது தலையீடின்றிக் கருத்துக்களைக் கொண்டிருந்ததற்கும் எவ்வழிவகைகள் மூலமும், எல்லைகளைப் பொருட்படுத்தாமலும் தகவலையும், கருத்துக்களையும் நாடுவதற்கும் பெறுவதற்கும், பரப்புவதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கும்.

*உறுப்புரை 20*

(i) சமாதான முறையில் ஒன்று கூடுவதற்கும் இணைவதற்குமான சுதந்திரத்துக்கு உரிமையுண்டு.

(ii) ஒரு கழகத்தினைச் சேர்ந்தவராக விருப்பதற்கு எவரும் கட்டாயப் படுத்தப்படலாகாது.

### உறுப்புரை 21

(i) ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கு உரிமையுண்டு.

(ii) ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

(iii) மக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பமானது, காலாகாலம் உண்மையாக நடைபெறும் தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்தல் பொதுவானதும், சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருத்தல் வேண்டுமென்பதுடன், இரகசிய வாக்குமூலம், அல்லது அதற்குச் சமமான, சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் நடைபெறுதல் வேண்டும்.

### உறுப்புரை 22

சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவரும் சமூகப் பாதுகாப்புக்கு உரிமையுடையவர். அத்துடன் தேசிய முயற்சி மூலமும் சர்வதேசிய நாட்டிடை ஒத்துழைப்பு மூலமும், ஒவ்வொரு நாட்டினதும் அமைப்பு முறைக்கும் வளங்களுக்கும் இயையவும் ஒவ்வொருவரும் தத்தம் மதிப்புக்கும் தத்தம் ஆளுமையைச் சுதந்திரமான முறையில் அபிவிருத்தி செய்வதற்கும் இன்றியமையாதவையாக வேண்டப்பெறும் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

### உறுப்புரை 23

(i) ஒவ்வொருவரும் தொழில் செய்வதற்கான, அத்தொழிலினைச் சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான செய்யுந் தொழிலில் நியாயமானதும் அநுகூலமுடையதுமான தொழில் நிபந்தனைகட்கு உரியோராயிருப்பதற்கான, தொழிலின்மைக் கெதிரான பாதுகாப்பு உடையோராயிருப்பதற்கான உரிமையை உடையவர்.

(ii) ஒவ்வொருவரும் வேறுபாடெதுவுமின்றி, சமமான தொழிலுக்குச் சமமான சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவராவர்.

(iii) வேலை செய்யவும் ஒவ்வொருவரும் தாமும் தமது குடும்பத்தினரும் மனித மதிப்புக்கியையவுள்ள ஒரு வாழ்க்கையை நடத்துவதனை உறுதிப்படுத்தும் நீதியானதும் அநுகூலமானதுமான ஊதியத்திற்கு உரிமையுடையோராவர். அவசியமாயின் இவ்வூதியம் பிற சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளினால் குறை நிரப்பப்படுவதாயிருத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொருவருக்கும் தத்தம் நலன்களைப் பாதுகாப்பதற்கெனத் தொழிற் சங்கங்களை அமைப்பதற்கும், அவற்றில் சேர்வதற்குமான உரிமையுண்டு.

***உறுப்புரை 24***

இளைப்பாறுகைக்கும் ஓய்விற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையர்: இதனுள் வேலை செய்யும் மணித்தியால வரையறை. சம்பளத்துடனான காலாகால விடுமுறைகள் அடங்கும்.

***உறுப்புரை 25***

(i) ஒவ்வொருவரும் உணவு, உடை, வீட்டு வசதி, மருத்துவக் கவனிப்பு, அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட, தமதும், தமது குடும்பத்தினரதும் உடனலத்துக்கும், நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத் தரத்திற்கு உரிமையுடையவராவர். அத்துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும், அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கை வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்புக்கும் உரிமையுடையவராவர்.

(ii) தாய்மை நிலையும் குழந்தைப் பருவமும் விசேட கவனிப்பிற்கும் உதவிக்கும் உரித்துடையன. சகல குழந்தைகளும், அவை திருமண உறவினுட் பிறந்தவையாயினுஞ் சரி அத்தகைய உறவின்றி பிறந்தவையாயினுஞ்சரி, சமமான சமூகப் பாதுகாப்பினைத் துய்க்கும் உரிமையுடையன.

*உறுப்புரை 26*

(i) ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு. குறைந்தது தொடக்க அடிப்படைச் சட்டங்களிலாவது கல்வி இலவசமானதாயிருத்தல் வேண்டும். தொடக்கக் கல்வி கட்டாயமாக்கப்படுதல் வேண்டும். தொழில் நுட்பக் கல்வியும் உயர் தொழில் கல்வியும் பொதுவாகப் பெறப்படத் தக்கனவாயிருத்தல் வேண்டும். உயர் கல்வியானது யாவருக்கும் திறமையடிப்படையின் மீது சமமான முறையில் கிடைக்கக்கூடியதாக்கப்படுதலும் வேண்டும்.

(ii) கல்வியானது மனிதனின் ஆளுமையை முழுதாக விருத்தி செய்யுமுகமாகவும் மனிதவுரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்குமான மரியாதையை வலுப்படுத்துமுகமாகவும் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அது சகல நாடுகளுக்கிடையேயும், இன அல்லது மதக் குழுவினருக்கிடையேயும் மன ஒத்திசைவு, பொறுதியுணர்வு, தோழமை ஆகியவற்றை மேம்படுத்துதல் வேண்டுமென்பதுடன், சமாதானத்தைப் பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகளை மேற்கொண்டு செல்லுவதற்குதவவும் வேண்டும்.

(iii) தமது குழந்தைகளுக்குப் புகட்டப்படவேண்டிய கல்வியின் வகை, தன்மையை முதலிலே தெரிந்தெடுக்குமுரிமை பெற்றோருக்குண்டு.

*உறுப்புரை 27*

(i) சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையிற் சுதந்திரமாகப் பங்கு கொள்வதற்கும், கலைகளைத் துய்ப்பதற்கும், அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

(ii) அறிவியல், இலக்கிய, கலைப் படைப்பின் ஆக்கியற் கர்த்தர் என்ற வகையில் அப்படைப்புக்கள் வழியாக வரும் ஒழுக்க நெறி, கருப்பொருள் நலங்களின் பாதுகாப்பிற்கு அத்தகையோர் ஒவ்வொருவரும் உரிமை உடையவராவர்.

*உறுப்புரை 28*

இப்பிரகடனத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் முழுமையாக எய்தப்படக்கூடிய சமூக, சர்வதேசிய நாட்டிடை அமைப்பு முறைக்கு ஒவ்வொருவரும் உரித்துடையவராவர்.

*உறுப்புரை 29*

(i) எந்த ஒரு சமூகத்தினுள் மாத்திரமே தத்தமது ஆளுமையின் கட்டற்ற, பூரணமான வளர்ச்சி சாத்தியமாகவிருக்குமோ, அந்தச் சமூகத்தின்பால் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உண்டு.

(ii) ஒவ்வொருவரும் அவரது உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்கும் பொழுது இன்னொருவரின் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கு முரிய அங்கீகாரத்தையும் மதிப்பையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துக்காகவும், ஜனநாயக சமுதாயமொன்றின் ஒழுக்கசீலம், பொது மக்கள் ஒழுங்கமைதி, பொது சேமநலன் என்பவற்றுக்கு நீதியான முறையில் தேவைப்படக் கூடியவற்றை ஏற்படுத்தல் வேண்டுமெனும் நோக்கத்திற்காகவும் மட்டுமே சட்டத்தினால் தீர்மானிக்கப்படும் வரையறைகளுக்கு மாத்திரமே கட்டுப்படுபவராயமைதல் வேண்டும்.

(iii) இவ்வுரிமைகளும் சுதந்திரங்களும் ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களுக்கும் நெறிகளுக்கும் முரணாக எவ்விடத்திலேனும் பிரயோகிக்கப்படலாகாது.

*உறுப்புரை 30*

இப்பிரகடனத்திலுள்ள எவையும், இதன் கண் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றிலுள்ள எவற்றையும் அழிக்கும் நோக்கத்தையுடைய ஏதேனும் முயற்சியில் ஈடுபடுவதற்கும் அல்லது செயலெதனையும் புரிவதற்கும், எந்த ஒரு நாட்டுக்கோ குழுவுக்கோ அல்லது ஒருவருக்கோ உட்கிடையாக யாதேனும் உரிமையளிப்பதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

*இணைப்பு 2*

# பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் பற்றிய சர்வதேசப் பொருத்தனை

இந்தப் பொருத்தனை நாடாம் கட்சிளானவை.

ஐக்கிய நாடுகள் பட்டயத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட கோட்பாடுகளுக்கிணங்க, மானிடக் குடும்பத்தினைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களதும் உள்ளார்ந்த கௌரவத்தையும், அவர்களுக்குரிய சமமானவையும் பறிக் கொணாதவையுமான உரிமைகளையும் ஏற்றங்கீகரித்தலானது, உலகத்தில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பன நிலவுவதற்கு அடிகல்லாக உள்ளதெனக் கருத்திற்கொண்டு பார்க்கையில்,

இந்த உரிமைகள் மானிடனின் உள்ளார்ந்த கௌரவத்திலிருந்து எழுகின்றனவென ஏற்றங்கீகரிக்கையில்,

மனித உரிமைகள் பற்றிய அனைத்துலக விளம்பலுக்கிணங்க ஆள் ஒவ்வொருவரும், தத்தமது பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளையும், அத்துடன் தத்தமது சிவில் உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் துயக்கக் கூடிய நிலைமைகள் உருவாக்கப்பட்டால் மட்டுமே, சுதந்திரமான மானிடர்கள் அச்சத்திலிருந்தும் பற்றாக்குறையிலிருந்தும் விடுபட்டவராய் - சுதந்திரத்தைத் துய்க்கின்றவர்களாகவிருக்கும் இலட்சியத்தை எய்த முடியுமென ஏற்றங்கீகரிக்கையில்,

மனித உரிமைகளுக்கும் சதந்திரங்களுக்கும், அனைத்துலக மதிப்பை மேம்படுத்துவதற்கும், அவற்றைக் கடைப்பிடிப்பதற்கும் என ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் கீழ் நாடுகளுக்குள்ள கடப்பாடுகளைக் கருத்திற் கொண்டு பார்க்கையில்,

தனிமனிதன், ஏனைய தனிமனிதர் தொடர்பிலும் அவர் சேர்ந்துள்ள சமுதாயம் தொடர்பிலும் கடமைகளை உடையவராகவிருப்பதோடு, இந்தப் பொருத்தனையில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை மேம் படுத்துவதற்காகவும்

கடைப்பிடிப்பதற்காகவும் அயராதுழைப்பதற்கான பொறுப்பை உடையவராக உள்ளாரென உணர்கையில்,

பின்வரும் உறுப்புரைகள் மீது உடன்படுகின்றனர்.

**1ம் பாகம்**

***உறுப்புரை 1***

1. எல்லா மக்களுக்கு சுயநிர்ணயத்துக்கான உரிமை உண்டு. அந்த உரிமையின் பயனைக் கொண்டு, அவர்கள் தமது அரசியல் அந்தஸ்தைச் சுயமாகத் தீர்மானிப்பதுடன், தமது பொருளாதார, சமூக பண்பாட்டு அபிவிருத்தியைச் சுயமாகப் பின்பற்றுகின்றனர்.

2. எல்லா மக்களும், தமது சொந்த ஈடேற்றத்துக்காக, பரஸ்பர நலன், சர்வதேசச் சட்டம் என்பவற்றின் அடிப்படையில், சர்வதேசப் பொருளாதார ஒத்துழைப்பிலிருந்து எழுகின்ற எவ்வயேனும் கடப்பாடுளுக்குப் பங்கமின்றி, தமது இயற்கைச் செல்வத்தையும் வளங்களையும் சுயமாகக் கையாளலாம். மக்கள் எவரும் எவ்விடயத்திலும் அவர்களின் சொந்தச் ஜீவனோபாய வழிகளை இழுத்தலாகாது.

3. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், சுய ஆளுமையற்ற ஆள்புலன்களையும், நம்பிக்கைப் பொறுப்பு ஆள்புலன்களையும் நிருவகிப்பதற்கான பொறுப்பை உடையவர்கள் உட்பட சுயநிர்ணயத்திற்கான உரிமையை அனுபவிப்பதனை மேம்படுத்துதல் வேண்டுமென்பதுடன், ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் ஏற்பாடுகளுக்கியைய அந்த உரிமையை மதித்தலும் வேண்டும்.

***உறுப்புரை 2***

1. இந்தப் பொருத்தனைக்கான ஒவ்வொரு நாடாம் கட்சியும், குறிப்பாகச் சட்டமாக்கல் வழிவகைகளை மேற்கொள்ளுதல் உட்பட, தோதான எல்லா வழிகள் மூலமும் இந்தப் பொருத்தனையில் ஏற்றங்கீரிக்கப்பட்ட

உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதனைப் படிமுறையாக எய்தும் நோக்குடன், அதற்குக் கிடைக்கக் கூடிய வளங்களை ஆகக்கூடிய அளவுக்குப் பயன்படுத்தி, தனிப்பட்ட முறையிலும் சருவதேச உதவி, ஒத்துழைப்பு என்பன மூலமும் விசேடமாகப் பொருளாதார, தொழில்நுட்ப உதவியும் ஒத்துழைப்பும் நடபடிகள் எடுப்பதற்குப் பொறுப்பேற்கின்றது.

2. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், இந்தப் பொருத்தனையில் எடுத்துக்கூறப்பட்ட உரிமைகள், இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அபிப்பிராயம் அல்லது வேறு அபிப்பிராயம், தேசிய அல்லது சமூகத் தோற்றுவாய், ஆதனம், பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து என்பன தொடர்பில் எவ்வகையிலும் ஓரங்காட்டப்படாமல் பிரயோகிக்கப்படுமென உத்தரவாதமளிப்பதற்குப் பொறுப்பேற்கின்றனர்.

3. அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள், மனித உரிமைகளுக்கும் தமது தேசியப் பொருளாதாரத்துக்கும் உரிய முறையில் கவனஞ் செலுத்தி, இந்தப் பொருத்தனையில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பொருளாதார உரிமைகளுக்கு எந்த அளவில் நாடற்றோருக்கு உத்தரவாத-மளிப்பார்களெனத் தீர்மானிக்கலாம்.

***உறுப்புரை 3***

இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், இந்தப் பொருத்தனையில் தரப்பட்டுள்ள எல்லாப் பொருளாதார, சமூக பண்பாட்டு உரிமைகளையும் துய்ப்பதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமையை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பேற்கின்றனர்.

***உறுப்புரை 4***

இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், இந்தப் பொருத்தனைக்கிியைய அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட அந்த உரிமைகளைத் துய்ப்பதில், இந்த உரிமைகளின் தன்மையுடன் ஒத்துப்போகக்கூடிய அளவுக்கு மட்டுமே அத்துடன் ஜனநாயகச் சமூகத்தில் பொதுச் சேமநலனை மேம்படுத்தும்

நோக்கத்துக்காகவென்றே சட்டத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய வரையறைகளுக்கு மட்டுமே நாடானது அத்தகைய உரிமைகளை அமைந்தனவாக்கலாம்.

### *உறுப்புரை 5*

1. இந்தப் பொருத்தனையிலுள்ளதெதுவும், இதன்கண் ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகளுள் அல்லது சுதந்திரங்களுள் எவற்றையும் அழிக்கும் அல்லது இந்தப் பொருத்தனையில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவிலும் பார்க்கக் கூடிய ஓர் அளவுக்கு அவற்றை வரையறுக்கும் நோக்குடைய ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான அல்லது ஏதேனும் செயலைப் புரிவதற்கான ஏதேனும் உரிமையை ஏதேனும் நாட்டுக்கு, கூட்டத்தினருக்கு அல்லது ஆளுக்கு அளிப்பதாக உட்கிடையாகப் பொருள் கோடப்படுதலாகாது.

2. சட்டம், சமவாயங்கள், ஒழுங்கு விதிகள் அல்லது வழக்காறு என்பவற்றின் பயனைக் கொண்டு ஏதேனும் நாட்டில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட அல்லது அந்நாட்டில் உள்ள அடிப்படை மனித உரிமைகளின் மீதான கட்டுப்பாடெதுவும் அல்லது வழுவுதலெதுவும், இந்தப் பொருத்தனை அத்தகைய உரிமைகளை ஏற்றங்கீகரிக்கின்றதல்ல அல்லது குறைந்த அளவுக்கே ஏற்றங்கீகரிக்கின்றது என்ற சாக்கின் மீது அனுமதிக்கப்படுதலாகாது.

### *உறுப்புரை 6*

1. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், வேலை புரிவதற்கான உரிமையை ஏற்றங்கீகரிக்கின்றனர். இந்த உரிமையானது, ஆள் ஒவ்வொருவரும் சுயமாகத் தாம் தேர்ந்தெடுக்கின்ற அல்லது ஏற்றுக்கொள்கின்ற வேலையினால் தமது வாழும் வழிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை அளிக்கும் உரிமையையும் உள்ளடக்கும் என்பதுடன், இந்த உரிமையைப் பாதுகாப்பதற்கான ஏற்ற நடவடிக்கைகளைச் சொல்லப்பட்ட நாடாம் கட்சிகள் எடுப்பார்கள்.

2. இந்த உரிமையை முழுமையாக அனுபவிப்பதனை எய்துவதற்கு இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சி ஒன்றினால் எடுக்கப்படவுள்ள நடபடிகள், தொழிநுட்ப, வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுதலையும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும், திடமான பொருளாதார, சமூக, பண்பாட்டு அபிவிருத்தியை எய்துவதற்கான பூட்கைகளையும் நுண்ணியங்களையும் அத்துடன் தனிமனிதனுக்குள்ள அடிப்படை அரசியற் சுதந்திரங்களையும் பொருளாதாரச் சுதந்திரங்களையும் பாதுகாக்கும் நிலைமைகளின் கீழ் முழுமையானதும், ஆக்கபூர்வமானதுமான ஊழியத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

## *உறுப்புரை 7*

இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், குறிப்பாகப் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்ற நேரியவையும் அனுகூலமானவையுமான வேலை நிபந்தனைகளை ஆள் ஒவ்வொருவரும் துய்ப்பதற்கு அவருக்குள்ள உரிமையை ஏற்றங்கீகரிக்கின்றனர்:

(அ) ஆகக் குறைந்த அளவில் பின்வருவனவற்றை எல்லா வேலையாட்களுக்கும் ஏற்பாடு செய்கின்ற ஊதியம் -

(i) எவ்வகையினதுமான வேறுபாடின்றி சமப்பெறுமதியுடைய வேலைக்கு நியாயமான கூலிகளும் சமமான ஊதியமும் அளிக்கப்படுதல்: குறிப்பாக, சமமான வேலைக்குச் சமமான வேதனத்துடன், ஆண்களினால் துய்க்கப்படுகின்ற வேலை நிபந்தனைகளிலும் பார்க்கக் குறைந்தவனவாக இராத வேலை நிபந்தனைள் பெண்களுக்கு உத்தரவாதமளிக்கப்படுதல் வேண்டும்.

(ii) இந்தப் பொருத்தனையின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் வசதியாக வாழும் வழிகளைப் பெறுதல்

(ஆ) பாதுகாப்பான சுகாதாரத்துக்குகொத்தவையுமான வேலை நிலைமைகள் இருத்தல்.

(இ) முதுநிலை தகுதி போன்ற காரணங்களை மட்டும்

கருத்திற்கெடுப்பதற்கு அமைவாக, ஆள் ஒவ்வொருவரும் தமது ஊதியத்தில் தோதானவோர் உயர் மட்டத்துக்கு உயர்த்தப்படுவதற்கான சம வாய்ப்பு உடையவராயிருத்தல்:

(ஈ) ஓய்வும் ஓழிச்சலும், வேலை மணித்தியாலங்களை நியாயமான அளவுக்கு வரையறுத்தலும், வேதனத்துடனான காலாகால விடுமுறை நாட்களும், பொது விடுமுறை நாட்களுக்கான ஊதியமும் அளிக்கப்படுதல்.

*உறுப்புரை 8*

1. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள் பின்வருவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பேற்கின்றனர்:-

(அ) ஆள் ஒவ்வொருவரும் தமது பொருளாதார, சமூக அக்கறைகளை மேம்படுத்திப் பாதுகாப்பதற்காக, சம்பந்தப்பட்ட ஒழுங்கமைப்பின் விதிகளுக்கு அமைய, தொழிற் சங்கங்களை அமைப்பதற்கும் தாம் விரும்பும் தொழிற் சங்கத்தில் சேர்வதற்கும் ஆன உரிமை சட்டத்தினால் விதித்துரைக்கப் பட்டவையும், தேசியப் பாதுகாப்பின் அல்லது பொது ஒழுங்கமைதியின் நலன்களுக்காக அல்லது மற்றவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்காக ஒரு ஜனநாயகச் சமூகத்தில் அவசியமாகவுள்ளவையும் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எவையும் இந்த உரிமையைப் பிரயோகிப்பதன் மீது இடப்படுதலாகாது:

(ஆ) தேசியச் சம்மேளனங்களை அல்லது கூட்டவைகளைத் தாபிப்பதற்குத் தொழிற் சங்கங்ளுக்குள்ள உரிமையும் சர்வதேசத் தொழிற்சங்க ஒழுங்கமைப்புளை அமைப்பதற்கு அல்லது சேர்வதற்குப் பின்னையதற்குள்ள உரிமையும்:

(இ) சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவையும், தேசியப் பாதுகாப்பின் அல்லது பொது ஒழுங்கமைதியின் நலன்ளுக்காக அல்லது மற்றவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும்

பாதுகாப்பதற்காக ஒரு ஜனநாயகச் சமூகத்தில் அவசிய மாகவுள்ளவையும் தவிர்ந்த வரையறைகள் எவற்றுக்கும் அமையவிராது சுயமாகப் பணியாற்றுவதற்குத் தொழிற் சங்கங்களுக்குள்ள உரிமை

(ஈ) வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை, ஆயின், இவ்வுரிமை, குறிப்பிட்ட நாட்டின் சட்டங்களுக்கமையப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

2. ஆயுதப் படையிலோ பொலிஸ் சேவையிலோ அரச நிருவாகத் துறையில் உரிமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக சட்ட ரீதியாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதை இந்த உறுப்புரை தடுக்காது.

3. இந்த உறுப்புரையில் உள்ளதெதுவும், ஒன்று சேர்வதற்கான சுதந்திரம் ஒருங்கிணைவதற்கான உரிமையைப் பாதுகாத்தலும் சம்பந்தமான 1946ஆம் ஆண்டின் சர்வதேசத் தொழில் ஒருங்கமைப்புச் சமவாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தரவாதங்களுக்குப் பங்கம் விளைவிக்கின்ற சட்டமாக்கல் நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது அந்த உத்தரவாதங்களுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய அத்தகயை முறையில் சட்டத்தை ஏற்புடைய தாக்குவதற்கோ, அச்சமவாயத்திற்கான நாடாம் கட்சிகளுக்கு அதிகாரமளித்தலாகாது.

***உறுப்புரை 9***

இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள் பின்வருமாறு ஏற்றங்கீகரிக்கின்றனர்.

***உறுபடபுரை -10***

1. குறிப்பாக ஒரு குடும்பம் தாபிக்கப்படுவதற்காகவும், அக் குடும்பம், தங்கிவாழும் பிள்ளைகளின் பராமரிப்புக்கும் கல்விக்கும் பொறுப்பாக இருக்கும்போதும், அக்குடும்பத்துக்கு இது சமூகத்தின் இயற்கையானதும், அடிப்படையானதுமான தொகுதி அலகாக உள்ளது. இயன்றளவு பரந்த பாதுகாப்பும் உதவியும் அளிக்கப்படுதல் வேண்டும். திருமணம்

செய்யவிருக்கும் வாழ்க்கைத் துணைகளின் சுயமான சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

2. மகப்பேற்றுக்கு முன்னரும் பின்னரும் நியாயமான ஒரு காலப்பகுதியின் போது தாய்மாருக்கு விசேட பாதுாப்பு அளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியின் போது வேலை புரியும் தாய்மாருக்குச் சம்பளத்துடனான லீவு அல்லது போதிய சமூகப் பாதுகாப்பு நலன்களுடனான லீவு வழங்கப்படுதல் வேண்டும்.

3. பெற்றோர் யார் என்பது காரணமாக அல்லது வேற்று நிபந்தனைகளுக்காக ஏதேனும் ஓரங்காட்டுதலின்றி எல்லாப் பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் சார்பில் பாதுகாப்புக்கும் உதவிக்கும் ஆன விசேட வழிவகைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பிள்ளைகளும் இளம் ஆட்களும் பொருளாதார, சமூகச் சுரண்டுதலில் இருந்து பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

அவர்களின் ஒழுக்கத்துக்கு அல்லது சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிக்கும் வேலையில் அல்லது அவர்களது உயிருக்கு ஆபத்தான வேலையில் அல்லது அவர்களது வழமையான வளர்ச்சியைத் தடைசெய்யும் சாத்தியம் கொண்ட வேலையில் அவர்களை வேலைக்கமர்த்துதல் சட்டத்தினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும் என இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளின் ஏற்று அங்கீகரிக்கின்றனர்.

### *உறுப்புரை 11*

1. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், ஆள் ஒவ்வொருவரும் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் போதிய வாழ்க்கைத் தரத்தை (போதியளவு உணவும் உடையும், வீட்டுவசதியும் உட்பட) பெற்றுக் கொள்வதற்கு அவருக்குள்ள உரிமையையும், அவரது வாழ்க்கை நிலைமைகளின் தொடர்ச்சியான சீராக்குதலுக்கான உரிமையையும்

ஏற்றங்கீகரிக்கின்றனர். நாடாம் கட்சிகள் இந்த உரிமையை அனுபவிப்பதனை உறுதிப்படுத்துவதற்கான தோதான நடபடிகளை எடுப்பார்கள் என்பதோடு, சுயமான சம்மதத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒத்துழைப்பின் அத்தியாவசிய முக்கியத்துவத்தை இது தொடர்பில் ஏற்றங்கீகரிக்கின்றனர்.

2. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், ஆள் ஒவ்வொருவரும் பசிப்பிணியிலிருந்து விடுபட்டவராய் இருப்பதற்கு அவருக்குள்ள அடிப்படை உரிமையை ஏற்றங்கீகரித்து, தனிமனித முறையிலும் சர்வதேச ஒத்துழைப்பு மூலமும் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட பின்வருவனவற்றுக்குத் தேவையான வழிவகைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) தொழிநுட்ப, அறிவியல் அறிவை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலமும், போ'ாக்கு நெறிகள் பற்றிய அறிவைப் பரப்புவதன் மூலமும், இயற்கை வளங்களை மிகத்திறமையான வகையில் அபிவிருத்தி செய்து பயன்படுத்துவதை எய்தக்கூடிய அத்தகைய முறையில் கமநல முறைகளை அபிவிருத்தி செய்வதன் மூலமும் அல்லது சீர்திருத்துவதன் மூலமும் உணவு உற்பத்தி முறைகளையும், உணவு மீதப்படுத்தல் முறைகளையும், உணவு விநியோக முறைகளையும் சீராக்குதல்

(ஆ) உணவை இறக்குமதி செய்யும் நாடுகளினதும் உணவை ஏற்றுமதிசெய்யும் நாடுளினதும் பிரச்சினைகளைக் கவனத்திற் கொண்டு, உலகத்திலுள்ள உணவு வளங்களைத் தேவைக்கேற்ப ஒப்புரவான முறையில் விநியோகிப்பதனை உறுதிப்படுத்துதல்.

## *உறுப்புரை 12*

1. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், எய்தக்கூடிய உச்சளவு உடனலத்தையும் உள நலத்தையும் ஆள் ஒவ்வொருவரும் துய்ப்பதற்கு அவருக்குள்ள உரிமையை ஏற்றங்கீகரிக்கின்றனர்.

2. இந்த உரிமையை முழுமையாக அனுபவிப்பதற்கு இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளினால் எடுக்கப்படவுள்ள நடபடிகள், பின்வருவனவற்றுக்கு அவசியமானவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(அ) சாப்பிறப்பு வீதத்தையும் இளமை இறப்பு வீதத்தையும் குறைப்பதற்கும், ஒரு பிள்ளையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் ஆன ஏற்பாடு

(ஆ) சூழற் சுகாதாரத்தினதும் கைத் தொழிற் சுகாதாரத்தினதும் எல்லா அம்சங்களையும் சீராக்குதல்

(இ) கொள்ளைநோய், ஓரிடமக்களைத் தாக்குகின்ற நோய், தொழிற்சார் நோய், வேறு நோய்கள் என்பனவற்றைத் தடுத்தலும், அவற்றுச்குச் சிகிச்சையளித்தலும் அவற்றைக் கட்டுப்படுத்தலும்

(ஈ) நோய் ஏற்படும் சந்தர்ப்பத்தில் எல்லோருக்கும் மருத்துவச் சேவையும் மருத்துவக் கவனிப்பும் அளிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான நிலைமைகளை உருவாக்குதல்.

## *உறுப்புரை 13*

1. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், கல்விபெறுவதற்கு ஆள் ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமையை ஏற்றங்கீகரிக்கின்றனர். மானிட ஆளுமையின் முழு வளர்ச்சிக்கும் அதற்கான மதிப்புணர்ச்சிக்கும் எனக் கல்வியானது நெறிப்படுத்தப்படுதல் வேண்டுமெனவும், மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்குமான கௌரவத்தைப் பலப்படுத்துதல் வேண்டுமெனவும் அவர்கள் உடன்படுகின்றனர். சுதந்திரமான ஒரு சமூகத்தில் எல்லா ஆட்களும் பயனுள்ள வகையில் பங்குபற்றுவதனைக் கல்வியானது இயலச்செய்தல் வேண்டுமென்றும் எல்லா நாடுகளிடையேயும் எல்லா இன, மொழி அல்லது மதக் கூட்டத்தினரிடையேயும் ஆளை ஆள் புரிந்து கொள்ளுதலையும் சகிப்புத் தன்மையையும், நட்புறவையும் மேம்படுத்தல் வேண்டுமென்றும், சமாதானத்தை நிலை நாட்டுவதற்காக ஐக்கிய நாடுகளின்

செயற்பாடுகளை முன்னேற்றுதல் வேண்டுமென்றும் அவர்கள் மேலும் உடன்படுகின்றனர்.

2. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள் இந்த உரிமையை முழுமையாக அனுபவிப்பதனை எய்தும் நோக்குடன் பின்வருமாறு ஏற்றங்கீகரிக்கின்றனர்.

(அ) ஆரம்பக் கல்வி கட்டாயமானதாகவும் எல்லோருக்கும் இலவசமாகக் கிடைக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்;

(ஆ) தொழினுட்ப, வாழ்க்கைத் தொழில்சார் அடைநிலைக் கல்வி உட்பட, அதன் வெவ்வேறு மாதிரிளிதலான இடைநிலைக் கல்வி, தோதான ஒவ்வொரு வழிவகையினாலும் குறிப்பாக இலவசக் கல்வியைப் படிமுறையாக உட்புகுத்துவதன் மூலம், எல்லோருக்கும் பொதுவாகக் கிடைக்கக்கூடிய தாக்கப்படுதலும் பெறக்கூடிய தாக்கப்படுதலும் வேண்டும்.

(இ) உயர் கல்வியானது, தோதான ஒவ்வொரு வழிவகையினாலும், குறிப்பாக இலவசக் கல்வியைப் படிமுறையாக உட்புகுத்துவதன் மூலம், தகுதி அடிப்படையில் எல்லோருக்கும் சமமாகப் பெறக் கூடியதாக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) தமது ஆரம்பக் கல்வியைப் பெறாதுள்ள அல்லது த்மது ஆரம்பக் கல்வியின் முழுக் காலப்பகுதியையும் பூர்த்தி செய்யாதுள்ள அந்த ஆட்களிடையே அடிப்படைக் கல்வியானது இயன்றவரைக்கும் ஊக்குவிக்கப்படுதல் அல்லது தீவிரப்படுத்தப்படுதல் வேண்டும்;

(உ) எல்லா மட்டங்களிலும் பாடசாலை முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்தலானது முனைப்பாகப் பின்பற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில் வழங்குவதற்கான போதிய முறைமையொன்று தாபிக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் ஆசிரியப் பணியாட்டொகுதியினர் பொருளாதார நிலைமைகள் தொடர்ச்சியாகச் சீராக்கப்பட்டு வருதல் வேண்டும்;

3. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், அரசினால் விதிக்கப்படக்கூடிய அல்லது அங்கீகரிக்கப்படக்கூடிய அத்தகைய ஆகக்குறைந்த கல்வித் தரங்களுக்கு இயையவுள்ளவையும் பகிரங்க அதிகாரிகளினால் தாபிக்கப்பட்டவை அல்லாதவையுமான பாடசாலைகளைத் தமது பிள்ளைளுக்குத் தேர்ந்தெடுப்பதற்குப் பெற்றோருக்குள்ள சுதந்திரத்துக்கும், ஏற்புடையதாகின்ற போது சட்டப்படியான பாதுகாவலர்களுக்குள்ள சுதந்திரத்துக்கும், கௌரவம் அளிப்பதற்கும், அத்துடன் பெற்றோரின் சொந்தத் துணிபுகளுக்கு இயைய தமது பிள்ளைகளுக்கு மதக் கல்வியும் ஒழுக்கக் கல்வியும் புகட்டப்படுவதை உறுதிபடுத்துவதற்கும் பொறுப்பேற்கின்றனர்.

4. இந்த உறுப்புரையின் பாகமெதுவும், இந்த உறுப்புரையின் 1ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள நெறிகளைக் கடைப்பிடிப்பதற்கும், கல்வி நிறுவனங்களில் புகட்டப்படும் கல்வி, அரசினால் விதிக்கப்பட்ட அத்தகைய ஆக்குறைந்த தரங்களுக்கு இயையவிருத்தல் வேண்டுமென்ற தேவைப்பாட்டுக்கும் எப்போதும் அமைய, அத்தகைய கல்வி நிறுவனங்களைத் தாபிப்பதற்கும் நெறிப்படுத்துவதற்கும் தனி மனிதர்ளுக்கும் குழுக்களுக்கும் உள்ள சுதந்திரத்தோடு தலையிடும் வகையில் பொருள் கொள்ளப்படுதலாகாது.

*உறுப்புரை 14*

இந்தப் பொருத்தனைக்கான ஒவ்வொரு நாடாம் கட்சியும், ஒரு கட்சியாக வரும் நேரத்தில் கட்டணமின்றிக் கட்டாய ஆரம்பக் கல்வியை அதன் நகர ஆள்புலத்தில் அல்லது அதன் நியாயாதிக்கத்தின் கீழுள்ள வேறு ஆள்புலன்களில் பெறமுடியாததாயுள்ளபோது, எல்லோருக்கும் கட்டணமின்றிக் கட்டாயக் கல்வி புகட்டுவதற்கான கோட்பாட்டை ஒரு விரிவான செயற்திட்டத்தில் நிருணயிக்கப்பட வேண்டிய நியாயமான எண்ணிக்கை யினவான ஆண்டுகளினுள் படிமுறையாகத் தொழிற்படுத்துவதற்கென அந்த விரிவான செயற்திட்டத்தை இரண்டாண்டுகளினுள் வகுத்தமைத்துக் கடைப்பிடிப்பதற்கும் பொறுப்பேற்கின்றது.

*உறுப்புரை 15*

1. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், பின்வருவனவற்றுக்கு ஆள் ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமையை ஏற்றங்கீகரிக்கின்றனர்:-

(அ) பண்பாட்டு வாழ்வில் பங்குபற்றுதல்;

(ஆ) அறிவியல் முன்னேற்றத்தினதும், அதன் பிரயோகங்களினதும் நலன்களைத் துய்த்தல்;

(இ) தாம் கர்த்தாவாகவுள்ள ஏதேனும் அறிவியல்: இலக்கிய அல்லது கலைப்பாங்கான ஆக்கம் என்பனவற்றிலிருந்தும் விளையும் ஒழுக்க, பொருளாதார அக்கறைகளைப் பாதுகாப்பதனால் ஏற்படும் நலனைப் பெறுதல்.

2. இந்த உரிமையை முழுமையாக அனுபவிப்பதற்கு இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளினால் எடுக்கப்படவுள்ள நடபடிகள், அறிவியலையும் பண்பாட்டையும் பேணிக்காத்தல், வளர்த்தல் பரம்புதல் ஆகியவற்றுக்கு அவசியமான நடபடிகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

3. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், அறிவியல் ஆராய்ச்சிக்கும் படைப்பு முயற்சிக்கும் இன்றியமையாததாகவுள்ள சுதந்திரத்துக்கு மதிப்புக் கொடுப்பதற்குப் பொறுப்பேற்கின்றனர்.

4. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், அறிவியல், பண்பாட்டுத் துறைகளில் சருவதேசத் தொடர்புகளையும் ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பதிலிருந்தும் வளர்ப்பதிலிருந்தும் பெறப்படவுள்ள நலன்களை ஏற்றங்கீகரிக்கின்றனர்.

## 4ம் பாகம்

*உறுப்புரை 16*

1. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், பொருத்தனையின் இந்தப் பாகத்திற்கியைய, அவர்கள் மேற்கொண்டுள்ள வழிவகைகளின் மீதான

அறிக்கைகளையும், இதன்கண் ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் பின்பற்றப்படுவதை எய்துவதில் அடைந்த முன்னேற்றத்தைப் பற்றிய அறிக்கைகளையும் சமர்ப்பிப்பதற்குப் பொறுப்பேற்கின்றனர்.

2. (அ) எல்லா அறிக்கைகளும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்; அவர், இந்தப் பொருத்தனையின் ஏற்பாடுகளுக்கிணங்க, அவற்றின் பிரதிகளைப் பொருளாதார, சமூகப் பேரவைக்கு சீர்தூக்கிப் பார்ப்பதற்கென அனுப்பு தல்வேண்டும்.

(ஆ) ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களுக்கு, இந்தச் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களின் உறுப்பினராகவும் உள்ளவர்களான இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் பிரதிகளை, அல்லது அவற்றிலிருந்து எடுக்கப்பட்ட எவையேனும் தோதான பாகங்களை இந்த அறிக்கைகள், அல்லது அவற்றிலிருந்து எடுக்கப்பட்ட பாகங்கள், சொல்லப்பட்ட முகவர் நிலையங்களின் அமைப்புச் சாதனங்களுக்கிணங்க அவற்றின் பொறுப்புடைமைகளினுள் அடக்கும் எவையேனும் கருமங்கள் தொடர்பிலானவையாக இருக்கும் அளவுக்கு அனுப்புதல் வேண்டும்.

### *உறுப்புரை 17*

1. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளையும் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களையும் கலந்தாலோசித்த பின்னர், இந்தப் பொருத்தனை வலுவுக்கு வந்ததிலிருந்து ஓராண்டிற்குள், பொருளாதார, சமூகப் பேரவையினால் தாபிக்கப்படவுள்ள ஒரு நிகழ்ச்சித் திட்டத்துக்கிணங்க, தமது அறிக்கைகளை வெவ்வேறு கட்டங்களில் கொடுத்துதவுதல் வேண்டும்.

2. இந்தப் பொருத்தனையின் கீழான கடப்பாடுகள் நிறைவேற்றப் படவேண்டிய அளவைப் பாதிக்கின்ற காரணிகளையும் இடர்ப்பாடுகளையும் அறிக்கைகளையும் குறிப்பிடலாம்.

3. இந்தப் பொருத்தனைக்கான ஏதேனும் நாடாம் கட்சியினால் ஐக்கிய நாடுகளுக்கு அல்லது ஏதேனும் சிறப்பார்ந்த முகவர் நிலையத்துக்கு இயைபான தகவல் முன்னரே கொடுத்துதவப்பட்டுள்ளவிடத்து, அந்தத் தகவலை மீளத்தருதல் அவசியமாகாது; ஆனால் அவ்வாறு கொடுத்துதவப்பட்ட தகவல் பற்றிய திட்டவட்டமான குறிப்பீடு ஒன்று கொடுக்கப்படுதல் போதுமானதாகும்.

### *உறுப்புரை 18*

மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் பற்றிய துறையில் ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் கீழ் பொருளாதார, சமூகப் பேரவைக்குள்ள பொறுப்புடைமைகளைப் பின்பற்றி அப்பேரவையானது சிறப்பார்ந்த முகவர் நிலையங்களின் செயற்பாட்டு நோக்கெல்லைக்குள் அடங்கும் இந்தப் பொருத்தனையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதனை எய்துவதில் அடையப்பட்ட முன்னேற்றம் பற்றி சிறப்பார்ந்த முகவர் நிலையங்கள் அறிக்கை செய்தல் தொடர்பில் அம்முகவர் நிலையங்களோடு ஒழுங்குகள் செய்யலாம். இந்த அறிக்கைகள், அவற்றின் தகுதிவாய்ந்த அமைப்பகங்களினால் கடைப்பிடிக்கப்பட்ட அத்தகைய தொழிற்பாட்டின் மீதான முடிவுகளும் விதப்புரைகளும் பற்றிய விவரங்களையும் உள்ளடக்கலாம்.

### *உறுப்புரை 19*

பொருளாதார, சமூகப் பேரவை ஆய்வுக்காகவும் பொது விதப்புரைக்காகவும், அல்லது தோதானவாறாகத் தகவலுக்காகவும், 16ஆம் உறுப்புரைகளுக்கிணங்க நாடுகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மனித உரிமைகள் சம்பந்தமான அறிக்கைகளையும் 18ம் உறுப்புரைக்கிணங்கச் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மனித உரிமைகள் சம்பந்தமான அறிக்கைகளையும் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அனுப்பலாம்.

### *உறுப்புரை 20*

இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளும் சம்பந்தப்பட்ட சிறப்பார்ந்த முகவர் நிலையங்களும், 19ஆம் உறுப்புரையின் கீழான ஏதேனும் பொது

விதப்புரையின் மீது அல்லது மனித உரிமைகள் பற்றிய ஆணைக்குழுவின் ஏதேனும் அறிக்கையிலுள்ள அத்தகைய பொது விதப்புரைக்கான ஏதேனும் குறிப்பீட்டின் மீது, அல்லது அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் ஆவணப்படுத்தலின் மீது, பொருளாதார, சமூகப் பேரவையிடம் கருத்துரைகள் சமர்ப்பிக்கலாம்.

### *உறுப்புரை 21*

இந்தப் பொருத்தனையில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகளைப் பொதுவாகப் பின்பற்றுவதனை எய்துவதில் மேற்கொள்ளப்பட்ட வழிவகைகள் பற்றியும் அடையப்பட்ட முன்னேற்றத்தையும் இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளிடமிருந்தும் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களிடமிருந்தும் பெறப்பட்ட பொதுத் தன்மையிலான விதப்புரைகளையும் தகவலின் கருத்துக்களையும் கொண்ட அறிக்கைகளைப் பொருளாதார, சமூகப் பேரவை பொதுப் பேரவைக்குக் காலத்துக்குக் காலம் சமர்ப்பிக்கலாம்.

### *உறுப்புரை 22*

பொருளாதார சமூகப் பேரவை, ஐக்கிய நாடுகளின் வேறு அமைப்பகங்களினதும், தொழிநுட்ப உதவிஅளிப்பதுடன் சம்பந்தப்பட்ட அவற்றின் துணைநிலையான அமைப்பகங்களினதும் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களினதும் கவனத்துக்கு இந்தப் பொருத்தனையைப் பயனுள்ள வகையில் படிமுறையாகத் தொழிற்படுத்துவதற்கு உதவும் சாத்தியம் கொண்ட சருவதேச வழிவகைகளைப் பயன்படுத்துதல் பற்றி, ஒவ்வொன்றும் தன் தகுதித்துறையினுள் முடிவு செய்யும்போது அத்தகைய குழுக்களை உதவக் கூடியவையும், இந்தப் பொருத்தனையின் இந்தப் பாகத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிக்கைகளிலிருந்து எழுகின்றவையுமான எவையேனும் கருமங்களைக் கொண்டு வரலாம்.

### *உறுப்புரை 23*

இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், இந்தப் பொருத்தனையில்

ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை எய்துவதற்கான சருவதேச நடவடிக்கை, சம்பந்தப்பட்ட அரசாங்கங்களின் இணைவுடன் ஒழுங்குபடுத்தப்பட்ட கலந்தாலோசனை, ஆராய்வு நோக்கத்துக்காகச் சமவாயங்களைச் செய்து முடித்தல், விதப்புரைகளைக் கடைப்பிடித்தல் தொழிநுட்ப உதவியைக் கொடுத்துதவுதல், பிராந்தியக் கூட்டங்களையும் தொழிநுட்பக் கூட்டங்களையும் நடாத்துதல் போன்ற அத்தகைய முறைகளையும் உள்ளடக்குமெ்மன உடன்படுகின்றனர்.

### *உறுப்புரை 24*

இந்தப் பொருத்தனையிலுள்ளதெதுவும், ஐக்கிய நாடுகள் பட்டயத்தினதும், ஐக்கிய நாடுகளின் பல்வேறு அமைப்பகங்களின் அந்தந்தப் பொறுப்புடைமைகளை வரையறுக்கின்ற சிறப்பார்ந்த முகவர் நிலையங்களின் அமைப்புகளினதும், இந்தப் பொருத்தனையில் கையாளப்பட்ட கருமங்கள் தொடர்பில் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களினதும் ஏற்பாடுகளை மீறுகின்றதாகப் பொருள் கோடப்படுதலாகாது.

### *உறுப்புரை 25*

இந்தப் பொருத்தனையிலுள்ளதெதுவும், எல்லா மக்களும் தமது இயற்கைச் செல்வத்தையும் வளங்களையும் முழுமையாகவும் சுயமாகவும் துய்ப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அவர்களுக்குள்ள உள்ளார்ந்த உரிமையை மீறுவதாகப் பொருள் கோடப்படுதலாகாது.

## 5ம் பாகம்

### *உறுப்புரை 26*

1. இந்தப் பொருத்தனை, ஐக்கிய நாடுகளின் எவரேனும் நாடாம் உறுப்பினரால், அல்லது அதன் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களுடன் ஏதேனுமொன்றின் உறுப்பினரால், சருவதேச நீதிமன்ற நியதிச்சட்டத்திற்கான ஒரு கட்சியாகும்படி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையினால் வரவழைக்கப்பட்டுள்ள வேறேதேனும் நாட்டினால் கையொப்பமிடப்படக் கூடியதாகும்.

2. இந்தப் பொருத்தனை பின்னுறுதிப்படுத்தலுக்கு அமைந்ததாகும். பின்னுறுதிப்படுத்தற் சாதனங்கள் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

3. இந்தப் பொருத்தனை, இந்த உறுப்புரையின் 1ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நாட்டினால் ஏற்றங்கீகரிக்கப்படக் கூடியதாதல் வேண்டும்.

4. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் ஏற்றுக் கொள்ளற் சாதனமொன்றை ஒப்படைப்பதன் மூலம் ஏற்றுக்கொள்ளுதலானது பயனுறுத்தப் படுதல்வேண்டும்.

5. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம், ஒவ்வொரு பின்னுறுதிப்படுத்தற்சாதனமும் அல்லது ஏற்றுக்கொள்ளற்சாதனமும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டமை பற்றி இந்தப் பொருத்தனையில் கையொப்பமிட்டுள்ள அல்லது இதை ஏற்றங்கீகரித்துள்ள எல்லா நாடுகளுக்கும் அறிவித்தல் வேண்டும்.

### *உறுப்புரை 27*

1. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் முப்பத்தைந்தாவது பின்னுறுதிப்படுத்தற் சாதனம் அல்லது ஏற்றுக்கொள்ளற் சாதனம் ஒப்படைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் மூன்று மாதங்களினுள் இந்தப் பொருத்தனை வலுவுக்கு வருதல் வேண்டும்.

2. முப்பத்தைந்தவது பின்னுறுதிப்படுத்தற் சாதனம் அல்லது ஏற்றுக்கொள்ளல் சாதனம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் இந்த பொறுத்தனையை பின்னுறுதிப்படுத்தும் அல்லது ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு நாட்டிலும் இந்த பொருத்தனையானது, அதன் சொந்த பின்னுறுதிப்படுத்தற்சாதனம் அல்லது ஏற்றுக்கொள்ளற்சாதனம் ஒப்படைக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் மூன்று மாதங்களினுள் வலுவுக்கு வருதல் வேண்டும்.

### *உறுப்புரை 28*

இந்தப் பொருத்தனையின் ஏற்பாடுகள், எவையேனும் வரையறைகளோ விதிவிலக்குகளோ இன்றி, ஒன்றிய நாடுகளின் எல்லாப் பாகங்களுக்கும் நீடித்தல் வேண்டும்.

### *உறுப்புரை 29*

1. இந்தப் பொருத்தனைக்கான ஏதேனும் நாடாம் கட்சியானது, திருத்தமொன்றை முன்மொழிந்து ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் அதனைக் கோப்பிடலாம். செயலாளர் நாயகம், உத்தேசத் திருத்தங்களைச் சீர்தூக்கிப் பார்த்து அவற்றின் மீது வாக்களிக்கும் நோக்கத்துக்காக நாடாம் கட்சிகளைக் கொண்ட ஒரு மாநாட்டைக் கூட்டுவதற்கு அவர்கள் விரும்புகிறார்களாவெனத் தமக்கு அறிவிக்கும்படி வேண்டி, அதன்மேல் இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளுக்கு, எவையேனும் உத்தேசத் திருத்தங்களை அறிவித்தல் வேண்டும். நாடாம் கட்சிகளுள் மூன்றிலொரு பங்கினராவது அத்தகைய மாநாட்டைக் கூட்ட விரும்பும் சந்தர்ப்பத்தில், செயலாளர் நாயகம், ஐக்கிய நாடுகளின் ஆதரவின் கீழ் அந்த மாநாட்டைக் கூட்டுதல் வேண்டும். அந்த மாநாட்டில் சமூகமளித்து வாக்களிக்கும் பெரும்பான்மையினரான நாடாம் கட்சிகளினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட திருத்தம் எதுவும் அங்கீகாரத்துக்கென ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

# சிவில், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு

இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளானவை,

ஐக்கிய நாடுகள் பட்டயத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு இணங்க மானிடக் குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களினதும் உள்ளார்ந்த கௌரவத்தையும் சமமானவையும் பறிக்கொணாதவையும் ஆன உரிமைகளையும் ஏற்றங்கீகரித்தலானது, உலகத்தில் சுதந்திரத்தினதும் நீதியினதும், சமாதானத்தினதும் அடிக்கல்லாகுமென்பதைக் கருத்திற் கொண்டு பார்க்கையில்,

இவ்வுரிமைகள் உள்ளார்ந்த மானிடக் கௌரவத்திலிருந்து எழுகின்றன என்பதை ஏற்றங்கீகரிக்கையில்,

மனித உரிமைகள் பற்றிய அனைத்துலக விளம்பலுக்கு இணங்க, சுதந்திர மனித வர்க்கம், சிவில் அரசியல் சுதந்திரத்தையும், அச்சம் பற்றாக்குறையிலிருந்து சுதந்திரத்தையும் துய்த்தனுபவித்தலென்னும் இலட்சியம். ஒவ்வொருவரும் அவரது சிவில் அரசியல் உரிமைகளையும், அதேபோல் அவரது பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளையும் துய்த்தனுபவிக்கக் கூடிய பக்குவங்களைத் தோற்றுவிப்பதன் மூலமே எய்தப்பெறலாம் என்பதை ஏற்றங்கீகரிக்கையில்,

ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் கீழ், நாடுகள் மனித உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் அனைத்துலக மதிப்பை மேம்படுத்துவதற்கும் அவை கடைப்பிடிக்கப்படுதலை மேம்படுத்துவதற்கும் கொண்டுள்ள கடப்பாட்டை கருத்திற் கொண்டு பார்க்கையில்,

வேறு தனிமனிதர் தாம் எவ்வினத்தைச் சேர்ந்தவரோ அவ்வினத்துக்கும் கடமையைக் கொண்டுள்ள தனிமனிதர், இந்தப் பொருத்தனையில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமைகளின் மேம்பாட்டுக்கும், அவற்றைக்

கடைப்பிடித்தலுக்கும் என அயராதுழைப்பதற்கான பொறுப்பொன்றைக் கொண்டுள்ளார் என்பதை உணருகையில்,

பின்வரும் உறுப்புரைகள் மீது உடன்படுகின்றனர்:-

### *பாகம் 1*

#### *உறுப்புரை 1*

1. எல்லா மக்களும் சுய நிருணய உரிமையைக் கொண்டுள்ளனர். அவ்வுரிமையின் பயனாக, அவர்கள் தங்கள் அரசியல் அந்தஸ்தைத் தீர்மானிக்கின்றனரென்பதுடன், தங்களது பொருளாதார, சமூக, பண்பாட்டு அபிவிருத்தியையும் சுயமாகப் பின்பற்றுகின்றனர்.

2. எல்லா மக்களும், தங்கள் ஈடேற்றத்திற்கென, பரஸ்பர நலனெனும் கோட்பாட்டையும், சர்வதேச சட்டத்தையும் அடிப்படையாய் கொண்டமைந்த சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பிலிருந்து எழுகின்ற எவையேனும் கடப்பாடுகளுக்குப் பங்கமின்றி அவர்களது இயற்கைச் செல்வங்களையும் வளங்களையும் சுயமாகக் கையாளலாம்.

3. சுய ஆளுமையற்ற நம்பிக்கைப் பொறுப்பு ஆள்புலன்களின் நிர்வாகத்துக்கான பொறுப்பைக் கொண்டுள்ளவை உட்பட இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சிகள் சுயநிர்ணய உரிமை சட்டம் பெறுதலை மேம்படுத்துதல் வேண்டுமென்பதுடன், ஐக்கிய நாடுகளின் பட்டயத்தின் ஏற்பாடுகளுடன் இயைந்து செல்லும் வகையில் அந்த உரிமைக்கு மதிப்பளித்தலும் வேண்டும்.

### *பாகம் 11*

#### *உறுப்புரை 2*

1. இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சி ஒவ்வொன்றும் அதனது ஆள்புலத்தினுள்ளும் அதனது நியாயாதிக்கத்துக்கமையவும் உள்ள எல்லாத் தனி மனிதருக்கும், இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயம், தேசிய அல்லது சமூகத்

தோற்றுவாய், ஆதனம், பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து போன்ற எவ்விதமான ஓரங்காட்டுதலுமின்றி இந்தப் பொருத்தனையில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட உரிமையை மதிப்பதற்கும், அதை உறுதிசெய்வதற்கும் பொறுப்பேற்கின்றது.

2. தற்போது இருந்துவரும் சட்டவாக்க அல்லது வேறு வழி வகைகளால் ஏலவே ஏற்பாடு செய்யப்பட்டிராதவிடத்து, இந்தப் பொருத்தனையில் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு வலுவளிப்பதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய சட்டவாக்க அல்லது வேறு வழிவகைகளை அதனது அரசியலமைப்பு வழிமுறைகளுடனும், இந்தப் பொருத்தனையின் ஏற்பாடுகளுடனும் இணங்க மேற்கொள்வதற்கு இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சியொவ்வொன்றும் அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொறுப்பேற்கின்றன.

3. இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சி ஒவ்வொன்றும்:

(அ) எந்த ஒருவரின் இதில் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளனவான உரிமைகளும், சுதந்திரங்களும் மீறப்பட்டுள்ளன. அந்த எவரேனும் ஒருவர் அம்மீறுகையானது அலுவலர் எனும் முறையில் செயற்பட்ட ஆட்களால் புரியப்பட்டது என்பது எவ்வாறிருப்பினும், செம்மையான பரிகாரமொன்றைக் கொண்டிருக்க வேண்டுமென உறுதிப்படுத்துவதற்கும்,

(ஆ) அத்தகைய பரிகாரமொன்றைக் கோருகின்ற எவரேனும் ஒருவர், நாட்டின் சட்டமுறையால் ஏற்பாடு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த நீதிசார், நிருவாக, அல்லது சட்டமியற்று அதிகாரிகளினால் அல்லது வேறு தகுதிவாய்ந்த அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறு, அதற்கான அவரது உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், நீதிமுறைப் பரிகாரம் பெறும் சாத்தியங்களை மேம்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருத்தலும் வேண்டும் என உறுதிப்படுத்துவதாகும்.

(இ) தகுதிவாய்ந்த அதிகாரிகள் வழங்கியுள்ளபோது, அத்தகைய பரிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென உறுதிப்படுத்துவதற்கும் பொறுப்பேற்கின்றது.

*உறுப்புரை 3*

இந்தப் பொருத்தனையில் தரப்பட்டுள்ள எல்லா சிவில், அரசியல் உரிமைகளையும் அனுபவிப்பதற்கும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான சம உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சிகள் பொறுப்பேற்கின்றனர்.

*உறுப்புரை 4*

1. எந்நாட்டின் உள்ளமை உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோ அந்நாடு உய்திருப்பதற்கு ஓர் அச்சுறுத்தலாக அமையும் பகிரங்க இக்கட்டான காலங்களில், இந்தப் பொருத்தன்மைக்குரிய நாடாம் கட்சிகள், இந்தப் பொருத்தனையின் கீழான தங்கள் கடப்பாடுகளிலிருந்து, அந்தரநிலைமை திட்டமாக தேவைப்படுத்தும் அத்துணை அளவுக்கு வழுவி வழி வகைகளை மேற்கொள்ளலாம். ஆயின், அத்தகைய வழிவகைகள் சர்வதேசச் சட்டத்தின் கீழான அவர்களின் வேறு கடப்பாடுகளுடன் ஒவ்வாதனவாயிருக்கலாகாது என்பதுடன், தனியாக இன, நிற, பால், மொழி, மத அல்லது தோற்றுவாயின் ஏதுவின் மீது ஓரங்காட்டுவதலாகாது.

2. இவ்வேற்பாடுகளின் கீழ் 6, 7, 8, (1ம், 2ம் பந்திகள்) 11, 15, 16, 18ம் உறுப்புரைகளிலிருந்து வழுவுதலாகாது.

3. வழுவுதற்கான உரிமையைப் பிரயோகிக்கின்றதான, இந்தப் பொருத்தனைக்குரிய ஏதேனும் நாடாம் கட்சியானது, அது கடைப்பிடிக்காது வழுவியுள்ள ஏற்பாடுகளையும் அங்ஙனம் செய்யத் தூண்டிய காரணங்களையும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் இடைமடுப்போர்க்கூடாக இந்தப் பொருத்தனைக்குரிய மற்றைய நாடாம் கட்சிகளுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். அதே இடைமடுப்போருக்கூடாக அத்தகைய வழுவுதல் எத்தேதியன்று முடிவடைகின்றதோ அத்தேதியன்று மேலும் ஒரு அறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 5*

1. இந்தப் பொருத்தனையிலுள்ளதெதுவும் ஏதேனும், நாட்டை கூட்டத்தினரை அல்லது எவரேனும் ஒருவரை இதில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட எவையேனும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் அழிப்பதற்கு அல்லது இந்தப் பொருத்தனையில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவை விட மேலான அளவுக்கு அவற்றை வரையறுப்பதற்கு என உள்ளப்பட்ட எவையேனும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு அல்லது செயலைப் புரிவதற்கு ஆன ஏதேனும் உரிமையை உட்கிடையாகக் குறிப்பதாகப் பொருள் கோடப்படலாகாது.

2. சட்டம், மரபுகள், ஒழுங்குவிதிகள் அல்லது வழக்காறு என்பவற்றைப் பின்பற்றி, இந்தப் பொருத்தனைக்குரிய ஏதேனும் நாடாம் கட்சியினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட அல்லது அதில் நிலைத்துள்ள எவையேனும் அடிப்படை உரிமைகளின் கீழ் இந்தப் பொருத்தனையானது அத்தகைய உரிமைகளை ஏற்றங்கீகரிக்கவில்லை அல்லது அது அவற்றை ஒரு குறைந்த அளவுக்கே ஏற்றங்கீகரிக்கிறது என்னும் சாக்கில், மட்டுப்பாடெதுவும் அல்லது அவற்றிலிருந்து வழுவுதலெதுவும் இருத்தலாகாது.

**பாகம் 111**

*உறுப்புரை 6*

1. ஒவ்வொரு மனிதனும் உயிர்கொண்டிருத்தற்கான உள்ளார்ந்த உரிமையை கொண்டுள்ளான். இவ்வுரிமையானது சட்டத்தால் பாதுகாக்கப்படுதல் வேண்டும். ஆளெவரதும் உயிர் எதேச்சாதிகாரமாக இழப்பிக்கப்படுதல் ஆகாது.

2. மரண தண்டனையை ஒழிக்காத நாடுகளில்,மிக்க பாரதூரமான குற்றச் செயல்களுக்கு மட்டும், குற்றம் புரியப்பட்ட நேரம் நடைமுறையில் இருந்த சட்டத்துக்கிணங்கவும் இந்தப் பொருத்தனையின் ஏற்பாடுகளுக்கு

முரணாகாதவாறும் இன அழிப்புக் குற்றத்தடுப்பும், தண்டனையும் மீதான சமவாயத்துக்கு முரணாகாதவாறும் மரண தண்டனை விதிக்கப்படலாம். இத்தண்டனையானது தகுதிவாய்ந்ததொரு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டவொரு இறுதியான தீர்ப்பைப் பின்பற்றி மட்டுமே நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

3. உயிரை இழப்பித்தல், இன அழிப்பு என்னும் குற்றத்தை ஏற்படுத்துமாயின், அந்த உறுப்புரையிலுள்ள எதுவும், இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சிகளெதனையும், இன அழிப்புக் குற்றத்தடுப்பும், தண்டனையும் மீதான சமவாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுக்கொண்ட கடப்பாடு எவற்றிலிருந்தும் எவ்வகையிலேனும் வழுவுதற்கு அதிகாரமளிப்பதாக விளங்கப்படுதலாகாது.

4. மரண தண்டனை விதிக்கப்பட்ட எவரேனுமாள், மன்னிப்பு அல்லது தண்டனைக் குறைப்புக் கோருவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும். அரச மன்னிப்பு, மன்னிப்பு அல்லது மரண தண்டனைக்குத் தண்டனைக் குறைப்பு எல்லாவிடயங்களிலும் வழங்கப்படலாம்.

5. பதினெட்டு வயதுக்குக் குறைந்தோரால் புரியப்பட்ட தவறுகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படுதலாகாதென்பதுடன், கர்ப்பிணிப்பெண்கள் மீது அத்தண்டனை நிறைவேற்றப்படுதலுமாகாது.

6. இவ்வுறுப்புரையிலுள்ள எதுவும், இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சிகளெதனாலும் மரண தண்டனை ஒழிப்பு செய்யப்படுதலைத் தாமதப்படுத்துவதற்கு அல்லது தடுப்பதற்கு துணையாகக் கொள்ளப்படுதலாகாது.

*உறுப்புரை 7*

ஆளெவரும், சித்திரவதைக்கோ அல்லது குரூர, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவுப்படுத்தும் நடாத்துகைக்கோ அல்லது தண்டனைக்கோ உட்படுத்தப்படுதலாகாது. குறிப்பாக ஆளெவரும் அவரது சுயமான சம்மதமின்றி வைத்திய அல்லது அறிவியல் ஆராய்ச்சிச் செயல்முறைக்கு உட்படுத்தப்படுதலாகாது.

*உறுப்புரை 8*

1. ஆளெவரும் அடிமையாகக் கொண்டிருக்கப்படுதலாகாது. எம் மாதிரியானதுமான அடிமைத்தனம், அத்துடன் அடிமை வியாபாரம் தடைசெய்யப்படுதல் வேண்டும்.

2. ஆளெவரும் சேவகத்தில் கொண்டிருக்கப்படுதலாகாது.

3. (அ) ஆளெவரும் வலுக்கட்டாய அல்லது கட்டாய ஊழியத்தைப் புரியும்படி தேவைப்படுத்தப்படுதலாகாது.

(ஆ) 3 (அ) என்னும் பந்தியானது, குற்றமொன்றுக்கான தண்டனையொன்றாகக் கடுழியத்துடனான மறியற் தண்டனை விதிக்கின்ற நாடுகளில் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட அத்தகைய தண்டனையொன்றைப் பின்பற்றிக் கடுழியத்தை நிறைவேற்றுவதை விலக்குவதாகக் கொள்ளப்படுதலாகாது.

(இ) இப்பந்தியின் நோக்கத்துக்காக "வலுக்கட்டாய அல்லது கட்டாய ஊழியம்" என்னும் பதம்:

(i) உட்பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்படாததும் நீதிமன்றம் ஒன்றில் சட்டமுறையான கட்டளை யொன்றின் விளைவாய் தடுப்புக்காவலின் கீழிருக்கும் ஆளொருவரால், அல்லது அத்தகைய தடுப்புக்காவலிலிருந்து நிபந்தனையுடன் கூடிய விடுவிப்பின் போது ஆளொருவரால் புரியப்பட வேண்டுமென வழமையாகத் தேவைப்படுத்தப்படுவதுமான ஏதேனும் வேலையை அல்லது சேவையை

(ii) இராணுவத் தன்மையுடையதொன்றான ஏதேனும் சேவையும் உளச்சான்றமை மறுப்பை ஏற்றங்கீகரிக்கும் நாடுகளில், உளச்சான்றமை மறுப்பாளர்கள் சட்டத்தால் செய்யும்படி தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தேசிய சேவையை:

(iii) உயிரைக் கொல்ல அல்லது சமூகத்தின் நற்கதியை அச்சுறுத்தும் இக்கட்டான அல்லது பேரிடர்பாடான விடயங்களில் பெறப்படும் ஏதேனும் சேவையை:

(iv) வழமையான சிவில் கடப்பாடுகளின் பாகமாக அமையும் ஏதேனும் வேலையை அல்லது சேவையை உண்டாக்குதல் ஆகாது.

***உறுப்புரை 9***

1. ஆளொவ்வொருவரும் உடல்சார் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் ஆன உரிமையைக் கொண்டுள்ளார். ஆளெவரும் எதேச்சாதிகாரமாகக் கைது செய்யப்படுதலுக்கோ அல்லது தடுத்து வைக்கப்படுதலுக்கோ உட்படுத்தப்படுதலாகாது. சட்டத்திலுள்ள அத்தகைய ஏதுக்களின் மீதும், சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள அத்தகைய நடவடிக்கை முறைகளுக்கும் இணங்கவும் தவிர ஆளெவரினதும் சுதந்திரம் இழக்கப்படுதலாகாது.

2. கைது செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு, கைது செய்யப்படும் நேரத்தில், அவரைக் கைது செய்வதற்கான காரணங்களை அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்களையும் பிந்தாது அறிவித்தலும் வேண்டும்.

3. குற்றவியற் குற்றச்சாட்டொன்றின் மீது கைது செய்யப்பட்டுள்ள அல்லது தடுத்துவைக்கப்பட்டுள்ள எவரேனும் ஆள், நீதிபதியொருவர் முன்னராக அல்லது நீதிமுறைத் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்குச் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலர் முன்னராகக் கொண்டுவரப்படுதல் வேண்டுமென்பதுடன், நியாயமான காலமொன்றுக்குள் விளக்கமொன்றுக்கு அல்லது விடுவிப்புக்கு உரித்துடையவராதலும் வேண்டும். விளக்கத்தை எதிர்நோக்கியுள்ள ஆட்கள் கட்டுப்பாப்பில் தடுத்துவைக்கப்படுதல் வேண்டுமென்பது பொது விதியாக இருத்தலாகாது. ஆனால் விடுவிப்பானது, விளக்கத்திற்காகத் தோன்றுவதற்கு, சட்டமுறையான நடவடிக்கைகளின் வேறேதேனும் கட்டத்தில் தோன்றுவதற்கான அவ்வாறு சந்தர்ப்பம் எழுந்தால் தீர்ப்பை நிறைவேற்றுவதற்குத் தோன்றுவதற்கான உத்தரவாதத் துக்கமைவானதாக இருக்கலாம்.

4. கைது செய்யப்பட்டமையால் அல்லது தடுத்துவைக்கப்பட்டமையால் அவரது சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட எவரேனும் ஆள், தடுத்து வைக்கப்பட்டமையின் சட்டமுறையாம் தன்மைமீது தாமதமின்றி நீதிமன்றம் முடிவு செய்து அவரைத் தடுத்து வைத்தமை சட்டமுறையற்றதாயின் அவரது

விடுவிப்புக் கட்டளையிடலாமாகையால் அதன்பொருட்டு நீதிமன்றத்தின் முன்னராக வழக்கு நடடிக்கைகளை மேற்கொள்ள உரித்துடையவராதல் வேண்டும்.

5. சட்டமுறையற்ற கைது செய்தலுக்கு அல்லது தடுத்துவைத்தலுக்கு உள்ளான எவரேனும் ஆள் நட்டஈட்டுக்கான வலுவுக்கிடத்தகு உரிமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***உறுப்புரை 10***

1. சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட எல்லா ஆட்களும், மனிதத்தன்மையுடன் நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், மனித உடலின் உள்ளார்ந்த கௌரவத்துக்கான மதிப்புடனும் நடாத்தப்படுதல் வேண்டும்.

2. குற்றஞ்சாட்டப்பட்ட ஆட்கள், புறநடையான சந்தர்ப்பங்களில் தவிர, குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களிலிருந்து பிரித்து வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இன்னமும் குற்றம் காணப்படாத ஆட்களாக அவர்களது நிலைக்குத் தோதான வேறான நடாத்துகைக்கு ஆளாக்கப்படுதலும் வேண்டும்.

(அ) குற்றஞ்சாட்டப்பட்ட பாலிய வயதினர்கள் வயது முதிர்ந்தோர்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நீதித் தீர்ப்புக்கென இயன்றளவு விரைவாகக் கொண்டுவரப்படுதலும் வேண்டும்.

3. மறியல் வைத்தல், முறையானது, கைதிகளை நடாத்துதலையும் உள்ளடக்குமென்பதுடன், அதனது அத்தியாவசிய குறிக்கோள் அவர்களைச் சீர்திருத்துதலும் சமூகப் புனர்வாழ்வளிப்பதுமாதல் வேண்டும். பாலியத்தவறாளிகள் வயது முதிர்ந்தோர்களிலிருந்து வேறாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர்களது வயதுக்கும் சட்ட நிலைக்கும் பொருத்தமாக நடாத்தப்படுதலும் வேண்டும்.

***உறுப்புரை 11***

ஆளெவரும் ஒப்பந்த முறையான கடப்பாடொன்றை நிறைவேற்ற வியலாமையெனும் ஏதுவின் மீது மட்டுமே மறியலுக்கிடப்படுதல் ஆகாது.

*உறுப்புரை 12*

1. நாடொன்றின் ஆள்புலத்துக்குள் ஒவ்வொருவரும் சட்டபூர்வமாக, அவ்வாள்புலத்துக்குள் எங்கும் செல்வதற்கான சுதந்திரத்துக்கான உரிமையையும் தமது வதிவிடத்தைத் தேர்வதற்கான உரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

2. ஆளொவ்வொருவருக்கும் தன் நாடுட்பட எந்நாட்டையும் விட்டு நீங்குவதற்கு உரிமையிருத்தல் வேண்டும்.

3. மேற்சொல்லப்பட்ட உரிமைகள், சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டவை தவிர எவ்வித மட்டுப்பாட்டுக்கும் அமைந்தனவாதலாகாதென்பதுடன், தேசியப் பாதுகாப்பையும், பொது ஒழுங்கமைதியையும், பொது மக்கள் சுகாதாரத்தையும் அல்லது ஒழுக்கத்தையும் அல்லது மற்றவர்களுடைய உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்கு அவசியமானவையுமாகும் அத்துடன் அவை இந்தப் பொருத்தனையில் ஏற்றங்கீரிப்பட்டுள்ள வேறு உரிமைகளுடனும் ஒத்துச் செல்வனவாகும்.

4. ஆளெவரும், தமது சொந்த நாட்டிற்கு வருவதற்கான உரிமையை ஏதேச்சாதிகாரமாக இழப்பித்தல் ஆகாது.

*உறுப்புரை 13*

இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சியொன்றின் ஆள்புலத்துக்குள் சட்டபூர்வமாக இருக்கும் வேற்று நாட்டவன், சட்டத்துக்கிணங்க எடுக்கப்படும் முடிபொன்றைப் பின்பற்றி மட்டுமே அங்கிருந்து வெளியேற்றப்படலாமென்பதுடன், தேசியப் பாதுகாப்பென்னும் காரணம் வேறுவகையாகத் தேவைப்படுத்துமிடத்து தவிர தமது வெளியேற்றத்துக்கெதிரான காரணங்களைச் சமர்ப்பிக்கவும் தகுதிவாய்ந்த அதிகாரியால் அல்லது தகுதி வாய்ந்த அதிகாரியினால் விசேடமாகப் பதவி குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவரால் அல்லது ஆட்களால் தமது விடயம் மீளாயப்படுவதற்கும் அந்நோக்கத்துக்காக அவர்கள் முன் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கும் அனுமதிக்கப்படுதலும் வேண்டும்.

***உறுப்புரை 14***

1 எல்லோரும் நீதிமன்றத்தின் முன்னரும் நியாயசபைகள் முன்னரும் சமம். ஒவ்வொருவருக்குமெதிரான ஏதேனும் குற்றவியற் குற்றச்சாட்டைப் பற்றிய அல்லது சட்டத்துடர்ச்சியொன்றில், அவருடைய உரிமைகளும் கடப்பாடுகளும் பற்றிய தீர்மானத்தில், அவர் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தகுதிவாய்ந்த, சுயேச்சையான, பாரபட்சமற்ற நியாயசபையொன்றினால் நேரிய, பகிரங்கக் கேட்புக்கு உரித்துடையவராதல் வேண்டும். சனநாயக சமூகமொன்றில் ஒழுக்கம், பொது ஒழுங்கமைதி அல்லது தேசியப் பாதுகாப்பு என்னும் காரணங்களுக்காக அல்லது திறத்தினர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைகளில் நலன் அவ்வாறு தேவைப்படுத்துமாயின், அல்லது பிரசித்தம் செய்தல் நீதியின் நலனைப் பங்கப்படுத்தும் சிறப்பான சந்தர்ப்பங்களில், நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் கட்டாயமாக அவசியமாகும். அந்த அளவுக்குப் பத்திரிகைளர்களும் பொதுசனங்களும் விலக்கிவைக்கப்படலாம். ஆனால் பாலிய வயதினரின் நலன் வேறுவகையாகத் தேவைப்படுத்துமிடத்து அல்லது வழக்கு நடவடிக்கைகள் மணம்சார் பிணக்குகளுடன் அல்லது பிள்ளைகளின் காப்பதம் தொடர்புடையதாயிருக்குமிடத்துத் தவிர, குற்றவியல் வழக்கொன்றில் அல்லது சட்டத்துடர்ச்சியொன்றில் வழங்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பு பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.

2. குற்றவியல் தவறொன்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆளொவ்வொருவரும் சட்டத்துக்கிணங்கக் குற்றம் எண்பிக்கப்படும்வரை குற்றமற்றவரென ஊகிப்பதற்கு உரிமையுடையவராதல் வேண்டும்.

3. ஆளொவ்வரும் அவருக்கெதிரான குற்றவியற் குற்றச்சாட்டெதனையும் தீர்மானிக்கையில் நிறைவாக ஒரே சமத்துவமாகப் பின்னால்ஆகக்குறைந்த உத்தரவாதங்களுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(அ) அவர் விளங்கக்கூடிய மொழியில், அவருக்கெதிரான குற்றச் சாட்டின் தன்மையையும் காரணத்தையும் பிந்தாமலும் விளம்பாமலும் அறிவிக்கப்படுவதற்கும்:

(ஆ) தனது எதிர்வாதத்தைத் தயாரிப்பதற்காகப் போதுமான நேரத்துக்கும் வசதிகளுக்கும் அத்துடன் தான் விரும்பும் சட்டவறிஞர்களுடன் பேசுவதற்கும்:

(இ) தேவையற்ற தாமதமின்றி விளங்கப்படுவதற்கும்:

(ஈ) தம் முகதாவில் விளங்கப்படுவதற்கும் தாமே தமக்கென அல்லது தமது சொந்த விருப்பத்தில் பெறப்பட்ட சட்ட உதவிகள் மூலமாக எதிர்வாதம் செய்வதற்கும் சட்ட உதவி அவருக்கு இல்லாதபோது, இதற்கான அவரது உரிமை பற்றி அறிவிக்கப்படுவதற்கும், நீதியின் நலன் எவ்விடயத்திலேனும் அவ்வாறு தேவைப்படுமிடத்து அவருக்குச் சட்ட உதவி குறித்தொதுக்கப்படுவதற்கும் அத்துடன் அதற்கெனப் பணம் செலுத்துவதற்கு அவரிடம் போதிய பணம் இல்லாத அத்தயை எவையேனும் விடயங்களில் அவரால் பணம் செலுத்தப்படாது சட்ட உதவி குறித்தொதுக்கப்படுவதற்கும்:-

(உ) அவருக்கெதிரான சாட்சிகளை அவர் சார்பில் அவருக்கெதிரான சாட்சிகள் என்னுமாப்போன்ற அதே நிலைமையின் கீழ், சாட்சிகளின் வருகையையும் விசாரணையையும் பெற்றுக்கொள்வதற்கு என விசாரணையை செய்வதற்கும் அல்லது விசாரணை செய்விப்பதற்கும்,

(ஊ) நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழியை அவர் விளங்கிக்கொள்ளவோ அல்லது பேசவோ முடியாவிடின் ஒரு பேச்சு மொழிபெயர்ப்பாளரின் உதவியைச் செலவின்றிப் பெற்றுக்கொள்வதற்கும்:

(எ) தனக்கெதிராகச் சான்றளிக்க அல்லது குற்ற ஒப்புக்கோடலைச் செய்ய கட்டாயப்படுத்தப்படுவதற்கும்.

5. பாலிய வயதினர்களின் விடயத்தில், நடவடிக்கை முறையானது அவர்களது வயதைக் கருத்திற் கொண்டு, அவர்களுக்குப் புனர்வாழ்வளித்தலை மேம்படுத்த விரும்பக்கூடிய அத்தகையதானதாதல் வேண்டும்.

6. குற்றமொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும், அவரது குற்றத் தீர்ப்பையும் தண்டனைத் தீர்ப்பையும் சட்டத்துக்கிணங்க உயர்ந்த நியாயசபையொன்றினால் மீளாய்விப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. ஆளொருவர், இறுதிமுடிபொன்றினால் குற்றவியல் தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளபோது அத்துடன் அதனையடுத்து, ஒரு புதிய அல்லது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு, நீதிப்பறழ்வொன்று நிகழ்ந்துள்ளதென முடிவாகக்காட்டுகின்ற ஏதுவின் மீது அவரது குற்றத் தீர்ப்பு எதிர் மாறாக்கப்பட்ட போது அல்லது அவர் மன்னிக்கப்பட்டபோது, அத்தகைய குற்றத்தீர்ப்பின் விளைவாகத் தண்டனையனுபவித்த ஆளுக்கு அறியப்படாத நிகழ்வை நேரகாலத்தில் தெரியப்படுத்தப்படாமைக்கு முற்றாக அல்லது பகுதியளவில் அவரும் பாத்திரவாளியாவாரென எண்பிக்கப்பட்டாலொழிய சட்டத்துக்கிணங்க நட்டஈடு வழங்கப்படுதல் வேண்டும்.

8. ஒவ்வொரு நாட்டினதும் சட்டத்துக்கும் தண்டனைக்குரிய நடவடிக்கை முறைக்கும் இணங்க, எவரேனுமாள் எந்தத் தவறுக்காக ஏலவே இறுதியாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலோ அல்லது விடுதலை செய்யப்பட்டிருந்தாலோ அந்தத் தவறொன்றுக்காக அவர் மீண்டும் விளங்கப்படவோ அல்லது தண்டிக்கப்படவோ ஆளாதலாகாது.

9. இந்தப் பொருத்தாணை(8)

*உறுப்புரை 15*

1. தவறொன்று புரியப்படும் நேரத்தில் தேசியச் சட்டத்தின் கீழ் அல்லது சர்வதேசச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றவியல் தவறொன்றாக அமையாத ஏதேனும் செயல் அல்லது செய்யாமை காரணமாக ஆளெவரும் ஏதேனும் குற்றவியல் தவறுக்குக் குற்றவாளியாகக் கொள்ளப்படுதல் ஆகாது. அல்லது குற்றவியல் தவறு புரியப்பட்ட நேரத்தில் ஏற்புடையதாயிருந்த தண்டனையை விடக் கடுமையானவொரு தண்டனை விதிக்கப்படுதலுமாகாது. தவறு புரியப்பட்டதையடுத்து குறைந்த தண்டனை விதித்தலுக்கெனச் சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டால் தவறாளி அதனால் நலன் பெறுதல் வேண்டும்.

2. தேசங்கள் என்ற சமுதாயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் பொதுவான நெறிகளுக்கிணங்க எச்செயல் அல்லது செய்யாமை, அது புரியப்பட்ட நேரத்தின் போது குற்றவியலானதாக இருந்திருக்குமோ, அச்செயலுக்காக அல்லது செய்யாமைக்காக எவரேனும் ஆளை

விளங்குதலையும் அவருக்குத் தண்டனையளித்தலையும் இவ்வுறுப்பு ரையிலுள்ள எதுவும் பங்கப்படுத்தலாகாது.

***உறுப்புரை 16***

ஒவ்வொருவரும், சட்டத்தின் முன்னே, ஆளொருவராக ஏற்றங்கீகரிக் கப்படுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***உறுப்புரை 17***

1. ஆளெவரும், அவரது அந்தரங்க விடயங்களில், குடும்பத்தில், வீட்டு விடயங்களில் அல்லது கடிதப்போக்குவரத்தில் ஏதேச்சாதிகாரமாக அல்லது சட்டமுறையற்றவாறு தலையிடப்படுவதற்கு ஆளாக்கப்படுதலோ அல்லது அவரது மாண்பு அல்லது மதிப்பு நிலைமீதான சட்டமுறையற்ற தகர்ப்புக்கு ஆளாக்கப்படுதலோ ஆகாது.

2. ஆளொவ்வொருவரும் அத்தகைய தலையீட்டுக் அல்லது தகர்ப்புக்கு எதிராகச் சட்டப் பாதுகாப்புக்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

***உறுப்புரை 18***

1. ஆளொவ்வொருவரும், சிந்தனைக்கான, மனச்சாட்சிக்கான, அத்துடன் மதச் சுதந்திரத்துக்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். இந்த உரிமையானது, தனது விருப்புக்குரிய மதத்தை அல்லது நம்பிக்கையைத் தனியாகவோ அல்லது மற்றவர்களுடன் சமூகமாகவோ அல்லது பகிரங்கமாகவோ அல்லது அந்தரங்கமாகவோ கொண்டிருப்பதற்கு அல்லது தமதாக்கிக் கொள்வதற்கும், தமது மதத்தை அல்லது நம்பிக்கையை வழிபாட்டில் அனுட்டித்தலில், அனுசரித்தலில் அத்துடன் போதனையில் வெளிப்படுத்துவதற்கும் ஆன சுதந்திரத்தை உள்ளடக்குதல் வேண்டும்.

2. ஆளெவரும், அவரது விருப்புக்குரிய ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கு அல்லது தமதாக்கிக் கொள்வதற்கு ஆன சுதந்திரத்தைச் சீரழிப்பதற்கான வலுக்கட்டுக்கு உட்படுத்தப்படுதலாகாது.

3. ஒருவருடைய மதத்தை அல்லது நம்பிக்கையை வெளிப்படுத்து வதற்கான சுதந்திரமானது, சட்டத்தால் விதித்துரைக்கப்பட்டவையும்,

பொதுமக்கள் ஏமக்காப்பு, ஒழுங்கு, சுகாதாரம் அல்லது ஒழுக்கம் அல்லது மற்றையோரது அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்கு அவசியமாகக்கூடியவையும் ஆன அத்தகைய வரையறைகளுக்கு மட்டுமே அமைவாக இருத்தல் வேண்டும்.

4. இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சிகள், பெற்றோரின் சுதந்திரத்துக்கும், ஏற்புடையவிடத்து சட்டமுறைப் பாதுகாவலர்களின் சுதந்திரத்துக்கும், அவர்களது சொந்தத் துணிவுகளுக்கு இயைபா அவர்களது பிள்ளைகளின் மத, ஒழுக்கக்கல்வியை உறுதிப்படுத்துவதற்காக, மதிப்பளிக்கப் பொறுப்பேற்றுள்ளனர்.

***உறுப்புரை 19***

1. ஆளொவ்வொருவரும், தலையீடின்றி அபிப்பிராயங்களைக் கொண்டிருக்க உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

2. ஆளொவ்வொருவரும் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரத்துக்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். இந்த உரிமை, எல்லை வரையறையின்றி, ஒன்றில் வாய்மொழி மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ அல்லது ஓவிய வடிவமாகவோ அல்லது அவரது விருப்பில் வேறேதேனும் முறைமூலமாகவோ அச்சிடுதல் மூலமாகவோ எல்லாவிதமான தகவல்களையும் எண்ணக் கருத்துக்களையும் கோரவும், பெறவும் பரப்பவும் ஆன சுதந்திரத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

3. இவ்வுறுப்புரையின் 2ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட உரிமைப்பிரயோகம், தம்மகத்தே சிறப்பாக கடமைகளையும் பொறுப்புடைமைகளையும் கொண்டுள்ளது. ஆகையால் அது குறித்த சில மட்டுப்பாடுகளுக்கு அமைவாக இருக்கலாம். ஆனால் இவைகள் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகையனவாக மட்டுமே இருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றுக்கு அவசியமானவையும் ஆகும்.

(அ) மற்றையவர்களுடைய உரிமைகளுக்கான அல்லது மதிப்பு நிலைக்கான மதிப்புக்காக:

(ஆ) தேசியப் பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்மைதி, பொது மக்கள் சுகாதாரம் அல்லது ஒழுக்கம் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக.

*உறுப்புரை 20*

1. யுத்தத்துக்கான பிரச்சாரமெதுவும் சட்டத்தால் தடை செய்ய வேண்டும்.

2. ஓரங்கட்டுதலை, பகைமையை அல்லது வண்முறையைத் தூண்டுவதாக அமையும் தேசிய, இன, மதத் துவேசத்தை பரிந்துரைக்கின்றமை சட்டத்தால் தடை செய்யப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 21*

அமைதியான முறையிலே ஒன்றுகூடுவதற்கான உரிமை ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும். சட்டத்துக்கு இயைபாக விதித்துரைக்கப்பட்டவையும், அத்துடன் சனநாயக சமூகமொன்றில், தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஏமக்காப்பு, பொது ஒழுங்கமைதி நலன்களுக்காக, பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் அல்லது மற்றையோரது உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாக்கும் நலன்களுக்காக அவசியமானவையும் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எவையும் இவ்வுரிமைப் பிரயோகத்தின் மீது இடப்படாது விடலாம்.

*உறுப்புரை 22*

1. ஆளொவ்வொருவரும், தமது நலன்களைப் பாதுகாப்பதற்காகத் தொழிற்சங்கங்களை அமைக்கவும் அதில் சேரவும் ஆன உரிமை உட்பட மற்றையோருடன் ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரத்துக்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. சட்டத்தால் விதித்துரைக்கப்பட்டவையும், சனநாயக சமூகமொன்றில் தேசியப் பாதுகாப்பின், பொது ஏமக்காப்பின், பொது ஒழுங்கமைதியின் நலன்ளுக்காக, பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் அல்லது மற்றையோரது உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாக்கும் நலன்களுக்காக அவசியமானவையும் தவிர்ந்த, மட்டுப்பாடுகள் எவையும் இவ்வுரிமைப் பிரயோகத்தின்மீது இடப்படாது விடலாம். இவ்வுறுப்புரையானது, ஆயுதம் தாங்கிய படையினதும் பொலிசுப் படையினதும் உறுப்பினர் இவ்வுரிமையைப் பிரயோகிப்பதில் அவர்கள்மீது சட்டபூர்வமான மட்டுப்பாடுகள் விதிக்கப்படுதலைத் தடுப்பதாகாது.

3. இவ்வுறுப்புரையிலுள்ள எதுவும், ஒருங்குசேருவதற்கான சுதந்திரமும் ஒழுங்கமைப்பதற்கான உரிமைப் பாதுகாப்பும் பற்றிய 1948ஆம் ஆண்டின் சர்வதேசத் தொழில் ஒழுங்கமைப்புச் சமவாயத்துக்குரிய நாடாம் கட்சிகளை அந்தச் சமவாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தரவாதங்களுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய சட்டநடவடிக்கைகளை எடுக்கவோ அல்லது பங்கம் விளைவிக்கக்கூடியவாறான அத்தகைய ஒரு விதத்தில் சட்டத்தை ஏற்புடையதாக்கவோ அதிகாரமளிப்பதாகாது.

### *உறுப்புரை 23*

1. குடும்பமானது சமுதாயத்தின் இயல்பும் அடிப்படையான தொகுதி அலகு என்பதுடன், அது சமுதாயத்தாலும் அரசாலும் பாதுகாக்கப்படுதற்கு உரித்துடையதாகும்.

2. திருமண வயது உடைய ஆண்களும் பெண்களும் திருமணம் செய்வதற்கும் குடும்பமொன்றைத்தாபிப்பதற்குமான உரிமை ஏற்றங்கீ-கரிக்கப்படுதல் வேண்டும்.

3. வாழ்க்கைத் துணையாக வர முன் வருவோரின் சுயமானதும் முழுமையானதுமான சம்மதமின்றித் திருமணம் எதுவும் செய்துகொள்ளப்படுதலாகாது.

4. இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சிகள், திருமணம் பற்றி, திருமணத்தின் போது, அத்துடன் மணநீக்கத்தில் வாழ்க்கைத் துணையின் உரிமைகளதும் பொறுப்புடைமைகளதும் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்குத் தோதான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். மணநீக்கத்தின் விடயத்தில் எவையேனும் பிள்ளைகளின் அவசியமான பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

### *உறுப்புரை 24*

1. ஒவ்வொரு பிள்ளையும், இனம், நிறம், பால், மொழி, தேசிய அல்லது சமுதாயத் தோற்றுவாய், ஆதனம் அல்லது பிறப்புப்பற்றிய ஓரங்காட்டுதல் எதுவுமின்றி அவரது குடும்பத்திலிருந்தும் சமுதாயத்திலிருந்தும் அரசிடமிருந்தும் பராயமடையாதவர் என்ற அவரது நிலை தேவைப்படுத்தும் அத்தகைய அளவினதான பாதுகாப்புக்காக உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. பிள்ளையொவ்வொன்றும் பிறந்த பின்னர் உடனடியாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பெயரொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

3. பிள்ளையொவ்வொன்றும் தேசியமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடையதாகும்.

***உறுப்புரை 25***

ஒவ்வொரு பிரசையும், 2ஆம் உறுப்புரையில் குறிப்பிட்ட வேறுபாடுகள் எவையுமின்றியும் நியாயமற்ற மட்டுப்பாடுகளின்றியும்:

(அ) நேரடியாகவோ அல்லது சுயமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமோ பகிரங்க அலுவல்களை நடாத்துதலில் பங்குபற்றுவதற்கும்:

(ஆ) தேருநர்களின் சுயமான கருத்துத் தெரிவித்தலை உத்தரவாதஞ்செய்வதான சர்வசன, சம வாக்குரிமை மூலமானவையும் இரகசிய வாக்கெடுப்பு மூலமாக நடாத்தப்படுகின்றவையும், காலத்துக்குக் காலம் நடைபெறுகின்றவையுமான மெய்யான தேர்தலில் வாக்களிப்பதற்கும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும்:

(இ) அவரது நாட்டில், பொதுவான சமநிலைமை நியதிகளின்மீது பகிரங்க சேவையில் சேர்ந்து கொள்வதற்கும், உரிமையையும், வாய்ப்புரிமையும் கொண்டிருத்தல் வேண்டும்.

***உறுப்புரை 26***

யாவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என்பதுடன், ஓரங்காட்டு-தலின்றிச் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவராவர். இது சார்பாக, சட்டமானது எவ்விதமான ஓரங்காட்டுதலையும் தடைசெய்தல் வேண்டுமென்பதுடன், ஆட்களெல்லோருக்கும் இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயம் தேசிய அல்லது சமூகத் தோற்றுவாய், ஆதனம், பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து என்பவை போன்ற ஏதேனும் ஏதுவின் மீதான ஓரங்காட்டுதலுக்கெதிரான சமமானதும், செம்மையானதுமான பாதுகாப்பை உத்தரவாதம் செய்தலும் வேண்டும்.

*உறுப்புரை 27*

இனப்பிரிவுசார், மதம்சார் அல்லது மொழிசார் சிறுபான்மையினர் உள்ள அந்நாடுகளில், அத்தகைய சிறுபான்மையைச் சேர்ந்த ஆட்களுக்கு, அவர்களது பிரிவைச் சேர்ந்த மற்றைய உறுப்பினர்களுடன் சேர்ந்து இனமாகத் தங்களது சொந்தப் பண்பாட்டைத் துய்ப்பதற்கு, தங்களது சொந்த மதத்தைப் பின்பற்றி அனுசரிப்பதற்கு அல்லது தங்களது சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கு ஆன உரிமை மறுக்கப்படுதல் ஆகாது.

பாகம் IV

*உறுப்புரை 28*

1. இதன் பின்னர் இந்தப் பொருத்தனையில் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும் "மனித் உரிமைகள் குழு" ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.அது பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டு மென்பதுடன், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

2. தற்போதைய பொருத்தனைக்குரிய நாடாம் கட்சிகளின் சுதேசிகளைக் குழு கொண்டமைதல் வேண்டுமென்பதுடன், அவர்கள் உயர்ந்த ஒழுக்கத்தையும்மனித உரிமைகள் என்னும் துறையில் மதிக்கப்பட்ட திறனையும் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்: சட்டத்துறையில் அனுபவம் கொண்ட சில ஆட்கள் பங்குகொள்வதன் பயன்பாட்டையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

3. குழுவின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் தனிப்பட்ட தன்மையில் சேவையாற்றுதலும் வேண்டும்.

*உறுப்புரை 29*

1. இருபத்தெட்டாம் உறுப்புரையில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ளவர்களும், இந்நோக்கத்துக்கென இந்தப் பொருத்தனைகுரிய நாடாம் கட்சிகளால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களும் ஆன ஆட்களின் நிரலொன்றிலிருந்து குழுவின்

உறுப்பினர்கள், இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

2. இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சி ஒவ்வொன்றும் இரு ஆட்களுக்கு மேற்படாத ஆட்களைப் பெயர்குறித்து நியமிக்கலாம். இந்த ஆட்கள் பெயர் குறித்து நியமிக்கும் அரசின் சுதேசிகளாகவிருத்தல் வேண்டும்.

3. ஆளொருவர் மீளப் பெயர் குறித்து நியமிக்கப்படுதற்குத் தகவுள்ளவராதல் வேண்டும்.

*உறுப்புரை 30*

1. இந்தப் பொருத்தனை செயலுக்குட்பட்ட தேதியின் பின்னர் ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் ஆரம்பத் தேர்தல் நடாத்தப்படுதல் வேண்டும்.

2. முப்பத்திநான்காம் உறுப்புரைக்கிணங்க வெளிப்படுத்தப்பட்டுள்ள வெற்றிடமொன்றை நிரப்புவதற்கான தேர்தலொன்று தவிர, குழுவுக்காக ஒவ்வொரு தேர்தலிலும் அத்தேதிக்கு ஆகக்குறைந்தது நான்கு மாதங்களுக்கு முன்னர், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகமானவர், இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சிகளுக்கு, குழு உறுப்பினர்களுக்கான அவர்களது நியமனப்பத்திரங்களை மூன்று மாதங்களுக்குள்ளாகச் சமர்ப்பிக்கும்படி எழுத்திலான கோரிக்கையை அனுப்புதல் வேண்டும்.

3. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம், அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எல்லா ஆட்களினதும் பெயர்களை அகரவரிசைக்கிரமத்தில், அவர்களைப் பெயர்குறித்து நியமித்த நாடாம் கட்சிகளை எடுத்துக்கூறி ஒரு நிரலைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அதை இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சிகளுக்கு ஒவ்வொரு தேர்தல் தேதிக்கும் ஒரு மாதத்துக்கு முன்னராகச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

4. குழுவின் உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் ஐக்கிய நாடுகள் தலைமையலுவலகத்தில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தால் கூட்டப்படும் இந்தப் பொருத்தனைக்குரிய நாடாம் கட்சிகளின் கூட்டமொன்றில் நடாத்தப்படுதல் வேண்டும். இந்தப் பொருத்தனைக்குரிய

நாடாம் கட்சிகளின் மூன்றில் இரண்டு பங்கு வட்ட நடப்பெண்ணாக அமைய வேண்டிய அக்கூட்டத்தில் குழுவுக்குத் தேர்ந்தெடுக்ப்படும் ஆட்கள், அங்கு சமூகமளித்து வாக்களித்து நாடாம் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூடிய எண்ணிக்கையிலான வாக்குகளையும் வாக்குகளின் முழுமையான பெரும்பான்மையொன்றையும் பெற்ற நியமத்தர்களாவர்.

*உறுப்புரை 31*

1. குழுவானது ஒரே நாட்டிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட சுதேசிகளை உள்ளடக்காது விடலாம்.

2. குழுவினது தேர்தலில் உறுப்புரைப் புவியியல் அடிப்படையில் ஒப்புரவாக இருக்கும் வண்ணம் பகிர்வதற்கும், வெவ்வேறு வகையினதான நாகரிகப் பண்பின் பிரதிநிதித்துவத்துக்கும், பிரதான சட்டமுறைகளுக்கும் கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 32*

1. குழுவின் உறுப்பினர்கள் நான்கு ஆண்டுகளைக் கொண்டவொரு காலத்துக்கெனத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். மீளப் பெயர் குறித்து நியமிக்கப்படின், அவர்கள் மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் ஆயின், முதலாவது தேர்தலில் தேர்ந்தேடுக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒன்பது உறுப்பினர்களின் பதவிக்காலங்கள், இரண்டாண்டுகள் கொண்ட காலப்பகுதி முடிவடைவதன் மேல் முடிவுறுதல் வேண்டும். முதலாவது தேர்தலை உடனடுத்துப் பின்னர், இந்த ஒன்பது உறுப்பினர்களது பெயர்கள் 30ஆம் உறுப்பரையின் 4ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்டத்தில் தவிசாளரினால் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

2. பதவிக்கால முடிவில் இந்தப் பொருத்தனையின் இப்பாகத்திலுள்ள முற்போந்த உறுப்புரைகளுக்கு இணங்கத்தேர்தல்கள் நடாத்தப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 33*

1. ஏனைய உறுப்பினர்களின் ஏகமனதான அபிப்பிராயத்தில் குழு உறுப்பினரொருவர் தற்காலிக இயல்பினதான வராமை தவிர்ந்த

வேறேதேனும் காரணத்திற்காகத் தமது பணிகளை நிறைவேற்றாதொழிந்துள்ளாரெனின், குழுவின் தவிசாளரானவர், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும்: பின்னர் அவர் அவ்வுறுப்பினரின் ஆசனம் வேறானதென விளம்புதல் வேண்டும்.

2. குழுவின் உறுப்பினரொருவர் இறக்குமிடத்து அல்லது பதவி துறக்குமிடத்து, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்குத் தவிசாளர் உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அவர், அவ்வுறுப்பினர் இறந்த தேதியிலிருந்து அல்லது எந்தத் தேதியிலிருந்து பதவிதுறப்பு, பயனுடையதாகுமோ அந்தத் தேதியிலிருந்து அவ்வாசனம் வெற்றாகியது என விளம்புதல் வேண்டும்.

***உறுப்புரை 34***

1. முப்பத்துமூன்றாம் உறுப்புரைக்கு இணங்க வெற்றிடம் ஒன்று விளம்பப்பட்டும், மாற்றீடு செய்யப்படவேண்டிய உறுப்பினரின் பதவிக்காலமானது வெற்றிடம் விளம்பப்பட்டு ஆறுமாத காலத்திற்கிடையில் முடிவுறாதும் விட்டால் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம், இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள் ஒவ்வொன்றிற்கும் அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவித்த பின்னர் இரண்டு மாதங்களுக்குள் அவ்வெற்றிடத்தினை நிரப்பும் நோக்கத்திற்காக 29ஆம் உறுப்புரைக்கு இணங்க அந்த நாடாம் கட்சிகள் பெயர் நியமனங்களைச் சமர்ப்பிக்கலாம்.

2. அவ்வாறு பெயர் குறித்து நியமித்த ஆட்களின் பெயர்களை அகரவரிசை ஒருங்கில் நிரல் தயாரித்து இந்தப் பொருத்தனையின் நாடாம் கட்சிகளுக்கு ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் சமர்ப்பித்தல் வேண்டும். அதன்பின் வெற்றிடத்தை நிரப்புவதற்கான தேர்தல் இந்தப் பொருத்தனையின் இப்பாகத்திலுள்ள இயைபான ஏற்பாடுகளுக்கு இணங்க இடம்பெறுதல் வேண்டும்.

3. முப்பத்துமூன்றாம் உறுப்புரைக்கிணங்க விளம்பப்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தெரிவு செய்யப்பட்ட குழுவின் உறுப்பினரொருவர் அவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் குழுவில் தனது ஆசனத்தை வெறிதாக்கிய உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

***உறுப்புரை 35***

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் குழுவின் உறுப்பினர்கள் குழுவுக்குள்ள பொறுப்புடைகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு, பொதுச் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மேல் ஐக்கிய நாடுகள் வளங்களிடமிருந்து வேதனாதிகளைப் பெறுதல் வேண்டும்.

***உறுப்புரை 36***

இந்தப் பொருத்தனையின் கீழ் குழுவின் பணிகளைப் பயனுள்ள வகையில் நிறைவேற்றுவதற்கு அவசியமான பணியாட்தொகுதியினரையும், வசதிகளையும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

1. ஐக்கிய நாடுளின் செயலாளர் நாயகம் குழுவின் தொடக்கக் கூட்டத்தினை ஐக்கிய நாடுகளின் தலைமையலுவலத்தில் கூட்டுதல் வேண்டும்.

***உறுப்புரை 37***

2. அதன் தொடக்கக் கூட்டத்தின் பின்னர் குழுவானது, அதன் நடவடிக்கை முறை பற்றிய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக் கூடியவாறான அத்தகைய காலங்களில் கூடுதல் வேண்டும்.

3. வழமையாகக் குழுவானது, ஐக்கிய நாடுகளின் தலைமையலுவலகத்தில் அல்லது ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் கூடுதல் வேண்டும்.

***உறுப்புரை 38***

குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் தமது கடமைகளை மேற்கொள்ளுமுன்பு பகிரங்கமான குழுவின் முன்னர் தமது பணிகளைத் தாம் பாரபட்சமின்றியும் மனச்சாட்சிக்கு அமையவும் நிறைவேற்றுவரென்று பயபக்தியான விளம்பலொன்றைச் செய்தல் வேண்டும்.

***உறுப்புரை 39***

1. குழு தமது அலுவலர்களை இரண்டாண்டு காலத்திற்குத் தெரிவு செய்தல் வேண்டும். அவர்கள் மீண்டும் தெரிவுசெய்யப்படலாம்.

2. குழு அதன் சொந்த நடவடிக்கைமுறை பற்றிய விதிகளைத் தாபித்தல் வேண்டும். ஆனால் இவ்விதிகள்:

(அ) மற்றவற்றுக்கிடையில், பன்னிரண்டு உறுப்பினர்கள் கூட்ட நடப்பெண்ணாக அமைதல் வேண்டும் என்றும்

(ஆ) குழுவின் முடிவுகள் சமூகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும் பான்மை வாக்குகள் மூலம் செய்யப்படுதல் வேண்டும் என்றும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

***உறுப்புரை 40***

1. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், இதனை அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளுக்குப் பயன்தருகின்றவையும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டவையுமான நடவடிக்கைகள் மீதும் அவ்வுரிமைகளைத் துய்க்கையில் செய்யப்பட்ட முன்னேற்றத்தின் மீதும்:-

(அ) சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளுக்கான இந்தப் பொருத்தனை வலுவுக்கு வருவதிலிருந்து ஓராண்டிற்குள்:

(ஆ) அதன் பின்னர், குழு அவ்வாறு வேண்டும் போதெல்லாம், அறிக்கைளைச் சமர்ப்பிப்பதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கின்றனர்.

2. அறிக்கைகள் அனைத்தும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவர் அவற்றினைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்காகக் குழுவுக்கு அனுப்புதல் வேண்டும். அந்த அறிக்கைகள் இந்தப் பொருத்தனையில் தொழிற்படுத்துகையைப் பாதிக்கின்ற காரணிகளும் இடர்பாடுகளும் ஏதேனுமிருப்பின் அவற்றைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

3. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் அவர்களின் புலமைப் புலத்துள் அடங்கக்கூடியவாறான அத்தகைய பகுதிகளின் சம்பந்தப்பட்ட பிரதிகளைச் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

4. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளைக் குழு ஆராய்தல் வேண்டும். அது, அதன் அறிக்கைகளையும் நாடாம் கட்சிகளுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். குழு இக்கருத்துரைகளை இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிக்கைகளின் பிரதிகளுடன் சேர்த்துப் பொருளாதார, சமூகப் பேரவைக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

5. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள், இவ்வுறுப்புரையின் 4ஆம் பந்திக்கு இணங்கத் தயாரிக்கப்படக்கூடியவாறான கருத்துரைகள் எவற்றையும் குழுவின் அவதானிப்புக்குச் சமர்ப்பிக்கலாம்.

***உறுப்புரை 41.***

1. இந்தப் பொருத்தனையின் கீழ் பிறிதொரு நாடாம் கட்சி அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுகின்றதில்லை என ஒரு நாடாம் கட்சி கோருகின்றதென்று பொருள்படக் கடிதத் தொடர்புகளை ஏற்றுக் கவனிப்பதற்குக் குழுவின் தகுதியை அக்கட்சி அங்கீகரிக்கின்றதென நாடாம் கட்சியொன்று இந்த உறுப்புரையின் கீழ் எந்த நேரத்திலும் விளம்பலாம். இவ்வுறுப்புரையின் கீழ் குழுவின் தகுதியினைத் தாமாகவே அங்கீகரித்து விளம்பலொன்றைச் செய்த நாடாம் கட்சியொன்றினால் கடிதத் தொடர்புகள் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே அவை ஏற்றுக் கவனிக்கப்படும். கடிதத் தொடர்பானது அத்தகைய விளம்பலொன்றைச் செய்யாத நாடாம் கட்சியொன்று தெடர்பாதாயின், குழுவினால் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வுறுப்புரையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதத் தொடர்புகள் பின்வரும் நடவடிக்கை முறைக்கு இணங்கக் கையாளப்படுதல் வேண்டும்:-

(அ) இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சியொன்று பிறிதொரு நாடாம் கட்சி இப்பொருத்தனையின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கிறதில்லையெனக் கருதினால், அவ்விடயத்தினை, எழுத்திலான கடிதத்தொடர்பு மூலம் அந்த நாடாம் கட்சியின் கவனத்துக்குக் கொண்டு வரலாம். அக்கடிதம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் மூன்று மாதங்களுக்குள், அக்கடிதத்தைப் பெறுகின்ற நாடு, அக்கடிதத்தை அனுப்பிய நாட்டிற்கு விடயத்தைத் தெளிவுபடுத்தி ஒரு விளக்கத்தினை அல்லது வேறேதேனுமொரு கூற்றினை அளித்தல் வேண்டும். அக்கூற்று அவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுறாதுள்ள அல்லது கிடைக்கக் கூடியனவான

நடவடிக்கை முறைகளையும் உள்ளகப் பரிகாரங்களையும் பற்றிய குறிப்பீட்டினைச் சாத்தியமானதும் இயைபானதுமான அளவுக்குக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) கடிதத்தைப் பெற்றுக் கொள்ளுகின்ற நாட்டினால் தொடக்கக் கடிதத்தொடர்பு பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் ஆறு மாதங்களுக்குள் நாடாம் கட்சிகள் இரண்டும் திருப்தியுறும் வகையில் அக்கருமம் சரிப்படுத்தப்படாவிட்டால், இரண்டு நாடுகளுள் ஒரு நாடு, குழுவிற்கும் மற்றைய நாட்டிற்கும் அறிவித்தல் கொடுத்து, விடயத்தினைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) குழுவானது அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஒரு விடயத்தில், பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட சர்வதேசச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இயைய ஏலவே மேற்கொள்ளப்படுகின்ற உள்ளகப் பரிகாரங்கள் யாவும் நாடிப் பயன்படுத்தப்பட்டன என நிச்சயப்படுத்திய பின்னர் மட்டுமே அவ்விடயத்ததைக் கையாளுதல் வேண்டும். இப்பரிகாரங்களில் பிரயோகமானது நியாயமின்றி நீடிக்கப்பட்டால் இதுவே கடைப்பிடிக்கப்பட வேண்டுமானதல்ல.

(ஈ) குழுவானது இவ்வுறுப்புரையின் கீழ் கடிதத் தொடர்புகளைப் பரிசீலனை செய்யும்போது இரகசியமான கூட்டங்களை நடாத்துதல் வேண்டும்.

(உ)

(ஈ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இந்தப் பொருத்தனையில் ஏற்றங்கீகரிக்கப்பட்டவாறு, மனித உரிமைட்கும், அடிப்படைச் சுதந்திரங்கட்குமான மதிப்பின் அடிப்படையின் மீது அவ்விடயம் குறித்து நட்புறவானதொரு தீர்வுக்கு வரும் கருத்துடன் சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகட்குக் குழு தம்மாலியன்ற நற்பணிகளைக் கிடைக்கத்தக்கனவாகச் செய்தல்வேண்டும்.

(ஊ) குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எந்த விடயத்திலும், (ஈ) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளை இயைபான தகவலெதனையும் அளிப்பதற்காக வருமாறு அழைக்கலாம்.

(எ) (அ) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகள் அவ்விடயம் குழுவில் சீர்தூக்கிப்பார்க்கப்படும் போது தம் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் வாய்மொழிமூலமான அல்லது எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமானவையும் எழுத்திலானவையுமான சமர்ப்பணங்ளைச் செய்வதற்குமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஏ) (ஆ) என்னும் உட்பந்தியின் கீழ் அறிவித்தலொன்றைப் பெற்ற தேதிக்குப் பின் பன்னிரண்டு மாதங்களுக்குள் அறிக்கையொன்றைப் பின்வரும் சந்தர்ப்பங்களில் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(i) (உ) என்னும் உட்பந்தியின் நியதிகளுக்குட்பட்ட தீர்வொன்று பெறப்பட்டால் நிழ்வுகள் பற்றியதும் பெறப்பட்ட தீர்வுபற்றியதுமான சுருக்கமானதொரு கூற்றை மட்டும் கொண்டதான அவ்வறிக்கையைக் குழுவானது தயாரித்தல் வேண்டும்:

(ii) உ) என்னும் உட்பந்தியின் நியதிகளுக்குட்பட்ட தீர்வொன்று பெறப்படாவிட்டால், குழு அதன் அறிக்கையை நிகழ்வுகள் பற்றிய கூற்றினை மட்டுமே கொண்டதாக தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளால் செய்யப்பட்ட எழுத்திலான சமர்ப்பணங்களும் வாய்மொழி மூலமான சமர்ப்பணங்களின் பதிவேடும் அறிக்கையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விடயத்திலும் சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளுக்கு அறிக்கையானது அறிவிக்கப்படுதல் வேண்டும்.

2. இவ்வுறுப்புரையின் 1ஆம் பந்தியின் கீழ் இப்பொருத்தனைக்கான பத்து நாடாம் கட்சிகள் விளம்பல்களைச் செய்துள்ளபோது இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் வலுவுக்கு வருதல்வேண்டும். அத்தகைய விளம்பல்கள் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அவர் அதன் பிரதிகளை மற்றைய நாடாம் கட்சிகளுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். ஒரு விளம்பலானது செயலாளர் நாயகத்தின் அறிவிப்பு மூலம் எந்த நேரத்திலும் மீளப் பெறப்படலாம். அத்தகைய மீளப்பெறுகையானது ஏலவே அனுப்பப்பெற்ற கடிதத் தொடர்பின் பொருளாகவுள்ள எந்த விடயத்தின் பிரதிபயனுக்கும் பங்கம் விளைக்காதிருத்தல் வேண்டும்:

சம்பந்தப்பட்ட நாடாம் கட்சி புதிதாக விளம்பலொன்றைச் செய்தாலொழிய விளம்பலின் மீளப்பெறுகை பற்றிய அறிவிப்பானது செயலாளர் நாயகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் நாடாம் கட்சி எதனாலும் மேலும் கடிதத் தொடர்புகள் பெற்றுக்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

***உறுப்புரை 42***

(1) (அ) நாற்பத்தோராம் உறுப்புரைக்கு இணங்கக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயமொன்று, சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளின் திருப்திக்கேற்பத் தீர்க்கப்படாதுவிடின், சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளின் முன்னைய சம்மதத்துடன் குழு ஒரு நிலையில் இணக்க ஆணைக் குழுவொன்றினை நியமிக்கலாம். இது இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும். இந்தப் பொருத்தனைக்கு மதிப்புக் கொடுக்கும் அடிப்படையில் விடயத்திற்குச் சுமுகமான தீர்வுகாணும் கருத்துடன் சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளுக்குக் குழுவின் நற்பணிகள் கிடைக்கத் தக்கனவாகச் செய்தல் வேண்டும்.

(ஆ) சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகள் ஏற்றுக கொள்ளக்கூடியோரான ஐந்து ஆட்களை ஆணைக்குழு கொண்டிருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகள் ஆணைக்குழுவின் அமைப்பு முழுவதிலும் அல்லது ஒரு பகுதியில் மூன்று மாதங்களுக்குள் உடன்பாடடைய முடியாதுவிடின், ஆணைக்குழுவின் எந்த உறுப்பினர்கள் பற்றி உடன்பாடு அடையப்படவில்லையோ அந்த உறுப்பினர்கள் குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் இரகசிய வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

2. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தமது சொந்தத் தகுதியின்படி சேவை செய்தல் வேண்டும். அவர்கள் சம்பந்தப்பட்ட நாடாம் கட்சியின் சுதேசிகளாகவோ, இந்தப் பொருத்தனைக்கான கட்சியில்லாத சுதேசிகளாகவோ, 41ஆம் உறுப்புரையின் கீழ் விளம்பலொன்றைச் செய்யாத ஒரு நாடாம் கட்சியைச் சேர்ந்த சுதேசிகளாகவோ இருத்தலாகாது.

3. ஆணைக்குழுவானது அதன் சொந்தத் தவிசாளரைத் தெரிவு செய்தல் வேண்டும் என்பதுடன், அதன் சொந்த நடவடிக்கை முறை பற்றிய விதிகளைக் கடைப்பிடித்தலும் வேண்டும்.

4. ஆணைக்குழுவின் அமர்வுகள் பொதுவாக ஐக்கிய நாடுகள் தலைமையலுவலகத்தில் அல்லது ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலத்தில் நடாத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயத்தினதும் சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளினதும் கலந்தாலோசனையுடன் ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தயை பிற வசதியான இடங்களில் நடாத்தப்படலாம்.

5. முப்பத்தாறாம் உறுப்புரைக்கு இணங்க ஏற்பாடு செய்யப்பட்ட செயலகமும் இவ்வுறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களுக்குச் சேவை செய்தல் வேண்டும்.

6. குழுவினால் பெறப்பட்டு ஒப்பு நோக்கப்பட்ட தகவல் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கத்தக்கதாதல் வேண்டும். ஆணைக்குழு வேறேதேனும் இயைபான தகவலை வழங்குவதற்கெனச் சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளைக் கோரலாம்.

7. ஆணைக்குழு விடயத்தினை முழுமையாகச் சீர்தூக்கிப்பார்த்த பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குப் பிந்தாத எந்தச் சமயத்திலும், குழுவின் தவிசாளருக்கும் சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளுக்கு அறிவிப்பதற்காக அறிக்கையொன்றைப் பின்வருமாறு சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவானது பன்னிரண்டு மாதங்களுக்குள் அவ்விடயத்தைச் சீர்தூக்கிப் பார்த்து முடிக்க இயலாதுவிட்டால், அந்த விடயம் பற்றிச் சீர்தூக்கிப்பார்த்து அதன் நிலைமை பற்றிய சுருக்கமான கூற்றினைக் கொண்டதாக ஆணைக்குழுவின் அறிக்கை அமைதல் வேண்டும்.

(ஆ) இந்தப் பொருத்தனையில் ஏற்றங்கீகரிக்கப்பட்டவாறு மனித உரிமைகட்கான மதிப்பின் அடிப்படையில் அவ்விடயத்திற்குச் சுமுகமான தீர்வொன்று பெறப்பட்டிருப்பின், நிகழ்வுகளினதும் பெறப்பட்ட தீர்வினதும் சுருக்கமான கூற்றினைக் கொண்டதாக ஆணைக்குழுவின் அறிக்கை அமைதல் வேண்டும்.

(இ) (ஆ) என்னும் உட்பந்தியின் நியதிகளுக்குட்பட்ட தீர்வொன்று பெறப்படாவிடின், சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகட்கிடையிலான பிரச்சினைகட்கு இயைபான நிகழ்வுகள் பற்றிய கேள்விகள் அனைத்திலும்

குழுவின் முன்னெடுப்புகளையும் அவ்விடயம் பற்றியதொரு சுமுகமான தீர்விற்கான சாத்தியக் கூறுகள் பற்றிய அதன் கருத்துக்களையும் ஆணைக்குழுவின் அறிக்கை கொண்டிருத்தல் வேண்டும். இந்த அறிக்கையானது சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளாற் செய்யப்பட்ட எழுத்திலான சமர்ப்பணங்களையும், வாய்மொழி மூலமான சமர்ப்பணங்களின் பதிவேட்டையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) (இ) என்னும் உட்பந்தியின் கீழ் ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகள் அவ்வறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் மூன்று மாதங்களுக்குள், ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள விடயங்களை ஏற்றுக்கொள்ளுகிறார்களா இல்லையா என்பது பற்றிக் குழுவின் தவிசாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

8. இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் 41ஆம் உறுப்புரையின் கீழான குழுவின் பொறுப்புடைமைகளுக்குப் பங்கமில்லாதனவாதல் வேண்டும்.

9. சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகள் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு இணங்க ஆணைக்குழு உறுப்பினரின் செலவினங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

10. இவ்வுறுப்புரையின் 9ஆம் பந்திக்கு இணங்க, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் சம்பந்தப்பட்ட நாடாம் கட்சிகளினால் திருப்பிக் கொடுக்கப்படுமுன்னர், அவசியமாயின் ஆணைக்குழு உறுப்பினர்களின் செலவினங்களைச் செலுத்துவதற்குத் தத்துவமளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

***உறுப்புரை 43***

குழுவினதும் 42ஆம் உறுப்புரையின் கீழ் நியமிப்படக்கூடியவாறான நிலையில் இணக்க ஆணைக்குழுக்களினதும் உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகளின் சிறப்புரிமைகள், பாதிப்பின்மைகள் பற்றிய சமவாயத்தின் இயைபான பரிவுகளில் விதிக்கப்பட்டவாறு ஐக்கிய நாடுகளுக்குத் தூதுவராகச் செல்லும் நிபுணர்களின் வசதிகள், சிறப்புரிமைகள், பாதிப்பின்மைகள் என்பனவற்றிற்கு உரித்துடையராதல் வேண்டும்.

*உறுப்புரை 44*

இந்தப் பொருத்தனையினைத் தொழிற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மனித உரிமைகள் துறையில் அமைப்பகச் சாதனங்களினாலும் அல்லது அமைப்பகச் சாதனங்களின் கீழும் ஐக்கிய நாடுகளினதும் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களினதும் சமவாயத்தினாலும் அல்லது அதன் கீழும் விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறைகட்குப் பங்கமின்றி ஏற்புடையனவாதல் வேண்டும். அத்துடன் இப்பொருத்தனைக்கான நாடாம் கட்சிகள் அவற்றிற்கிடையே வலுவிலிருக்கின்ற பொதுவான அல்லது விசேடமான சர்வதேச உடன்படிக்கைகளுக்கிணங்கப் பிணக்கொன்றை இயக்குவதற்காக ஏனைய நடவடிக்கைமுறைகளுக்கு நாட்டம் கொள்வதையும் இவ்வேற்பாடுகள் தடை செய்தலாகாது.

*உறுப்புரை 45*

அக்குழு, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கு, அதன் செயற்பாடுகள் பற்றிய ஆண்டறிக்கையொன்றினைப் பொருளாதார, சமூகப் பேரவையினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பாகம்V

*உறுப்புரை 46*

இந்தப் பொருத்தனையிலுள்ளதெதுவும், ஐக்கிய நாடுகள் பட்டயத்தினதும் இப்பொருத்தனையில் கையாளப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளினதும் இப்பொருத்தனையில் கையாளப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளினதும் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களினதும் பல்வகை அமைப்பகங்களின் அந்தந்தப் பொறுப்புடைமைகளை வரையறுக்கின்றனவான சிறப்பார்ந்த முகவர் நிலையங்களினதும் அமைப்பு முறைகளினதும் ஏற்பாடுகளைத் தகர்க்கின்றதெனப் பொருள் கோடப்படுதலாகாது:

*உறுப்புரை 47*

இந்தப் பொருத்தனையிலுள்ளதெதுவும், மக்கள் அனைவரும் தங்கள் செல்வத்தையும் வளங்களையும் பூரணமாவும் சுயமாகவும் துய்ப்பதற்கும்

பயன்படுத்துவதற்குமான உள்ளார்ந்த உரிமையைத் தகர்க்கின்றதாகப் பொருள் கோடப்படுதலாகாது.

### *உறுப்புரை 48*

1. இந்தப் பொருத்தனை, ஐக்கிய நாடுகளின் நாடாம் உறுப்பினர் எவரினாலும், அல்லது அதன் சிறப்பார்ந்த முகவர் நிலையங்களின் உறுப்பினர் எவரினாலும், சர்வதேச நீதிமன்ற நியதிச்சட்டத்திற்கான நாடாம் கட்சி எதனாலும், அத்துடன் இப்பொருத்தனைக்கு ஒரு கட்சியாகுமாறு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் வரவழைக்கப்பட்ட வேறு நாட்டினாலும் கையொப்பமிடப்படக் கூடியதாகும்.

2. இந்தப் பொருத்தனை பின்னுறுதிப்படுத்தப்படுவதற்குட்பட்டது. பின்னுறுதிப்படுத்தற் சாதனங்கள் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

3. இந்தப் பொருத்தனையானது, இவ்வுறுப்புரையின் ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எந்த நாட்டினாலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருத்தல்வேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளுகையானது ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் ஏற்றுக்கொள்ளற் சாதனமொன்றினை ஒப்படைப்பதன் மூலம் பயனுறுத்தப்படுதல் வேண்டும்.

5. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம், இப்பொருத்தனையில் கையொப்பமிட்ட அல்லதுஇதனை ஏற்றுக்கொண்ட நாடுகள் அனைத்திற்கும் பின்னுறுதிப்படுத்தற் சாதனம் அல்லது ஏற்றுக்கொள்ளற் சாதனம் ஒவ்வொன்றும் ஒப்படைக்கப்பட்டமை பற்றி அறிவித்தல் வேண்டும்.

### *உறுப்புரை 49*

1. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் முப்பத்தைந்தாவது பின்னுறுதிப்படுத்தற் சாதனத்தினை அல்லது ஏற்றுக்கொள்ளற் சாதனத்தினை ஒப்படைத்த தேதியிலிருந்து மூன்று மாதங்களின் பின்னர், இந்தப் பொருத்தனை வலுவுக்கு வருதல் வேண்டும்.

2. முப்பத்தைந்தாவது பின்னுறுதிப்படுத்தற் சாதனத்தினை அல்லது ஏற்றுக்கொள்ளற் சாதனத்தினை ஒப்படைத்த தேதிக்குப் பின்னர் இப்பொருத்தனையை பின்னுறுதிப்படுத்துகின்ற அல்லது அதனை ஏற்றுக்கொள்ளுகின்ற நாடு ஒவ்வொன்றிற்கும், இந்தப் பொருத்தனை அதன் சொந்தப் பின்னுறுதிப்படுத்தற் சாதனத்தை அல்லது ஏற்றுக்கொள்ளற் சாதனத்தை ஒப்படைத்த தேதியிலிருந்து மூன்று மாதங்களின் பின்னர் செயலுக்குவருதல் வேண்டும்.

### *உறுப்புரை 50*

இந்தப் பொருத்தனையின் ஏற்பாடுகள் ஒன்றிய அரசுகளின் எல்லாப் பாகங்களுக்கும் எவ்வித வரையறைகளோ விதிவிலக்குகளோ இல்லாமல் நீடித்தல் வேண்டும்.

### *உறுப்புரை 51*

1. இந்தப் பொருத்தனைக்கான நாடாம் கட்சி எதுவும், திருத்த மொன்றினை முன்மொழிந்து அதனை ஐக்கியநாடுகளின் செயலாளர் நாயகத்திடம் கோப்பிடலாம். ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் முன் மொழியப்பட்ட திருத்தங்கள் எவற்றையும், இப்பொருத்தனைக்கான நாடாம் கட்சிகளுக்கு, அம்முன்மொழிவுகளைச் சீர்தூக்கிப்பார்த்து வாக்களிக்கும் நோக்கத்திற்காக அக்கட்சிகள் நாடாம் கட்சிகளின் மாநாடொன்றினைக் கூட்ட விரும்புகின்றனவா என்பதைத் தமக்கு அறிவிக்கும்படியான வேண்டுதலொன்றுடன் சேர்த்து அதன் மேல் அனுப்பிவைத்தல் வேண்டும். ஆகக் குறைந்தது மூன்றிலிரண்டு நாடாம் கட்சிகள் அத்தகைய மாநாடொன்றைக்கூட்டுவதற்குச் சாதகமாக இருக்குமிடத்துச் செயலாளர் நாயகம், ஐக்கிய நாடுகளின் ஆதரவின் கீழ் மாநாடொன்றைக் கூட்டுதல் வேண்டும். சமூகமளித்து வாக்களிக்கும் பெரும்பான்மை நாடாம் கட்சிகளால் மாநாட்டில் கடைப்பிடிக்கப்பட்ட திருத்தம் எதுவும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கு அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2. திருத்தங்கள் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, இந்தப் பொருத்தனையில் நாடாம் கட்சிகளின் மூன்றிலிரண்டு பெரும்பான்மைக் கட்சிகளால் அவ்வவற்றின் அரசியலமைப்பு

நடபடிகளுக்கிணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பே வலுவுக்கு வருதல் வேண்டும்.

3. திருத்தங்கள் வலுவுக்கு வரும்போது, அத்திருத்தங்கள், எந்த நாடாம் கட்சிகள் அத்திருத்தங்களை ஏற்றுக்கொண்டனவோ அந்த நாடாம் கட்சிகளையும், இந்தப் பொருத்தனையின் ஏற்பாடுகளினால் பிணிக்கப்படவுள்ள பிறநாடாம் கட்சிகளையும், முன்னயை திருத்தம் எதனையும் ஏற்றுக்கொண்ட அந்த நாடாம் கட்சிகளையும் பிணிப்பனவாதல் வேண்டும்.

***உறுப்புரை 52***

நாற்பத்தெட்டாம் உறுப்புரையின் 5ஆம் பந்தியில் செய்யப்பட்ட அறிவிப்பினைப் பொருட்படுத்தாது, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அதே உறுப்புரையின் ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நாடுகள் யாவற்றிற்கும் பின்வரும் விவரங்களை அறிவித்தல் வேண்டும்:-

(அ) 48ஆம் உறுப்புரையின் கீழான கையொப்பங்களும், பின்னுறுதிப்படுத்தல்களும் ஏற்றுக்கொள்ளல்களும்:

(ஆ) நாற்பத்தொன்பதாம் உறுப்புரையின் கீழ் இந்தப் பொருத்தனை வலுவுக்கு வரும் தேதியும், ஐம்பத்தோராம் உறுப்புரையின் கீழ் செய்யப்பட்ட திருத்தம் எதுவும் வலுவுக்கு வரும் தேதியும்.

***உறுப்புரை 53***

1. இந்தப் பொருத்தனை (அதன் சீன, ஆங்கில, பிரான்சிய, ரஸ்ய, ஸ்பானிய உரைகள் உண்மையானவையாக இருக்கின்றன) ஐக்கிய நாடுகளின் சுவடிக் கூடத்தில் இடப்படுதல் வேண்டும்.

2. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் இந்தப் பொருத்தனையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை 48ஆம் உறுப்புரையிற் குறிப்பீடு செய்யப்பட்ட நாடாம் கட்சிகள் அனைத்திற்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

## ஐ. நாவின் சிறுவர் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் ~ 1991

1. 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் சிறுவர்கள் என கருதப்படுவர்.

2. அரசு எந்தத் தடையுமின்றி சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் சிறுவர்களுக்கென உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3. சிறுவர் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளின் போதும், சிறுவரின் அதியுயர் நன்மை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

4. இவ் உரிமைகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

5. சிறுவர்களின் திறமைகளை ஊக்குவிப்பதன் காரணமாக பெற்றோரின் உரிமைகளுக்கும் மதிப்பளித்தல் வேண்டும்.

6. சிறுவரின் இருப்பு மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. பிறப்பிலிருந்தே சிறுவருக்கு பெயர் இடும் உரிமைகள் வழங்குவது அவர்களது உரிமையாகும்.

8. சிறுவரின் அடையாளம், அதாவது பெயர், இனம், குடும்ப உறவுகள் பாதுகாக்கப்படல் வேண்டும்.

9. பெற்றோருடன் வாழும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். குடும்பத்தை ஒன்றிணைப்பது தொடர்பாக தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

10. சட்டவிரோதமாக பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல், அங்கு தங்க வைத்திருத்தல் ஆகியவற்றை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

11. தமது கருத்துக்களை தெரிவிக்கவும், கருத்தை கருத்திலெடுக்கவும், தகவல்களை பெறவும் சிந்தனை, மனச்சாட்சி மற்றும் மதங்களை பின்பற்றவும், அமைப்புகளில் இணையவும் பிள்ளைகளுக்கு உரிமையுண்டு.

12. சிறுவர்களின் தனிப்பட்ட விடயங்களில் தலையிடுவதனை தவிர்க்க வேண்டும்.

13. சிறுவரின் ஒழுக்கம், கல்வி, கலாசாரம் மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான தகவல்களை வழங்குதல், தீமையான செய்திகளிலிருந்து பாதுகாத்தல் வேண்டும்.

14. சிறுவர்களை வளர்த்தெடுக்கும் பெற்றோர்களுக்குரிய அடிப்படை பொறுப்புகளை நிறைவேற்ற அவர்களுக்கு உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

15. சிறுவர்களை அனைத்து வித, துஸ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்தல் வேண்டும். குடும்ப சூழல் கிடைக்கப்பெறாத பிள்ளைகள் தொடர்பாக விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். சிறுவர்களை தத்தெடுத்தல், அவர்களின் நன்மைக்காக மட்டுமேயாக இருக்க வேண்டும். பராமரிப்பு விடுதிகளில் தங்கியிருக்கும் சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். ஊனமுற்ற சிறுவர்களுக்கு தேவையான விசேட பாதுகாப்பு, கல்வி மற்றும் பயிற்சிகள் கிடைக்கப்பெற வழிசெய்ய வேண்டும்.

16. தேவையான போசாக்கு, பாதுகாப்பு, விடுதி வசதிகள், சிறப்பான வாழ்க்கை நிலை மற்றும் ஓய்வு, இன்பமுற சிறுவர்களுக்கு உரிமையுண்டு.

17. கல்வி தொடர்பாக சிறுவர்களுக்கு இருக்கும் உரிமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் சிறுவர்கள் பூரண அபிவிருத்தி பெறும் வகையிலான கல்வியை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

18. சிறுபான்மையின சிறுவர்களின் கலாசாரம், மத மற்றும் மொழி உரிமைகள் என்பனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

19. உழைப்பு, போதை வஸ்து பாவனை, பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், கடத்தப்படுதல், விற்கப்படுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பை பெறும் உரிமை சிறுவர்களுக்கு உண்டு.

20. சித்திரவதைகளிலிருந்து சுதந்திரத்தை உரியதற்றதாக்குவதிலிருந்து பாதுகாப்பு பெறுதலும், ஆயுத போராட்டங்களில் பங்கேற்பதும் துன்பப்பட்ட சிறுவர்கள் புனருத்தாரணம் செய்யவும் அவர்களுக்கு உரிமை உண்டு.

21. சிறுவர்கள் தொடர்பான நியாயங்களை மேற்கொள்ளுதல் சிறுவர் நலன்களுக்கு உரியதானதாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

Printed By : P. & P. Associates